ஸஞ்சிகை 25.

# ஸ்ரீவாணீ விலாஸினீ.

பிலவங்கஹூ

ஐப்பசிமீ

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1907.

*Copyright Registered.*

## Chowkhamba Sanskrit Series.

| | | | |
|---|---|---|---|
| भाट्टचिन्तामणिः | 2 | 8 | 0 |
| करणप्रकाशः | 1 | 6 | 0 |
| शिवस्तोत्रावली | 2 | 8 | 0 |
| न्यायरत्नमाला | 2 | 8 | 0 |
| आख्यातचन्द्रिका | 1 | 6 | 0 |
| स्याद्वादमञ्जरी | 2 | 8 | 0 |
| अद्वैतसिद्धिसिद्धान्तसारः | 3 | 10 | 0 |
| विधिरसायनम् | 2 | 8 | 0 |
| श्रीलक्ष्मीसहस्रम् | 8 | 12 | 0 |
| मीमांसाश्लोकवार्तिकम् | 11 | 0 | 0 |
| तत्वत्रयम् | 1 | 6 | 0 |
| षट् दर्शनसमुच्चयः | 1 | 6 | 0 |
| न्यायमकरन्दः | 4 | 12 | 0 |
| शुद्धाद्वैतमार्तण्डः | 1 | 6 | 0 |
| मीमांसाबालप्रकाशः | 2 | 8 | 0 |
| सिद्धित्रयम् | 1 | 6 | 0 |

## Benares Sanskrit Series.

| | | | |
|---|---|---|---|
| पातञ्जलदर्शनम् | 1 | 6 | 0 |
| भेदधिक्कारः, उपक्रमपराक्रमसहितः | 2 | 8 | 0 |
| विवरणोपन्यासः | 2 | 8 | 0 |
| वेदान्तदीपः | 3 | 10 | 0 |
| दैवज्ञकामधेनुः | 3 | 10 | 0 |
| बृहद्वैयाकरणभूषणम् | 4 | 12 | 0 |
| तत्त्वदीपनम् | 8 | 12 | 0 |
| टुप्टीका | 4 | 12 | 0 |

*N.B.*—The books of the above series are bound in Calico and are gilt lettered; the prices are exclusive of Postage and other charges.

*Apply to* THE MANAGER,
**Bookselling Department,**
SRI VANI VILAS PRESS, ***Srirangam.***

WORKS BY

# M. C. Satakopachariar

**SANSKRIT PANDIT,**

**SRIRANGAM.**

1. **Samasadipika.** A treatise on Sanskrit compounds with explanation in English, very useful to Students of the High School Department. .. .. .. 0 2 0

2. **Sbdaratn mala.** A book on Sanskrit Declensions, with conjugations of certain important verbs (IV Edition, revised and enlarged) Approved by the Director of Public Instruction as a text-book for Lower Secondary classes. .. .. .. 0 3 0

3. **Harshacharitasara.** (II Edition. Revised and enlarged) 0 4 0

**Niroshthyaramayanasangraha.** Written in beautiful stanzas of various metres together with a Dandaka. The chief feature of this book is that none of the labials, *viz.* उ, ऊ, ओ, औ, प, फ, ब, भ, म, व and ̄ is used anywhere in the book .. .. 0 2 0

5. **Raghuvamsa.** (Cantos IX-XI) with an easy commentary, Translation and Notes .. .. .. 0 6 0

6. do (Cantos XII-XVII) do .. 0 8 0

7. **Kumarasambhava.** (Cantos I-V) do .. 0 8 0

8. **Meghaduta.** (Complete) do .. 0 8 0

9. **Nagananda** (Complete) do .. 1 0 0

10. **Nitisataka.** (of Bhartrihari) do .. 0 8 0

11. **Balakanda.** (of Bhojachampu) do .. 0 8 0

12. **Malavikagnimitra.** (complete) do .. 0 12 0

13. **Aryasataka.** .. .. .. 0 1 0

14. காதம்பரீஸாரஸங்கிரகம். (A beautiful story in Tamil) 0 2 0

*Apply to:—*

THE MANAGER,

*Bookselling Department*

**SRI VANI VILAS PRESS,**

Srirangam.

## WORKS BY A. GOVINDÂCHÂRYA, C. E., F. T. S.

(Veda-Griham) MYSORE.

1. **The Bhagavad-Gîta,** with Srî-Ràmànujà's Commentary, translated into English. 600 Pages, Demy. 8vo. Cloth Rs 6; Paper Rs 5–0–0.

*Highly spoken of by Prof. Max Muller, Dr. Pascal of France and others.*

2. **The Holy Lives of the Âzhvârs** or Drâvida Saints, with Table of the 108 Holy Shrines and the Hierarchic table, 303 Pages, Crown 8vo. in English Rs 1–8–0

*Sri Yogi Pârthasarathi Aiyangàr B.A., B.L., speaks of this work as:—"My learned and pious friend A. Govindâchârya's invaluable work."*

3. **The Divine wisdom of The Drâvida ai nts,** 255 Pages, Demy 8vo. in English ... ... Rs 2–0–0.

*'In this, he digs into the rich mine of Southern Indian Wisdom, and brings to the surface many rare gems hitherto unknown . . * * * The work is written by a Bhakta for Bhaktas, and such will find in it pleasant and helpful reading" [Central Hindu College] Magazine.*

4. **Three Lectures on Inspiration, Intuition and Ecstasy.** 214 Pages, Crown 8vo. in English

Part I; Occidental.
Part II; Oriental.
Part III; Theosophical. } Per Set: Rs 1–2–0.

*For golden opinions, See the Theosophist, the Siddhânta Dipika &c.*

5. **The rationale of Image Worship,** by Yogi S. Pârthasârathi Aiyangar in English ... Rs 0–6–0

6 **Inaugural address on Theosophy** in English Rs 0–1–0

*For the above, apply to*

THE MANAGER,
Bookselling Department,
Sri Vani Vilas Press,
Srirangam.

# Law Examination Manual Series.

## By T. R. DESAI, B.A., L.L.B.,

Hgh Court Vakil, BOMBAY.

***Latest editions: Case Law up to date with facts of typical cases; very cheap.***

1. **Law of Contract.** To be read with and helps to revise, Cunningham and Anson .. .. .. Rs. 3—0—0.
2. **Principles of Equity,** with English and Indian Law of Mortgage, Trusts and Specific Relief Act and the Transfer of Property Act. .. .. .. .. Rs. 3—0—0.
3. **Law of Torts.** (Parekh) Companion reader to Pollock's treatise on Torts, with 125 typical problems .. Rs. 2—0—0.
4. **Law of Limitation,** with the whole text, Commentary and 100 Examination Questions and Answers; Useful to Practitioners also. .. .. .. .. Rs. 3—8—0.
5. **Law of Registration, Court fees and Stamps;** No reported cases are omitted; Important ones are marked Rs. 3—0—0.
6. **The Criminal Procedure Code.** An analytical Commentary, L.L.B., Examination Questions and Answers and a brief summary of the Code; Useful both for students and practitioners. Rs. 3—8—0
7. **The Indian Penal Code Manual.** A catechetical Commentary; typical cases selected as illustrations under the different offences; Questions (with answers) set at the L.L.B., High Court and District Pleader's Examinations during the last 15 years numbering over 150 are given in the appendix. Elements of important offences distinctly given. .. .. .. .. .. .. Rs. 3—0—0.
8. **The Civil Procedure Code Manual.** The same plan as the Indian Penal Code Manual. The only manual on the subject. .. .. .. .. .. Rs. 3—0—0.
9. **The Indian Succession Act.** Hindu Will's Act; Parsi Succession Act; Registration Act; Easements Act; Negotiable Instruments Act: Deccan Agriculturist's Relief Act; With the University Examination Questions on each of these Acts and also on Mahomedan Law from 1891—1905. .. .. .. .. .. Rs. 2—8—0.
10. **Hindu Law.** Second Edition. Entirely re-written. Contains 430 pages. BANERJI J. "Very useful manual." GOSH J. Very useful to Students. *Advocate of India.* "The best analysis of Mayne's Hindu Law." 3—8—0.

*For copies of the above books apply to,*

**The Manager,**

BOOK-SELLING DEPARTMENT.

***Sri Vani Vilas Press,***

**SRIRANGAM.**

# தமிழ் புத்தகங்கள்.

ஸ்ரீ இராமாயணஸாரஸங்கிரகம். R. வேதாந்தசாரியார் இயற்றியது. இது சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் மிக்க உபயோகமானது. மிகவும் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. விலை 100க்கு ரூ. 5. பிரதி 1க்கு .. 0 1

"பிராசீன் தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்," (Ancient Ideals in Modern Life.) அந்நிபெஸண்டேஅம்மையார் ஆங்கிலபாஷையிற் செய்த நான்கு உபந்யாஸங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு. 187 பக்கங்களையுடைய இப்பெருமை வாய்ந்த புத்தகத்தைத் தமிழ்நாட்டார் ஒவ்வொருவரும் வாங்கித் தாமும்படித்துத் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் படித்துக்காட்டினல் நம் நாட்டுக்கு உண்டாகும் நன்மைக்கு அளவில்லை. இதிற்சொல்லப்பட்ட ஸ்திரீ தர்மங்களைப் பெண்கள் ஒவ்வொருவரும் அறிவது அவசியம். 0 6

"ஸநாதன தர்மம்." (Advanced Text Book) காசிப்பிரதான ஹிந்து வித்தியா சாலை சபையாரால் ஆங்கிலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஹிந்துசமய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. 458 பக்கங்கள் கொண்ட இவ்வருமையான நூலில் ஆரியரது தர்மங்கள் எல்லாம் மிகவும் சுருக்கமாயும், அழகாயும் தொகுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. நம் மதக்கோட்பாடுகளையும் சன்மார்க்கங்களையும் சுருக்கமாய்ப் பேசுகிற அரிய நூல் இதனினும் காண்பது அரிது. 1 0

சஞ்சீவிகிரி முதற்பாகம். இது செஞ்சிக்கோட்டையை அரசுபுரிந்த வேந்தர்களின் சரித்திரத்தை மிகவும் விளக்கமாய்த் தெரிவிக்கக்கூடியது. இதில்தேசிங்குராஜன் உண்மைச்சரித்திரமுழுவதும் நிரம்பவும்தெளிவாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. 0 8

தேகதத்துவசாஸ்திரம். தேகதத்துவ சாஸ்திரம் எனும் உடற்கூறு லக்கணம். இங்கிலீஷில் பிஸியாலஜி எனும் சாஸ்திரத்தைத் தமிழில் புதிதாய் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதில், இரஸம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், இவைகளாய தேக தாதுக்களைப்பற்றியும் மூலாதாரம் (குதம்) சுவாதிட்டாணம் (குய்யம்) மணிபூரகம் (நாபி) அனாகதம் (இதயம்) விசுத்தி (அடிநா) ஆஞ்சை (நெற்றி) ஆய ஆறு ஆதாரங்களைப்பற்றியும் இன்னும் பற்பல தேக

சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் விரிவாயெடுத் துரைக்கப்பட்டிருக்கின்றது. இது சென்னைப்பட்டணம் ஹைகோர்ட்டு வக்கீல் எஸ். எஸ். வேங்கடரமணஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் இயற்றப்பட்டது 2 8

தபாற்கூலி பாகிங்கு சார்ஜ் முதலிய வேறு.

**தமிழ் சட்ட புஸ்தகங்கள்.** இந்தியன் பீனல் கோட், இந்து தேசத்து சாக்ஷி சட்டம் முதலிய அடங்கின நீதி விவாத மஞ்சரி எனும் தமிழ்சட்ட புஸ்தகம் 1-ம் பாகம், வியாக்கியானம் ஹைகோர்ட்டு தீர்மானங்களுடன் ஒரு செக்ஷனுங்கூடவிடாமல் அச்சிட்டுள்ளது 2 8

**வியாபாரநீதி.** சித்தூர் சுப்பிரமணிய அய்யர் B.A., L.T., இது மிக்க உபயோகமுள்ள கட்டுரைகள் போதிய நியாயங்கள் மேற்கோள்கள் அடக்கிச் சிறுர்களுக்கு மிக்க நன்னெறி யூட்டத்தக்க நூல். 0 8

**காங்க்ரெஸ் மகாசபை.** அ. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள், B.A., காங்க்ரெஸ் எனப்பெயர் வழங்கும் நம் மகா நாட்டைப் பற்றியது. 0 4

**இராதாராணி.** தி. அ. சாமிநாதய்யர். 0 2

**ஹிரண்மயிசரித்திரம்** எனும் யுகளாங்குளியகம். தி. அ. சாமிநாதய்யர் இவ்விரண்டும் வங்காளத்திற் பிரசித்திபெற்ற பங்கின் சந்திர சட்டோபாத்தியாயரது மூலக்கிரந்தத்தின் மொழிபெயர்ப்பு. 0 2

**வித்யாரண்ய நகரம்.** ஒரு சரித்திர விநோதகதை. கு. ரா. ஸ்ரீநிவாஸய்யங்கார் B.A. 0 8

**ப்ரிதுலே.** ஓர் உழவன் மகள். இவ்விரண்டும் விஜயநகர ஸம்ஸ்தானத்தைப்பற்றிய சரித்திர விநோதக் கதைகள். 0 8

**அநுமான்ஸிங்.** பி. ஏ. பிரணதார்த்திஹரசிவனர் B.A., L.T. இது ஆங்கிலத்தில் உள்ள கானன்டாயில் அவர்களால் இயற்றப்பட்ட ஷர்லாக்ஹோம்ஸ் கதைகளையொப்ப துப்பறியும் கதைகளடங்கியது. 0 12

**போஜசரித்திரம்.** ஒரு புதிய தமிழ் நாடகம். டி. எஸ். நாராயண சாஸ்திரியார் B.A, B.L 1 4

**மஹாதேவன்.** ஒரு தமிழ்க்கதை. 0 6

**காவடிச்சிந்து.** 0 2

ஸ்ரீராமசந்திரா. அன்னிபீஸெண்டு அம்மாள் காலேஜில் பிரசங்கித்ததின் மொழிபெயர்ப்பு. 0 12

விவேகசந்திரிகை. A collection of Puranic tories illustrative of Morals. 0 8

**Action Songs, Songs on Object Lessons and Kindergarten Stories in Tamil** by C. K. Narayanaswami Iyer, Head Master, Government Girls School, Madura. Second Edition. Revised and Enlarged. Price 0 6

*Postage Extra.*

---

**University of Madras: First in Arts Examination** Question papers on the English language for the past 35 years, 1871—1906 As. 0 4 0

**Answers to the above** „ 0 6 0

*Postage Extra.*

*No. 4 Sri Vani Vilas Sanskrit Series.*

# Yadavabhyudaya.

**The famous Kavya of VEDANTA DESIKA.**

With the exhaustive and masterly commentary of the renowned **Appaya Dikshita.**

Both the text and the commentary are very carefully edited in consultation with several Mss.

The first Volume containing the first four Sargas is ready for sale D. Cr. 16mo. Cloth Gilt. Price **Rs. 1-8.**

The book is illustrated with suitable half-tone portraits and contains the Life of Sri Vedanta Desika by A. V. Gopalachariar, M.A., B.L.,

As only a limited number of copies are printed, those desirous of securing copies should order at onee.

The remaining Sargas also will be issued in 5 more Volumes of 4 Sargas each.

## University of Madras.

***Sanskrti Text*** for the first in Arts of Examination of 1908. **Complete. Price Rs. 4—0—0.** *Postage Extra.*

*For copies apply to,*

THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS, *SRIRANGAM.*

# விஷயங்கள்.

1. ஸ்ரீராமாநுஜ சரிதம். ஸ்ரீ. திருமலைதாதாசாரியர். 1

2. கமலினீ கலஹம்ஸம் குப்புசாமி ஐயர். 17

3. ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர், கெ. ஸி. ஐ. இ. (படத்துடன் கூடியது.) அன்பில் ஸ்ரீ வெங்கடாசாரியார். 30

4. அத்தையம்மாள், அன்னபூரணி. ஸ்ரீ சைவர். 38

5. அழகு. சருக்கை இராமசாமி ஐயங்கார், பி. ஏ. 62

6. கிறிஸ்துபோன்ற ஒழுக்கமுறை நூல். ஆத்மஞாதன். 70

7. தென்னாட்டு மறவர்கள். சீ. சீதாபதி ஐயர். பி. ஏ. 77

8. சென்னைக் கல்விப்பொருட்காட்சி. (படத்துடன் கூடியது.) டி. சி. வெங்கட்ரமண ஐயர். 81

9. சிறுவர்க்கான பக்கங்கள். 91

## TWO ANNAS LIBRARY

OF

## SANSKRIT STOTRAS.

1. **Soundarya Lahari** by
   Sri Sankara Bhagavatpadacharya.
2. **Sivananda Lahari** by
   Sri Sankara Bhagavatpadacharya.
3. **Akhyasashti and Sivabhaktikalpalatika** by
   Sri Sridhara Venkatesarya, otherwise known as Tiruvasanallur Aiyyaval.

Price 2 as. each; Postage extra.

MANAGER,
*Bookselling Department,*
**Sri Vani Vilas Press,** SRIRANGAM.

॥ श्रीः ॥

श्रीवाणीविलासशास्त्रमाला—१.

# अध्वरमीमांसा

# ॥ कुतूहलवृत्तिः ॥

संपादकः

यम्. कुप्पुस्वामिशास्त्री, एम्. ए.

मैलापुरस्थगीर्वाणवाणीमहापाठशालाध्यक्षः।

सह

तत्पाठशालाध्यापकाभ्यां

आर्. चन्द्रशेखरशास्त्रिणा,

पि. वि. पञ्चापगेशशास्त्रिणा च

**समग्रोऽप्ययं ग्रन्थः त्रिंशता संचिकाभिः प्रचार्येत।**

इदानीं संचिकात्रयमवतारितम्। प्रथमत एव द्वादशसंचिकामूल्यदातॄणां पुस्तकप्रापणभृतिसहितं मूल्यं **नव रूपिकाः**। **(Rs. 9.)**

खण्डश आदातॄणां तु प्रतिसंचिकं प्रापणवेतनसहितं मूल्यं **एका रूपिका।** **(Re. 1.)**

यद्यपेक्ष्यते, प्रेषयामो वयं ग्रन्थरीतिसूचनपत्रम्। अत एतत्प्रेषणाय कृपया आज्ञा दीयताम्,

अध्यक्षाय,

श्रीवाणीविलासपुस्तकशालायाः,

श्रीरङ्ग.



ஆனரபிள் திவான் பஹதூர் ஜஸ்டிஸ் ஸர். எஸ். ஸுப்ரஹ்மண்ய
அய்யர் கே. ஸி. ஐ. ஈ.

# ஸ்ரீ வாணீ விலாஸினீ



வா. 5. பிலவங்க௵ ஐப்பசி௴ ந. 25.


## ஸ்ரீராமாநுஜ சரிதம்.



சிறிது நாள் சென்றபின் தென்தேசத்திய விஷ்ணுஸ்தலங்களை ஸேவித்துவரும்படி திருவரங்க நகரை விட்டுப் புறப்பட்டு பாண்டிநாட்டில் திவ்ய தேசங்களையெல்லாம் ஸேவித்துக்கொண்டு திருக்குறுங்குடி சேர்ந்தார்கள். அம்முறை இவரது அடியார்கள் அனைவரும்கூட யாத்திரைசெய்கிறார்கள். ஓர் நாள் அவ்வூரில் வீதியில் ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் வந்துகொண்டிருக்கும்

போது ஒரு விருத்தர் எதிர்பட்டார். அவர் ஸ்வாமிகளைக் கண்டதும் வணக்கமாய்த் தண்டனிட்டு இத்தனை பேர் உமக்கு சிஷ்யர்களாய்த் திரண்டு பணிவிடை செய்யும்படியான பெருமை எதனால் கிடைத்ததென்று கேட்டார். 'எமதாசிரியனுபதேசித்த மந்த்ரத்தின் பலமே' என்று ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் கூறுதலும் 'அம்மந்திரத்தை யெனக்கு உபதேசிக்க வேணும்' என்று விருத்தர் வேண்டிக்கொண்டார். அவர் அதிக விருத்தராயிருந்ததுமன்றி மிகவும் அசக்தராய்க் காணப்பட்டதாலும் அம்மந்திரத்தையுபதேசம்பெற அவருக்குப் பேராவல் பிறந்திருந்ததாகக் காட்டப்பட்டபடியாலும் தேஹநிலையைக் காட்டித் தாமதம் செய்ய விடமில்லையென்று கூறி அப்போதே உபதேசம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தபடியாலும் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் சாஸ்த்ரமுறைப்படி அவருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் பிரஸாதித்தார். உபதேசம் பெற்ற உடனே அந்த விருத்தர் அந்தர்த்தானமாய்ப் போய்விட்டார். எல்லோரும் இதென்னவென்று திகைக்கலானார்கள். பிறகு நம்பியை ஸேவிக்க கோவிலுக்குள் சென்றபோது தாம் சாற்றின திருமண்காப்பு நம்பியின் திருமுகமண்டலத்தில் காணப்படவே ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் மனநடுங்கி மயிர் சிலிர்த்துக் கண்ணீர்பெருக நான் செய்தவிப்பெரும்பிழையைப் பொறுத்தருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். நாம் உபதேசித்த ஸ்ரீபாஞ்சராத்திர சாஸ்திரத்தை நாம் அநுஷ்டித்துக் காட்டாதபோது அயலார் அதைச்சங்கையின்றி அநுஷ்டிப்பார்களோ? என்று நம்பி திருப்பவளம் திறந்து (நேராகவே) அருளிச்செய்தார். அவ்விடத்தில் சிலகாலம் தங்கியிருந்து மலைநாட்டு (மலையாளதேசத்து) திவ்ய தேசங்களை ஸேவித்துக்கொண்டு திரும்பித் திருவணையாடி ஸ்ரீரங்கம் வந்துசேர்ந்தார்கள்.

மலைநாட்டி னுசாரங்களைச் சீர்திருத்த வேண்டுமென்று ஸ்வாமிகள் அபிப்பிராயப்பட்டார்கள். அதை அந்த எம்பெருமான்கள் ஒப்பவில்லைபோலும். ஸ்ரீபுருஷோத்தமத்தில் நடந்ததுபோலே அங்கும் நடந்ததென்றும் திருவனந்தபுரத்தில் முதல்நாள் இரவு சயனித்தவர்கள் மறுநாள் காலையில் ஏழுந்தபோது அடியார்களின் பெருங்கூட்டத்தோடு திருக்குறுங்குடி மலையின்பேரில் நம்பி ஸன்னிதியருகே யிருக்கக்கண்டார்களென்றும் சிலர் கூறுகிறார்கள்.

பாண்டிநாட்டில் யாத்திரை செய்துவரும் காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளை ஸேவித்திருக்கும் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளுக்கெதிராக ஒரு சிறு பெண் காணப்பட்டாள். அவள்

"நாறு நறும்பொ ழில்மா விருஞ் சோலை நம் பிக்குநான்
நூறு தடா வில்வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடாநி றைந்தவக்கார வடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையா ரென்றுவந்திவை கொள்ளுங்கோலோ."

(நாய்ச்சியார் திருமொழி பதிகம் கூ-பாட்டு.)

என்கிற பாடலையினிமையாகப்பாடினது கேட்கப்பட்டது. அவ்வாறு பாடியது ஆண்டாளே யென்பதாகவும் அந்தப்படியே திருமாலிருஞ்சோலை அழகருக்கு நிவேதனம் செய்விக்கவேண்டியது ஆவசியகமென்று ஆண்டாள் தம்மை வற்புறுத்துவதாகவும் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் பாவித்துக்கொண்டு ஆண்டாளிடம் விடைபெற்றுத் திருமாலிருஞ்சோலை சென்று நூறு அண்டா அக்காரவடிசிலும் நூறு அண்டா வெண்ணெயும் நிவேதனம் செய்வித்து அதை அப்படியே ஆண்டாளும் அமுதுசெய்யும்படி செய்வித்தார்கள். அதனால் ஆண்டாள் மனமகிழ்ந்து 'என் அண்ணா' என்று கொண்டாடினார்கள். கன்னிகைகளின் ஆசையை பூர்த்தி செய்விக்கவேண்டியதும் அவர்களின்

பர்த்தாவை திருப்திசெய்விக்கவேண்டியதும் பிறந்தகத்தாரின் கடைமையாகையால் வெகுநாளாயிருந்த மனக்குறையை ஆற்றினதுபற்றி ஆண்டாள் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளைத் தன் தமையனாக அபிமானித்தார்கள்.

இவ்வாறு திவ்யதேச யாத்திரையை முடித்துவந்த ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் ஒரு பங்குனிஉத்திரத் திருநாளில் அழகிய மணவாளப்பெருமாள் நாய்ச்சிமாரோடு திருமஞ்சனமானபின் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தபோது சரணாகதிகத்தியம் ஸ்ரீரங்ககத்தியம் ஸ்ரீவைகுண்டகத்தியம் என்னும் கத்தியத்ரயத்தை அருளிச்செய்தார்கள். மற்றும் ஆன்ஹிகக்கிரமச் சுருக்கமாக 'நித்யம்' என்னும் ஓர் நூலை அருளிச்செய்தார்.

ஓர் நாள் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் ஸமாபநமானபின்பு தமது ஆச்ரமத்தில் உலாவிக்கொண்டிருந்தவர் திடீரென்று திரும்பினதை ஜாளரவழியாய்ப் பார்வையிட்ட பிள்ளான் *'திருப்பேரான் அனுபவம்போலும்' என்று அருகேயிருந்த கூரத்தாழ்வானுடன் கூற, இதை ஸ்வாமி

---

* சோளதேசத்தில் திருப்பேர்நகர் என்னும் ஓர் திருப்பதி ஸ்ரீரங்கத்துக்கு வடகிழக்கு சுமார் 18-மயில் தூரத்திலுள்ளது. அப்பக்குடத்தான் ஸன்னிதியென்று இதற்கு மறுபெயர். அப்பெருமான் விஷயமாகத் திருவாய்மொழியில் தொண்ணூற்றெட்டாம்பதிகம் பாடப்பட்டிருக்கிறது. அதில் 3-ம் பாட்டு

"பிடித்தேன் பிறவி கெடுத்தேன் பிணி சாரேன்
மடித்தேன் மனவாழ்க்கையுள் நிற்பதோர் மாயை
கொடிக்கோபுர மாடங்கள் சூழ்திருப் பேரான்
அடிச்செல்வ தெனக் கெளிதா யினவாறே" என்பதாம்.

இதனிரண்டாமடி முதலில் 'மடித்தேன்' என்பது திரும்பினேன் என்பதாக பொருள்படுவதாலால் ஸ்வாமிகள் அர்த்தானுஸந்தானத்தோடுலாவுகிறவர் திரும்பினதைப் பிள்ளான் கண்டு 'திருப்பேர்ப்பதிகம் அனுஸந்தானமோ' என்று கேட்பதற்குப் பதிலாய் இவ்வாறு கேட்டது.

கள் கேட்டு, 'பிள்ளானே' என்ன, அவரும் 'அடியேன்' என்ன ஸ்வாமிகள் அன்போடவரை அழைத்து அணைத்துப்பெருங்கூட்டத்திலே இதை வெளியிட்டு ஸ்ரீமந்நாதமுனிகளது திருவம்சத்தில் பிறந்தவராகையால் திருவாய்மொழியின் சுவடறிந்தாராகும் என்று கூறி அவரைத் தமக்கு ஜ்ஞான புத்ரராக ஸ்வீகரித்து அவருக்குத் † 'திருக்குருகைப்பிரான்' என்று திருநாமமிட்டார்கள்.

இவ்வாறு முன்னே மற்றொரு ஸம்பவம் நிகழ்ந்திருந்தது. அதாவது: ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் மாதுகரத்துக்குச் செல்லும்போது பாதுகை தரியாமலே செல்வார்கள். ஓர் நாள் பெரியநம்பி திருமாளிகையேறிச்செல்லவும் நம்பிகள் குமாரத்தியாகிய அத்துழாய் என்னும் பெண்மணி கதவைத்திறக்கவும் திடீரென்று ஸ்வாமிகள் மூர்ச்சித்து விழுந்தார்கள். கூடவே சென்றிருந்த பிள்ளான் ஸ்ரீபாஷ்யகார ஸ்வாமிகளை எடுத்துட்காரவைத்தணைத்துபசரித்துக்கொண்டிருந்தார். அத்துழாய் உள்ளே சென்று 'அய்யா! ஜீயர் மூர்ச்சித்துவிழுந்தார்' என்று கூறினாள். நம்பிகள் பரபரப்புடன் வந்து 'இதுவென்' என்று பிள்ளானைக்கேட்டார்கள். * 'உந்துமதகளிற்றன் போலேயிருந்தது' என்று பிள்ளான் கூறினார். பெரியநம்பிகள் 'ஒக்கும்' என்றார்கள்.

---

† திருக்குருகைப்பிரான் என்பது நம்மாழ்வார் திருநாமம். நம்மாழ்வார் திருவவதாரஸ்தலமாகிய ஆழ்வார் திருநகரிக்கு 'திருக்குருகை' என்று பெயர்.

* பாஷ்யகாரஸ்வாமிகள் எப்பொழுதும் மானஸிகமாக திருப்பாவை அனுஸந்தானம் செய்துகொண்டே செல்வது வாடிக்கையாதலால் நம்பி திருமாளிகை வாசல்படியேறி கதவினருகே வந்து நிற்கவும் 'உந்துமதகளிற்றன்' என்னும் பாட்டுமுடியவும் கதவு திறக்கப்படவும் ஒரே ஸமயமாய் நேரிடவே அத்துழாயை நப்பின்னையென்று பாவித்து கண்ணனுகந்த பிராட்டியை ஸேவிக்கப்பெற்ற ஸந்தோஷத்தால் மோஹித்தாராயிருக்கவேணுமென்பது இதன் பொருள்.

மூர்ச்சை தெளிந்தபின் இதைப்பற்றி ஸ்வாமிகள் நேரே கேட்கப்பட்டபொழுது 'ஆம்' என்று கூறினார்கள். 'ஸ்ரீமந் நாதமுனிகளது குடிப்பிறப்பாகையாலே திவ்வியப் பிரபந்தங்களின் ஸ்வாரஸ்யம் இவருக்கொருவருக்குத்தான் தெரியும்' என்று கூறியிருந்தார்கள். அதனால் அந்த திருக்குருகைப்பிரான் பிள்ளானையே திருவாய்மொழிக்கு ஒரு வ்யாக்யானம் செய்யும்படி நியமித்து 'உயர்வறவுயர்நலம்' என்று அடியெடுத்துக்கொடுக்கப் பிள்ளானும் உடையவர் ஸ்ரீபாஷ்யக்கிரந்தத்தின் முதலில் அருளிச்செய்த மங்களத்தையே தாம் இயற்றும் த்ரமிடோபநிஷத்தான திருவாய்மொழியின் பாஷ்யத்திற்கும் மங்களமாகப் பாவித்துக்கொண்டு அதில் உள்ள அ என்னும் முதலெழுத்தையே வைத்து '**अप्राकृत**' 'அப்ராக்ருத' என்று துடங்கி ஆறாயிரப்படியாக ஒரு வியாக்கியானம் செய்து உடையவர் திருமுன்பே ஸமர்ப்பித்தார். ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் அதைக் கடாக்ஷித்துப்போர உகந்து 'பகவத்விஷயம்' என்று அதற்குப் பெயர் கொடுத்து காலக்ஷேபத்துக்கு நியமித்து வைத்தார்கள்.

இவ்வாறு ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் ஆளவந்தாரது இரண்டாவது குறையை நீக்கிவிட்டார்களாயிற்று.

ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகளுக்கு அந்தரங்க சிஷ்யராகிய கூரத்தாழ்வானுக்கு வெகுகாலம் புத்திரனில்லாமலிருந்தது. ஓர் நாள் விடாமழையாயிருந்தமையால் உஞ்சவ்ருத்திக்கு வெளியே செல்லக் கூடாமல்போகவே அவர் தம் பத்னியோடு உபவாஸமிருந்தார். அன்றிரவு ரங்கநாதன் கடைசி அவஸரம் அமுது செய்த திருமணியோசை செவிப்பட்டதும் ஆழ்வானது பத்னியாரான ஆண்டாளென்னும் கற்பரசி 'பக்தன் பசித்து உபவாஸத்துடனிருக்க இப்படி வயிறுதாரியாய் தான்மாத்திரம் குலாவி அமுதுசெய்வது

நன்றே’ என்று மனத்தே நினைத்தார். இதை அறிந்த பெரியபெருமாள் அக்காரவடிசில் பிரஸாதம் கொண்டு போய் கொடுக்கும்படி உத்தமநம்பி என்னும் கோயில் மேற்பார்வைக்காரருக்குக் கட்டளையிட்டார். அவர் அப்படியே பாலும் ப்ரஸாதமும் கொண்டுபோய் கொடுத்தார். ஆழ்வான் மிகவும் வணக்கத்தோடு பெற்றுக்கொண்டு ‘நீ ஏதாவது நினைத்தாயோ’ என்று பத்னியாரைக் கேட்டார். ஆண்டாள் உள்ளத்து நினைத்ததைக்கூறவே ‘இது தகாதென்று அவளைக் கடிந்து வெறுத்து நியமத்தோடு அந்தப்பிரஸாதத்தைத் தம் பத்னியாரும் தாமும் உட்கொண்டார். அதுவே முதலாக ஆண்டாள் கர்ப்பிணியாகிப் பத்தாவதுமாதம் ஒரு புத்ரரத்னத்தைப் பெற்றாள்.

பன்னிரண்டாவது நாள் அக்குழந்தையைப் பார்க்க வேண்டி ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் அக்குழந்தையை யெடுத்துவரும்படி எம்பாரை அனுப்பினார்கள். அவர் அக்குழந்தையின் தேஜஸ்ஸைக்கண்டு திருஷ்டிதோஷம் வருகிறதோ என்று பயந்து த்வயத்தை உபதேசித்தெடுத்து வந்தார். அருகே வரும்போதே ‘த்வயம் மணக்கிறதே’ என்று இராமாநுஜஸ்வாமிகள் கேட்டார்கள். எம்பார் நடந்தவற்றைக் கூறினார். ‘நன்று, நாமிவருக்குச் சொல்ல நினைத்தோம். நீர் முந்திக்கொண்டீர், நீரே இவருக்குக் கடவீர்’ என்று ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் கூறி அவருக்கு ஸ்ரீபராசரபட்டர் என்று நாமகரணம் செய்வித்து வயதுபெற்றவாறே மஹாவித்வானாகச் சமைந்த அவருக்கு எம்பாரைக்கொண்டே ஸம்ப்ரதாயார்த்தங்களையெல்லாம் உபதேசம் செய்வித்து அவரால் ஸ்ரீஸஹஸ்ரநாமாத்தியாயத்திற்கு பாஷியம் செய்வித்தார்கள்.

இதனால் ஆளவந்தாரது மூன்றாவது குறையும் நிறைவேற்றப்பட்டதாயினது.

இவ்வண்ணம் ஸ்ரீபாஷியகாரராகிய இராமானுஜாசார்யஸ்வாமிகள் அனேக அடியார்களோடு விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபநம் செய்துகொண்டு ஸ்ரீரங்கத்தில் ஸுகமே வீற்றிருந்த ஸமயத்தில் இவரால் வாதில் வெல்லப்பட்ட புறமதஸ்தர்கள் தாங்கள் ஒன்றும் செய்யத் திறமற்றவர்களாயிருந்தமையால் சோளராஜனைத் தூண்டிவைத்தார்கள். அவன் ஏற்கெனவே சைவனாகையாலே இவர்களது தூண்டுதலினால் விஷ்ணுத்வேஷமும் தலைக்கேறப்பெற்று 'शिवात्परतरं नास्ति' என்றெழுதி அதில் எல்லாருடைய கையெழுத்தும் வாங்கும்படி உத்திரவுசெய்தான். அரசனுக்குப்பயந்து பலரும் பணத்தாசையாற் சிலரும் அதில் கையொப்பம் செய்தார்கள். அவ்வளவிலே சோளராஜனுக்கந்தரங்கனாயிருந்த நாலூராச்சான் என்னும் வைஷ்ணவனொருவன் 'இராமானுஜாசாரியர் கையெழுத்து செய்தாலல்லது இவர்கள் பல்லாயிரம்பேர் ஒப்பம் செய்வதும் உபயோகமுறாது' என்று கூறவே அரசனும் 'அப்படியேயாகுக' என்று தூதுவரை அனுப்பினான். 'நீராட (ஸ்நாநம்செய்ய) வேண்டிக் காவேரிக்குப் புறப்பட்டுப்போய்க்கொண்டிருந்த முதலியாண்டான் நடாதூராழ்வான் இருவரும் ராஜதூதர் வருஞ்செய்தியைக் கேள்வியுற்றார்கள். ஆண்டான் நீராடச் சென்றார். நடாதூராழ்வான் கொல்லைவழியாய் யாருமறியாமே ஆசிரமத்துக்குள் நுழைந்து தூதர் வரும் வரலாற்றை உடையவருக்கு விண்ணப்பம் செய்தார். உடையவரும் 'நீரன்றோ ப்ரியபாகினேயர் என்று அவரைக் கொண்டாடிப் பிறகு நடக்கவேண்டியதைப்பற்றி ஆலோசிக்கலானார்கள். அரசன் மூர்க்கனும் விஷ்ணுத்வேஷியுமாயிருப்பதால் அவன் சபைக்கு ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் செல்வது தகாதென்று முடிவுசெய்யப்பட்டது. கூரத்தாழ்வான் ஸந்யாஸி வேஷத்துடனே

ராஜதூதரைப் பின்தொடர்ந்து அரசன் சபையை நோக்கிச்சென்றார். பெரியநம்பிகள் அவருக்கு உதவியாய்ச் சென்றார்கள். மற்ற அடியார்கள் ஸ்வாமி இங்கிருந்தால் அநர்த்தம்வருமென்று நினைத்து உடையவருக்கு வெள்ளை போர்த்து அழைத்துக்கொண்டு மேல்நாடேறப் போவதாகப் புறப்பட்டுவிட்டார்கள். ஸ்ரீரங்கக்ஷேத்ரமானது அந்த சோளராஜனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இவன் தான் கிரிமிகண்டசோழனென்று பெயர் பெறுவோன். இவனது இயற்பெயராவது அரசுபுரிந்த இடமாவது காலமாவது தெளிவாய் விளங்கவில்லை.

அரசனது கொடுங்கோலுக்கும் விஷ்ணுத்வேஷத்திற்கும் பயந்து இவ்வாறிவர்களோடும்படியாயிற்று. கடுநடையாகப் பசிதாகம்பாராது ஆறேழுநாள் பிரயாணம்செய்து கொண்டோடுகையில் ஓர்நாள் பெருமழைவிடாது பெய்யவே எல்லோரும் நன்றாய் நனைந்துபோய் குளிர்தாளாது வெறித்துப்போகும்படியாயினது. மழையில் நனைந்தபடியாலும் வழி நடந்த அலுப்பாலும் ஆஹாரமில்லாமையாலும் அரங்கநாதனை விட்டுப்பிரியவும் த்ரிதண்டகமண்டலுக்களைப் போகட்டும் வெள்ளை போர்த்தும் ஓடவும் நேர்ந்ததேயென்னும் மனக்கவலையாலும் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் அதிக அசக்தியடைந்து விட்டதால் ஏதாவதொரு இடம்பார்த்துச்சிறிது ஆயாஸபரிஹாரம் செய்துகொள்ள வேண்டிற்று. தற்செயலால் அங்கோர் சிறு வெளிச்சம் தோன்றியது. அப்போது ஸூர்யாஸ்தமனமாய் ஐந்தாறு நாழிகையாயிருக்கலாம். பேரிருள் மூடியிருக்கிறது. இவர்கள் பகலிராவென்று பாராமல் ஓடுகிறார்கள். இராமாநுஜாசாரிய ஸ்வாமிகளைக் கைத்தலத்தில் எழுந்தருளிவித்துக் கொண்டு அவ்வெளிச்சத்தை நோக்கிச் சென்றார்கள்.

*அது மலையடிவாரத்துள்ள ஒரு வேடக்குடிசை.

அந்த வேடர்கள் இவர்களைக் கண்டதும் வெகு விநயத்தோடடிப்பணிந்து வரவேற்றார்கள். தங்களுக்காக அவர்கள் புதிதாய் சேகரித்து வைத்திருந்த மரவுரிகளைக்கொடுத்து ஈரவஸ்திரங்களை உலரவைக்கச்செய்தார்கள். நெருப்பும் விறகும் கொண்டுவந்துகொடுத்துக் காய்ச்சச்செய்து குளிர்போக்கினைத்தார்கள். எல்லோரும் வழிநடந்த ஆயாஸமும் குளிர் வெறிப்புமாறப்பெற்றபின் வேடர்கள் அவர்களை 'தேவரீர்கள் எவ்விடத்திலிருந்து எழுந்தருளுகிறீர்கள்' என்று வினவினார்கள். வேடர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குரிய பரிபாஷையாய் வார்த்தையாடியதைக்கேட்டு எல்லோரும் வெகு ஆச்சர்யப்பட்டார்கள். 'ஸ்ரீரங்கத்திலிருந்து வருகிறோம்' என்று முதலியாண்டான் கூறினார். இத்தனை ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருகாலத்தில் திருவரங்கப் பெருநகரைவிட்டுப் புறப்பட்டதென்ன? எம்பெருமானுக்கு ஒரு குறையுமில்லையா? எம்பெருமானுக்குக் குறையொன்றுமில்லையா?' என்று வேடர்கள் வினவினார்கள். பகவத்பாகவத விஷயத்தில் அவர்களுக்குண்டாயிருக்கும் பரிவை (ப்ரீதியைக்) கண்ட அடியார் கூட்டத்திற்கு பெரிய வியப்பும் மிக்க ஸந்தோஷமும் திடமான தைரியமுமுண்டாயிற்று. அந்த நிமிஷம் வரையில் அவர்கள் மனதில் நடையாடிக்கொண்டிருந்த சோழராஜ பயமானது அப்பொழுது தான் நீங்கியதுபோலும். இராமானுஜனடியார்கள் எல்லா விருத்தாந்தங்களையும் விரிவாய்க் கூறினார்கள்.

அதைக்கேட்டு வேடர்கள் மிகவும் பரிதபித்து 'எம்பெருமானரிவர் என்று ஸேவிக்க செய்விக்க காட்டவேண்

* இது ஜோலார்பேட்டை ஸமீபத்திலுள்ள எலகிரியெனபதின் தடர் மலை யென்பர்.

டும்' என்று வேண்டிக்கொண்டார்கள். அப்படியே செய்யப்படவே வேடர்கள் கண்ணுங் கண்ணீருமாய்ப்பலமுறை தண்டனிட்டார்கள். தன்னைப்பற்றி அவர்களுக்கெப்படி தெரியுமென்று ஸ்வாமிகளால் விசாரிக்கப்பட்டபோது தாங்கள் நல்லான் ஸ்வாமிகளின் சிஷ்யர்களென்றும் அவர் தங்களுக்கு ஹிதோபதேசம் செய்தபோது 'எம்பெருமானார் திருவடிகளே சரணம்' என்று உபதேசஞ்செய்தாரென்றும் அவரால் குருவின் மஹிமை உபதேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் வேடர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அன்றியும் தேனும் தினைக்கதிரும் கொண்டுவந்து கொடுத்து அதை அமுதுசெய்து இளைப்பாறவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். வேடர்களினது வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டது. கிடாம்பியாச்சான் தினையை வறுத்திடித்துத் தேன்கலந்து பிசிந்து ஸமர்ப்பிக்க எம்பெருமானார் தம் திருவாராதனமான பேரருளாளன் ஹயக்ரீவர் இவர்களுக்கு நிவேதனம் பண்ணி அடியார்களுக்கும் பிறகு அந்த சேஷத்தை வேடர்களுக்கும் விநியோகம் செய்வித்தார்கள். எல்லோரும் பசியாறி மனமுகந்திருந்தபோது 'நல்லானுகிற நீர்கொண்டமேகம் நமக்கு நடுக்காட்டில் வருஷித்தது' என்று எம்பெருமானார் உகந்து கூறினார்கள். அந்த அநுக்கிரஹத்தாலே வேடர்கள் கிருதார்த்தர்களானார்கள்.

பிறகு அவ்வேடர்கள் அடியார் கூட்டங்களோடு ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகளை பெருமலைக் காடுகளைத் தாண்டுவித்து மேல்நாட்டெல்லையிலோர் அக்கிரஹாரத்திற்கு அழைத்துப்போய்விட்டு அவ்வூராருக்குப் பொருள்கொடுத்து இவர்களுக்கு வேண்டிய உதவிபுரியும்படி சொல்லிவிட்டு ஸ்வாமிகளிடம் விடைபெற்று தங்கள் சேரிக்கு மீண்டார்கள். ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் அங்கே திரிதண்டகமண்

டனுக்கள் ஸம்பாதித்து தம்மாராதனமான வந்துவாழ்வித்த பெருமாள் ஸன்னிதியில் மந்த்ரவத்தாக கிரஹித்துக்கொண்டார்கள். இந்த ஊருக்கு ஸத்யாகாலமென்று பெயர். அங்கே சிலர் ஆச்ரயிக்க அவர்களுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் முதலாக வேதாந்தார்த்தரஹஸ்யங்களை உபதேசித்து அங்கிருந்து சாலக்கிராமம் என்னும் ஊர்சென்று அங்கே சிஷ்யர்களாகி வந்தவர்களுக்கு அநுக்கிரஹம் செய்து பஞ்ஸம்ஸ்காரம் ப்ரஸாதித்து அவ்வூரை 'ஸாளக்கிராமம்' என்று வ்யவஹரிக்கும்படி நியமித்து அங்கு நின்றும் சிங்கர் கோயில் சென்றார்கள். அங்கே வடுகநம்பி என்போர் ஒருவர் ஆச்ரயிக்க அவருக்கு உடையவர் பஞ்ச ஸம்ஸ்காரம் முதலாக ஸம்பிரதாயார்த்தங்களை யுபதேசித்தார். வடுகநம்பியும் எதிராஜர் திருவடிகளில் அத்தியந்த பக்தராய் ததீயாராதனத்துக்குப்பாலமுது காய்ச்சி ஸமர்ப்பித்துவந்தார். அதனால் இவருக்கு க்ஷீரகைங்கரியபரரென்று பிரஸித்தியுண்டாயிற்று.

இந்த வடுகநம்பி உடையவர் விஷயமாக அஷ்டோத்தர நாம ஸ்தோத்திரமும் யதிராஜவைபவமும் இயற்றியிருக்கிறார். இந்த யதிராஜவைபவம் ஸ்ரீபாஷ்யகார ஸ்வாமிகள் திருமுன்பே அடியோர்களின் ஓலக்கத்திலே அரங்கேற்றப்பட்டது. எல்லோரும் கேட்டு உகந்தார்கள். ஸ்ரீராமாயணம்போலே இது ஸ்ரீராமாநுஜாயநமாயிருந்ததென்று கொண்டாடினார்கள். இதுநிற்க, சோளராஜன் சபையில் நேர்ந்த விருத்தாந்தத்தைகூறுவோம். ஆழ்வான் பெரியநம்பிகளுடன் ராஜஸபை சேர்ந்தார். 'शिवात्परतरं नास्ति' என்றெழுதிய சீட்டை யெடுத்துக்கொடுத்து அதில் கையெழுத்து செய்யும்படி அரசன் உத்திரவு செய்தான். சிவனை விட பரதேவதையில்லை யென்பததன்கருத்து. அதை அவர் இசையவில்லை. வாதம் செய்யத்துடங்கி சிவபரத்வ

த்துக்குக்கூறிய ஹேது ஒவ்வொன்றுக்கும் ஐந்து ஐந்து மறுப்புக்கூறினார்கள். ஆயினும் அரசன் பிடிவாதத்தை விடாமல் அந்த சீட்டில் கையெழுத்துசெய்தே தீரவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தான். கூரத்தாழ்வான் அதை வாங்கி அந்த வாக்கியத்தினடியில் 'द्रोणमस्ति ततः परं' என்றெழுதிக் கையொப்பமிட்டார். அதை வாங்கி வாசித்துப் பார்த்த நாலூராச்சான் பரிஹாசமாய் அப்படி யெழுதப் பட்டதென்பதை அரசனுக்குத் தெரிவித்தான். சிவம் என்பது குறுணிக்கும் துரோணம் என்பது பதக்குக்கும் பெயர். குறுணிக்குமேல்பட்ட அளவில்லையென்று அதற்குப் பொருள்செய்து, குறுணிக்குமேல் இரண்டு குறுணிகொண்ட பதக்கென்னுமளவு இருக்கிறதென்று பொருளுள்ள வாக்கியமெழுதிக் கையொப்பம் செய்யப்பட்டது.

இப்படி பரிஹாஸம் செய்யப்பட்டிருப்பதை அறிந்த சோழனடங்காக் கோபங்கொண்டவனாகி கூரத்தாழ்வான் பெரியநம்பி இவ்விருவருடையவும் இரண்டு கண்களையும் பிடுங்கிவிடும்படி கட்டளையிட்டான். கூரத்தாழ்வான் தைரியத்தோடு 'விஷ்ணுத்வேஷம் செய்பவன் சண்டாளனாகையாலே சண்டாளனான உன்னைப் பார்த்த கண்களை நானே பிடுங்கிவிடுகிறேன்' என்றுகூறித்தமது இருகண்களையும் பிடுங்கி யெறிந்துவிட்டார். தயையென்பது லேசமுமில்லாப்பாவிகளாகிய சோழனுட்கள் பெரியநம்பிகளின் கண்களிரண்டையும் பலாத்காரமாய்ப் பிடுங்கினார்கள். அந்த வேதனையோடு இவர்களிருவரும் ஸ்ரீரங்கம் திரும்பினார்கள். நோவு பொறுக்கமாட்டாமல் பெரிய நம்பிகள் நடுவழியிலே பரமபதம் சேர்ந்துவிட்டார்கள். ஆழ்வான் ஆசிரமம் வந்து பார்க்க அங்கு யாருமில்லாமல் பாழ்த்துக்கிடந்தது. அங்குமிங்கும் பதுங்கியிருந்த சிலருதவியைக் கொண்டு பெரிய நம்பிகளின் சரமக்கிரியைகள் நடத்தி முடிக்கப்பட்

டது. தாமே பிடுங்கி யெறிந்துவிட்டதனால் ஆழ்வானுக்கு வேதனையதிகமில்லையாயினும் ஸ்ரீபாஷியகாரரைப் பிரிந்த வ்யஸனம் இதைவிட நூறுமடங்கு வேதனையைச் செய்து கொண்டிருந்தது.

கொடுங்கோலனாகிய அந்தச்சோழ ராஜன் அத்தோடு திருப்திவடையாமல் இராமானுஜாசாரியரைச் சேர்ந்தவர்கள் பலரும் ஸ்ரீரங்கத்திலிருக்கக்கூடாதென்று உத்திரவு செய்து விட்டான். ஊரைவிட்டுப்போகச சாத்தியமில்லாமல் ஸ்ரீரங்கத்திலேயே வாஸம்செய்து வந்த சிலருக்கு பெரிய கஷ்டமாய்விட்டது. வேறுவகையில்லாமல் அவர்கள் தாங்கள் இராமாநுஜாசாரியரைச் சேர்ந்த்வர்களல்லவென்று சொல்லி ஸ்ரீரங்கத்தில் வாஸம்செய்து வந்தார்கள். அவ்வாறுகூற ஸம்மதியாமையால் கூரத்தாழ்வான் ஸம்ஸாரத்தோடு சோளதேசத்தை விட்டுத் துரத்தப்பட்டார். அவர் பாண்டிய நாட்டிலுள்ள திருமாலிருஞ்சோலைக்குச்சென்று குடும்பத்தோடு அவ்வெம்பெருமான் ஸன்னிதியில் வாஸம் செய்துவந்தார்.

ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் சிங்கர் கோயிலில் எழுந்தருளியிருந்தபோது அந்த எம்பெருமானாகிய நரஸிம்ஹன் ஸன்னிதியின் அர்ச்சகர் பகவத்பாகவத த்ரோஹியான சோழன் கழுத்தில் புழுத்துப் பெருவேதனைகள் பட்டு மாண்டுபோகும்படி அபிசாரம் செய்யத்துடங்கினர். அதனால் அந்த சோழன் கழுத்தில் முதலில் ஓர் இரணம் கண்டு அது நாளுக்குநாள் வளர்ந்து பற்பல புழுக்கள் அதில் உண்டாகி ஸஹிக்கமுடியாத வேதனைகள் படுவானாயினான். இதனால் அவனுக்குக் கிரிமிகண்டனென்று பெயர் ஆயிற்று.

அந்த இடத்தில் ஓரரசன் அரசுபுரிந்து வந்தான். அவன் ஹோய்ஸளயாதவ வம்சத்தைச் சேர்ந்தவன்.

அவன் ஜைனமதத்தைத் தழுவினவன். டில்லியில் அரசு புரிந்துகொண்டிருந்த ஓரரசன் இவனைப்பிடித்துப்போய் சிலகாலம் சிறையில்வைத்திருந்து பிறகு விடுதலைசெய்தான். இவன் பிறகுபட்டாபிஷேகம்பெற யோக்கியதையற்றுப்போமாறு இவனது விரலில் ஒன்றை வெட்டிவிட்டு சிறைவிடுவிக்கப்பட்டான். இவனுக்கு விட்டலராஜனென்று பெயர். அவனுக்கு வெகுநாள் கழித்துப்பிறந்த அருமையான பெண் ஒன்றுண்டு. அது காட்டேரி பிடித்து அடங்காவெறிகொண்டு புடவையுடாமலே ஓடியலையத் தலைப்பட்டது. பற்பல பரிஹாரங்கள் தேடிப்பார்த்தும் பயன்படாமல் போகவே அரசன் பெருந்துயரத்திலாழ்ந்திருந்தான். ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளின் சிஷ்யர்களில் ஒருவரும் அவ்வரசனுக்கு வேண்டியவருமாகிய 'தொண்டனூர் நம்பி' யென்பவர் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் இளமைப்பருவத்தில் பிருஹ்மரக்ஷஸ்ஸைப் போக்கின பெருமையையும் கௌரவத்தையும் எடுத்துக்கூறி அவர் அநுக்கிரஹம் பெற்றால் குணமடையலாம், என்று தெரிவித்தார். அவ்விதம் அவரால் என்பெண் குணமுற்றால் நான் அவருக்கு சிஷ்யனாகிறேனென்று அரசன் வாக்குறுதி கொடுத்தான். இதை ஸ்வாமிகளிடம் தொண்டனூர் நம்பி தெரிவித்தார். ஸ்வாமிகள் அந்தப்படி அவனிடம் செல்ல ஸம்மதிக்கவில்லை. அந்ததேசத்தில் அமணர்கள் வெகு கூட்டமாய் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் புறபிராமணர்களுக்கும்பல இடுக்குகள் செய்வதைத்தெரிவித்து இவ்வரசன் வைஷ்ணவனாக்கப்பட்டால் வெகு க்ஷேமமுண்டென்று வற்புறுத்தி நிர்ப்பந்திக்கப்பட்டதன்மேல் ஸ்வாமிகள் அதற்கு இசைந்து அவ்வரசன் மாளிகைக்கு அடியார்களோடு சென்றார்கள். காட்டேரிபிடித்த ராஜகுமாரியைக் ஸ்வாமிகளைக் கண்டதும் அடங்கி வணங்கிப் புடவையுடுத்துவந்து நின்று தண்

டனிட்டாள். ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகளின் ஸ்ரீபாததீர்த்தம் அக்கன்னிகைக்குக் கொடுக்கப்பட்ட உடனே ராஜகுமாரி இயல்பையடைந்து குணப்பட்டுவிட்டாள். இதைக் கண்ட விட்டலதேவராயன் மிக்கவியப்பையும் ஸந்தோஷத்தையும் பெற்றான். ஆந்தரமான பக்திச்ரத்தைகளோடு தன் பத்னியும் தானுமாய் ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகளுக்கு சிஷ்யனானான். ப்ராயச்சித்தமூலமாக அவர்களுக்குப்பஞ்ச ஸம்ஸ்காரம் செய்விக்கப்பட்டு ஸித்தாந்தார்த்தங்கள் உபதேசிக்கப்பட்டது. ஸ்ரீவிஷ்ணுவர்த்தன நாராயணராயனென்று அரசனுக்கும் லக்ஷ்மீதேவி என்று ராஜபத்னிக்கும் தாஸ்யநாமம் கொடுக்கப்பட்டது. ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் அரசன் வேண்டுகோளுக்கிசைந்து சிறிதுநாள் அவ்வூரிலேயே வாஸம் செய்து வந்தார்கள்.

அவ்வரசனது குருக்களாகிய சமணர்கள் இதையறிந்து பேராவேசம் கொண்டு ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகளிடம் வந்து வாக்கியார்த்த விசாரம் செய்யவேண்டுமென்றழைத்தார்கள். 'வாதத்தில் தோல்வியடைந்தவர்களை கற்காணத்திலரைத்துவிடுவது' என்னும் ஏற்பாட்டுடன் வாதம்துடங்கப்பட்டது. சமணர்கள் தோல்வியடைந்தார்கள். விஷ்ணுமதத்தில் சேர்ந்து ஸ்ரீபாஷ்யகார ஸ்வாமிகளுக்கு சிஷ்யர்களாகிவிடச் சம்மதித்தவர்கள் தவிர மற்ற சமணர்கள் கற்காணத்திலரைப்பிக்கப்படுமென்று பயமுறுத்தப்பட்டு நாட்டைவிட்டோடிப் போய்விடும்படி துரத்தப்பட்டார்கள். சிஷ்யர்களாகச் சம்மதித்து வந்தவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்வித்துப் பஞ்சஸம்ஸ்காரமும் வேதாந்தார்த்தோபதேசமும் செய்யப்பட்டது.

சமணர்கள் பன்னீராயிரவர் ஒரே தடவையாய் வாதுக்குத் துடங்கவே ஸ்வாமிகள் இனித்தம்மை வெளியிடாதிருக்க முடியாதென்று நினைத்துத் தாமொருமண்டபத்திலே இருந்து திரையொன்று கட்டிக்கொண்டு அதற்குள் தமது நிஜரூபமாகிய ஆயிரம் தலையுடைய ஆதிசேஷனாகவே இருந்து ஒவ்வொரு முகத்தாலே பன்னிரண்டு பெயர்களுக்குப் பதில் கூறி ஜயம் பெற்றார்களென்றும் சிலர் கூறுவார்கள்.

(இன்னும் வரும்.)

ச்யாம-திருமலை தாதாசாரியர்.

# கமலினீகலஹம்ஸம்.

## ஸ்தபகம் 13.

இதென்ன ஆச்சரியம்! இந்த வனத்திலும் என் மித்ரனைக்காணேனே! இவ்வனம் முற்றும் தேடினேனே! என் மனம்பதைக்கின்றது! நிஷ்காரணமாக இவ்வளவு பயமும் துக்கமும் எனக்குண்டாவதின் காரணமென்ன? தெரியவில்லையே? ஐயோ கலஹம்ஸா! அதிஸ்நேகத்தால் உன்னைக்குறித்தென் மனம் என்னென்னவோ எண்ணுகின்றது. இப்பொழுது நான் என்ன செய்வேன். என் ஸ்நேஹிதனைக் காணவில்லையே! கலஹம்ஸன் காலைவேளையில் இவ்வளவு சீக்கிரம் எழுந்து எங்கும் செல்லான். நானன்றோ அநுதினமும் அவனை யெழுப்புவது வழக்கம். அப்பொழுதும் வெகு சிரமப்பட்டுக்கொண்டு எழுந்திருப்பான். இன்று என்ன விபரீதமாகவிருக்கின்றது. அவ்வாறு முந்தி யெழுந்தானெனினும் என்னை யெழுப்பாமல் எங்கு சென்றிருப்பான்? ஓர்வேளை என்னைக் கண்டு விளையாட்டிற்காக எங்கேனும் மரத்தடியில் ஒளித்திருப்பானோ? கூப்பிடுகிறேன்.——கலஹம்ஸா! — ஹே, கலஹம்ஸா!! இதென்ன விளையாட்டு? ஒளிந்திருந்தால் ஓடிவந்துவிடு. உன்னை நினைத்துச் சஞ்சலப்படுகின்றதென்னெஞ்சம். போதும். விளையாடுவதற்கு இது தருணமல்ல.——இல்லை கலஹம்ஸன் இங்கில்லை.

நிச்சயம். இருந்தால் இவ்விதமான வருத்தத்தோடு கூப்பிடுகையில் வராதிருக்கமாட்டான். ஈசா! என் நேசனை யெங்கு சென்று தேடுவேன்" என்று வெகு வேகத்தோடு ஓடுகின்றான் ராஜஹம்ஸன். கனகலதை யிருக்குமிடஞ் சென்று பார்த்தான். அங்கும் ஒருவரையும் காணோம். ராஜஹம்ஸனுடைய மனோவிசாரம் அதிகமாயிற்று. அரசனிடஞ் சென்றான். ரத்னஸேனனது முகக்குறியையும் அவன் அவ்வேளையிலிருந்த நிலைமையையும் கண்டு ராஜஹம்ஸன் நடுங்கினான். அரசனெதிரில் அரைநிமிஷம் நின்றான். அவன் ஒன்றும் பேசவில்லை. உடனே ராஜஹம்ஸன் "ஹே ராஜசிகாமணி! இம்மாதிரி தாங்கள் ஒருநாளுமிருப்பது வழக்கமில்லையே. இன்று என்ன வருத்தம் நேர்ந்தது?" என்று வெகு விநயமாகக் கேட்க "ராஜஹம்ஸா! அச்சண்டாளன் கலஹம்ஸன் செய்த செய்கையைக் கேட்கவில்லையே நீ!" என்று மறுமொழி மொழிந்தான் ரத்னஸேனன். தனதுற்ற நண்பனை யெண்ணி யுருகித் திடீரென்று ராஜஹம்ஸன் கீழே சாய்ந்து மூர்ச்சையடைந்தான்.

ராஜன் ராஜஹம்ஸனைப் பலவுபசாரங்கள் செய்தெழுப்பி நடந்தஸங்கதிகள் முழுவதையும் சொல்லி யாசுவாஸப்படுத்தினான். ராஜஹம்ஸன் கண்ணீர்விட்டுக் "கலஹம்ஸா! கலஹம்ஸா!!" என்று கதறிக்கொண்டே வெளியே யோடினான். கன்னிமாடத்தருகே வருகையில் அங்கு "கன்றிழந்த பசுவை"ப்போல் கனகலதை கதறிக்கொண்டிருந்த சத்தம் கலஹம்ஸனின் கர்ணங்களில் நாராசம் போல் பாய்ந்தது. ராஜஹம்ஸனது துக்கம் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகி "நான் கலஹம்ஸனைக் காணாமல் கனகலதையின் முகத்தைப் பார்ப்பதில்லை" யென்று பிரதிக்ஞை செய்து ஊரிலெங்குஞ் சுற்றித்திரிந்தான். கலஹம்ஸனைக் காணவுமில்லை. கண்டதாகச் சொல்வோருமில்லை. ஊரைவிட்டு வெளியே வந்து சமுத்திரக் கரைகளிலும் மற்றுமுள்ளவிடங்களிலும் சுற்றிச்சுற்றிக் கலஹம்ஸனைத் தேடித்திரிந்தான். ஒன்றிலும் பலனில்லை. அவன் இந்த ரத்னத்வீபத்திலிருந்தாலன்றோ ராஜஹம்ஸனுக்குத் தென்படுவான்? உடனே ராஜஹம்ஸன் இஷ்டனைப்பிரிந்த கஷ்டம் பொறுக்கமாட்டாமல் "கலஹம்ஸா! உனக்கு நான் எத்தனை புத்திகள் சொன்னேன்? அத்தனையையும் வீணாகச் செய்து இக்காரியஞ் செய்தாயே! நான் என்னசெய்வேன் இப்பொழுது? தெய்வமே!

அன்றையதினமே கடலில் ஆழ்ந்திறந்திருந்தால் இத்துன்பங்களை யனுபவிக்கும்படி நேரிடாதே! கலஹம்ஸா! நான் உன்னையன்றோ கதியென நம்பியிருந்தேன். எனது சரித்திரத்தைச் செவியுற்ற அன்று "சீ! நான் இனி இப்புவியிலிருக்கவொண்ணாது. உயிரைவிடுகிறேன்" என்று அலறும்பொழுது, என்னைக் கட்டிக்கொண்டு "மித்ர! தாய் தகப்பனில்லையென்று நீ வருந்தாதே. என் தாய் உனக்கும் தாய். என் தகப்பனிருப்பதுகூடச் சந்தேகமாயிருக்கின்றது. இதெற் கெல்லாம் நாம் வருத்தப்படுவதில் என்னடாவுபயோகம். சரியான வுபாயத்தால் நமது தேசத்தைக் கைக்கொள்ளவேண்டும்." என்றும் இன்னும் பலவாறாகவும் என்னைச் சமாதானஞ் செய்தாய். அவை களெல்லாம் மனோராஜ்யமாகவன்றோ முடிந்தன. பால்யமுதல் உன்கூடவே வளர்ந்தவென்னைவிட்டுச்செல்ல வுனக்கு எப்படியடா மனம் வந்தது? என்னையும் அழைத்துசசெல்லலாகாதா! ஐயோ! ஈசா! என்செய்வேன்! எங்கு செல்வேன்! யாரைச் சரணமென் றடைவேன்!" என்றும் பலவாறாகவும் புலம்பியழுது கடைசியில் எங்கு சென்றாவது கலஹம்ஸனைத் தேடிவருவோமென்ற எண்ணத் துடன் ரத்னத்வீபத்தைவிட்டுப் புறப்பட்டான். கன்னிமாடத்திற் கண்ணீர் ஆறாய்ப் பெருகியோடுகின்றது. ரத்னாங்கி, கமலினி, கோகிலா, மதனவதி——எல்லோரும் ஒருவரோடொருவர் பேசா மல் கீழே யுட்கார்ந்து வியஸனத்தால் அழுதுகொண்டிருக்கிறார் கள். கனகத்திற்குக் கலஹம்ஸனுடைய கஷ்டத்தைக் கேட்டு மன மாறவில்லை. தன் சரித்திரமுழுமையையும் கலஹம்ஸன் அறிந்த வுடன் அன்று அவளிடம் எத்தனை ஸமாதானங்களையும் எத்தனை யோசனைகளையும் பேசினான்? "ஐயோ, நம் குழந்தை யொருவ னிருப்பதாலன்றோ இவ்வாறு நம்மைத் தேற்றுகின்றான்" என்று அவளுக்குண்டான சோகத்திற் பாதி யன்று குறைந்தது. இன்று கலஹம்ஸன் செய்கையையும் அவனுக்கு நேர்ந்த ஆபத்தையும் அவள் எவ்விதம் ஸஹிப்பாள்? கலஹம்ஸன் இவ்வூரிலிருக்கின் றானோ? அல்லது அரசனது ஆக்ஞையின்படி ஸூரியோதயத்திற்குள் ரத்னத்வீபத்தைவிட்டு எங்கேனும் போனானோ வொன்றும் அறி யாள். அரசன் கன்னிமாடத்தினின்றும் சென்றவுடன் அரசி கன கத்தை யழைத்துவரும்படி செய்தாள். கனகலதை அச்செய்தி கேட்டவுடன் கன்னிமாடத்திற்கு வந்து பார்க்குங்கால் எல்லோ

ரும் கண்ணால் தாரைதாரையாக ஜலம் பெருக்கிக்கொண்டிருந்தார்கள். ஸங்கதியொன்றும் தெரியவில்லை. பிறகு கொஞ்சநேரஞ் சென்றதும் மதனவதி நடந்த வரலாற்றை யாதியோடந்தமாகத் தெரிவித்தாள். கனகத்திற்கு இதைக் கேட்டவுடன் மூர்ச்சையுண்டாயிற்று. அந்த நிமிஷமே பெருங்காற்றில் சாயும் கதலிபோல் கனகம் கீழே சாய்ந்தாள். மதனவதி கனகலதையையாசுவாஸப் படுத்தி யெழுப்பினள். பின்பு கனகத்திற்கு ஒன்றுந் தோன்றாமல் சித்தங்கலங்கியிருந்தாள். இப்போது "கலஹம்ஸன் எங்கு சென்றானோ? அரசன் அவனைச் சூரியோதயத்திற்குமுன்னேயே இந்த ரத்னத்வீபத்தினின்றும் போகவேண்டுமென்று உத்தரவளித்திருக்கின்றானே. ஆகையால் இன்னேரத்தில் கலஹம்ஸன் எங்கிருப்பானோ" என்ற சிந்தை மனத்தை வருத்திற்று. அங்கிருந்து வித்யா மண்டபத்திற்கு விரைந்து வந்தாள். பார்த்தாள். இரண்டு ஹம்ஸ தூலிகைகளிலும் படுக்கைகள் விரித்தபடியே யிருக்கின்றன. இருவரையுங் காணவில்லை. உடனே பெருந்துயர்கொண்டு மைந்தனை நினைந்துருகினாள். ராஜஹம்ஸனும் அவ்விடமில்லாததனால் தன்னை யிந்த ரத்னத்வீபத்தில் தனிமையாகவிட்டு இராவிலேயே யிருவரும் இங்கிருந்து சென்றார்கள் என்று நிச்சயங்கொண்டாள். இவ்விரு குழந்தைகளையுந் தவிர வேறெவருந் தனக்குக் கதியில்லாதிருந்ததனால் அந்த ஸமயத்தில் அவளுக்குண்டான துக்கத்தை என்னென்று சொல்வோம்! தன் தனயன் அரண்மனையிற் செய்த செய்கையினால் இனி யங்கு வஸிப்பதில் பிரியங்கொள்ளவில்லை கனகம். கன்னி மாடத்தில் கண்ணீர்விட்டுக்கொண்டிருந்த கமலினியை இரண்டு வீரர்கள் கத்தியுங் கையுமாக வந்து காவற்கூடத்திற்கு அழைத்துச் சென்று சிறை செய்தார்கள். ரத்னாங்கி யிதைக்கண்டு மனந்துடித்தாள். ஊரிலுள்ளோரனைவரும் இச்சங்கதிகளையெல்லாம் கேள்விப்பட்டுக் கமலினியையும் கலஹம்ஸனையும் நினைத்துத் துக்கத்தால் மிக்க வருந்தினார்கள். "ஐயோ! அவனுக்கும் அயன் இப்படியா விதித்தான்? காலந்தானே அவனை யிவ்வாறு செய்யும்படி யேவிற்று" என்பார் சிலர். "மிக்க அறிவுடையோனாயிற்றே! அவன் இப்படிச் செய்திரான். கமலினியின் நிர்ப்பந்தத்தால்தான் காந்தர்வமணம் புரிந்திருப்பான். ஸந்தேகமில்லை." யென்போர் பலர். "இருந்தாலுமென்ன? அவனும் க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவன்தானே.

எதிற்குறைவுற்றவன்? ஸ்ரீமானல்ல. ஆனாலும், அரசனுக்கோ வேறு ஆண்குழந்தை யில்லை. கமலினிக்கேற்ற கணவன்தான் கலஹம்ஸன். ஏன்? கமலினிக்கேற்ற கணவன் கலஹம்ஸன்தான் என்றேசொல்லலாமே. காந்தர்வமணம்புரிந்ததாற் குற்றமென்ன? அரசனுக்கும் வயதாயிற்றே. இவ்விருவருக்கும் விமர்சையுடன் விவாஹஞ்செய்வித்து மகுடாபிஷேகமுஞ் செய்யலாகாதா" வென்பார் சிலர். சிலமாதர் இதையறிந்து மனங்கரைந்து கண்ணீர்சொரிந்து "பெண்ணாகப் பிறந்தோரு மிச்செய்தியைக்கேட் டுயிர்விடாதிருப்பார்களா? ஐயோ! எண்ணுமற் சம்பவித்ததே" என்பார்கள். சில மங்கையர்கள் "பேதையானவிக் கலஹம்ஸனுக்கா இவ்வருத்தம் வரவேண்டும்? ஆதியிற் பரதேசிபோலிருந்தான். இப்போது தானே கொஞ்சஞ் சுகமடைந்தான். அதற்குள் தெய்வம் பொறுக்கவில்லை" யென்பார்கள். சில வனிதைகள் "ஐயோ! மாரனைப்போன்ற கலஹம்ஸனுக்கும் இப்படிக் கஷ்டம் வந்ததா? மன்மதனேயுருவெடுத்து வந்தானென்னும்படி யத்தனை யழகுவாய்ந்த வந்தச் சுந்தராங்கனைக் கண்குளிரக் கண்டு ஆநந்தங்கொண்டிருந்தோமே! நமது தௌர்ப்பாக்கியந்தானிது" என்று கதறுவார்கள். சேயைப்பிரிந்த தாயைச் சற்று கவனிப்போம். ஐயோ! அரண்மனையினின்றும் இதோ போகின்றாள். இவளைக்கண்டு ஜனங்களெல்லோரும் பரிதபிக்கின்றனர். "ஹா தெய்வமே! ஐயோ தெய்வமே! என் பிராணனைக் கொண்டுபோகக்கூடாதா! இதுவரையில் நான் அநுபவித்த துன்பங்கள் காணாதா? இனி நான் இப்புவியிலிருக்கவும் வேண்டுமா? இன்னும் என்ன பாக்கியிருக்கின்றது? ஒன்றையுங் காணேனே? பதியை யிழந்தேன்! நிதியை யிழந்தேன்! பட்டணத்தையுமிழந்தேன்! பாலர்களையுமிழந்துவிட்டேனே நான் ஈசா! உன் மனமென்ன கருங்கல்லா? உருகாதா? பேயானாலும் வாய்திறந்து பேசிடுமே! என் உயிர் எப்பொழுது போகும்! இவவுயிர் எப்பொழுது நீங்கும்! இப்பாழுந் தேகம் எப்பொழுது உயரற்றுக் கீழே விழும்? நானிருந்த நிலைமையும், என்னருமைக் கண்மணி——ஹா! கலஹம்ஸா!—எனக்குரைத்த மொழிகளும் கனவு கண்டதுபோலாயினவே! இப்புவியில் என்னைப்போல் பெண்பிறந்தோருமுண்டோ! இப்பாழும்ஜன்மத்தை யேன்தான் எடுத்தேனோ? கஷ்டத்திற்குமேற்கஷ்டம் வந்துகொண்டேயிருக்கின்றதே! ஆயிற்று

இவ்வளவுதான். இன்னும் எனக்கு வ வேண்டிய கஷ்டம் ஒன்று மில்லை. கலஹம்ஸா! உன் அதிர்ஷ்டம் எவ்வளவு அழகாயிருக்கின்றதட! "நீ குழந்தை. உன்னிடம் ஒரு ஸங்கதியையும் சொல்லலாகாது' என்று நான் அன்று என்னுது கதையை மறைக்கும்பொழுது, வெகு சாதுரியமாகப் பேசி யென்னிடம் இருந்தெல்லாவற்றையும் அறிந்து, 'அம்மா! இச்செய்திகளையோ இதுவரையில் என்னிடம் கூறாமலிருந்தாய்!" என்று திடுதிடுத்து அந்தப் பாவி ஜயஸேனனை ஹதஞ்செய்வதாகக் கூறி, என்னை எந்தவிதமாகவெல்லாம் ஸமாதானஞ்செய்தாய்? இப்பொழுது இந்த ரத்னத்வீபத்தில் என்னை நிர்க்கதியாகவிட்டுச் சென்றாயே! "நமக்கு வேறு கதி யொருவருமில்லை யென்றாலும் அதிபுத்திசாலியான நமது குழந்தை யிருக்கின்றான். ஸகல ராஜநீதிகளையுங் கற்றவன். மந்திரிகுமாரனும் வெகு சதுரன். இருவரும் சேர்ந்திருக்கின்றார்கள். நமக்கு இந்தக் கஷ்டம்நீங்கும். ஸந்தேகமில்லை." என்றெல்லாம் ஸந்தோஷமடைந்திருந்தேனே! என் பாபம் என்னைவிட்டு நீங்கவில்லையே யின்னும். ஆதலின், இந்த ஜன்மத்தில் இனி யெனக்குச் சுகமென்றதேயில்லை. நீர்க்குமிழிபோல் நிமிஷநேரஞ் சந்தோஷமுண்டாயிற்று. நீ பிறக்கவில்லையென்று முதலில் வெகு துன்பமடைந்தேன். ஒருவாறு நீ பிறந்தாய். ஆனந்தமடைந்தேன். க்ஷணத்தில் வந்துவிட்டனவே பெரும் ஆபத்துக்களெல்லாம். அவற்றையெல்லாம் நினைத்து இப்பொழுது என்னுடல் எரிகின்றதே! எவ்விதத்துன்பங்களை யடைந்தாலும் தெய்வச்செயலால் கடைசியில் உங்களிருவருடன் இங்கு வந்து, நீங்கள் வளர்ந்ததையும், யாசித்ததையும்பார்த்து அகமகிழ்ந்தேன். கலஹம்ஸா! ஐயோ! ராஜஹம்ஸா! உங்களைத்தவிற வெனக்குக் கதி வேறில்லையே! உங்களுக்கிருந்த பௌருஷத்திற்கும் புத்திவைபவத்திற்கும் நீங்கள் என்னையாதரிப்பீர்களென்று எண்ணியிருந்தேனே! என் மனோரதமாகிய மரம் வேரற்று விழுந்துவிட்டதே!" என்றும் இன்னும் பலவாறாகவும் கன்றிழந்த பசுவைப்போல் கதறிக்கொண்டு வீதிகளையெல்லாந் தாண்டி தான் முன்னிருந்தவீட்டிற்கு வந்தாள் கனகலதை. அவ்வீட்டிற்குடையோனான விஜயவர்மனும் அவனது மனைவியும் அவளைப்பார்த்து மனமுருகி அழுது அடித்துக் கடைசியாகக் கனகலதையை யநேக ஸமாதானங்கள் சொல்லித் தங்கள் வீட்டிலேயே முன்போலிருக்கும்படி

வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறு அவளும் அங்கேயே தங்கியிருந்தாள். அங்கங்கள் மெலிந்தன. அன்னமும் வேண்டாள். அதுமுதற் சந்தோஷமென்பதையே யறியாள். அன்றுண்டவுணவுதான். அன்றுடுத்த வுடைதான். அன்றவிழ்த்த தலைதான். காண்போர் கதறுவார்கள். இவ்வாறு கனகலதை யங்கு வஸித்துவருகிறாள்.

## ஸ்தபகம் 14.

ரத்னஸேனனிடமிருந்தநுமதியடைந்த தத்க்ஷணமே, ரத்னத்வீபத்தைவிட்டுப் புறப்பட்ட நம் கலஹம்ஸன் இதோ போகிறான். வெகு விரைவாய் நடக்கின்றான். இது வொரு பெருங்காடு. இவனுக்குச் சஹாயமாய் இவனது நிழல் கூடப்போகின்றதேயொழிய வேறெவரையும் காணவில்லை. எந்தப்பக்கங்களிலும் விருக்ஷங்கள் வளர்ந்து ஆகாயமட்டும் வியாபித்திருக்கின்றன. கரேல் என்று இருள் மூடிக்கொண்டிருக்கின்றது. கதிரவனின் கதிர்கள் புவியில் படவேயில்லை. சிலவிடங்கள் பார்க்க வெகு ரமணீயமாகவிருக்கின்றன. பல பிரதேசங்கள் பார்க்கப் பயமாகவிருக்கின்றன. பக்ஷிகளின் சத்தமொருபக்கம். வெளேரென்று கரும்பாறைகளின் மேற் பாய்ந்து விழும் அருவிகளின் சத்தமோர்பக்கம். ஹோவென்று வீசும் காற்றின் ஆகோஷம் ஒருபுறம். தனிமையான இவ்வனத்தைப் பார்க்கப்பார்க்கக் கலஹம்ஸனுக்குப் பயம் உண்டாயிற்று. அவன் நடந்துசெல்லும் வழியோ வொற்றடிப்பாதை. எதிரேயோர் பிராணி வரினும் ஒதுங்கிக்கொள்ளவு மிடங்கிடையாது. இருபக்கங்களிலும் பாதாளலோகத்திற்கு வழிபோல் பள்ளம். செடிகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. இவ்வழி யொரேமாதிரியாகப் போகவுங்காணோம். பெரும் மேடுகளில் ஏற்றுகின்றது கலஹம்ஸனை. வெகு பயமான பள்ளங்களில் இறக்குகின்றது. பின்னும் கொஞ்சதூரம் சென்றால் உன்னதமான பாறைகளின் சிகரங்களில் கொண்டுபோய் சேர்க்கின்றது. சிலவிடங்களில் நிமிர்ந்து நடந்து போகமுடியாதவண்ணம் விருக்ஷங்கள் தாழ்வாயும் செடிகொடிகளால் தாவப்பெற்றும் வளர்ந்திருக்கின்றன. நம் கலஹம்ஸன், குனிந்தும், உட்கார்ந்தும், உடலால் பாம்புபோல் ஊர்ந்துகொண்டும் போகின்றான். திசை தெரியாமல் தத்தளிக்கின்றான். வேறு வழியையும் காணவில்லை. வெகுதூரம் நடந்தான். எதிரில் மா

னிடப்பிறவி ஒன்றையும் காணோம். செந்நாய், ஓநாய், நரி, புலி, கரடிமுதலிய துஷ்டமிருகங்கள் வழியைக் குறுக்கிட்டு ஓடுகின்றன. மனதிற் பயங்கொண்டிருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் ஒரு விதமான துக்கத்தையும் நினையாமல், ராஜகுமாரன் வெகு விரைவாக நடந்தான். வழியின் மத்தியில் ஓர் ஆறு குறுக்காக வோடிக்கொண்டிருந்தது. இருகரையும்புரண்டு ஓடுகிறது வெள்ளம். கரைகளில் அநேக விருட்சஜாதிகள் வரிசையாக வளர்ந்திருக்கின்றன. இவைகளில் அநேக பட்சிகள் கூடுகட்டி வாழுகின்றன. ஆற்றில் கவிழ்ந்திருக்கும் கிளைகளில் இருக்கும் பறவைகள் நீர் அந்தக் கிளைகளைப் பரிசித்தவுடன் கத்திக்கொண்டு ஓடுகின்றன. பிரவாஹம் வெகு வேகமாய் வருவதால் அநேக மரங்களை வேரோடு தள்ளி யிழுத்துச் செல்லுகின்றது. இதைக் கண்டவுடன், கலஹம்ஸன் அதிக திகிலடைந்தான். ஒன்றுந் தோன்றவில்லையவனுக்கு. இது வரையில் தோன்றாத துயரமெல்லாம் ஒன்றுசேர்ந்து கலஹம்ஸனை மூடிக்கொண்டது. கண்களுக்கு எதிரில் இருக்கும் வஸ்து தெரியவில்லை. காதுகளுக்கு அவ்வனத்தின் கோலாஹலங்கேட்கவில்லை. கால்கள் பதறுகின்றன. நெஞ்சந் துடிக்கின்றது. ஓர் மரத்தினடியில் உட்கார்ந்தான். இவன் கண்களினின்றும் பாயும் நீர் முன்னிலையில் ஓடும் ஆற்றுக்கோர் உபநதிபோற் பெருகி யதனோடு கலந்தது. ஒன்றுந் தோன்றாமல் இப்படியே வெகுநேரம் அம்மரத்தின் கீழ் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். மூர்ச்சையாகிக் கீழே வீழ்ந்தான். மனுஷ ஸஞ்சாரமேயில்லாத விக்காட்டில் இவனை எழுப்புவதார்? இவன் படும் கஷ்டத்தைக்கண்ட காற்று "ஐயோ" வென்று இரக்கங்கொண்டு அண்டையிலோடும் ஆற்றினின்றும் நீர்த்துளிகளை வாரிக் கலஹம்ஸனது முகத்திலும் உடம்பிலும் இரைத்தது. இச்சைத்யோபசாரத்தால் கலஹம்ஸன் கண்விழித்துக்கொண்டான். எழுந்துட்கார்ந்தான். முன்னிலையிலோடும் ஆற்றைக்கண்டு பயங்கொண்டு கண்களில் நீர் பெருக, மனமொரு பக்கமுருக "ஐயோ! தெய்வமே! இதுவும் உன் திருவிளையாட்டோ? நான் இளமையிற்கொண்ட துயர்கள் போதாதோ? இன்னுமெனக் கெவ்விதத் துன்பங்களையெல்லாம் விளைவிக்கப்போகின்றாய்? என் தந்தையை யிழந்தேன். தாயை யிழந்தேன். பிராணநேசனை ராஜஹம்ஸனையும் இழந்தேன். என் காதற்கிளியான கமலினியையு

மிழந்துவிட்டேனே! ஐயோ! அன்று அரசன் என்னைக் கன்னிமாடத்திற்கு இழுத்துச்செல்ல——ஹா! என்னால் நினைக்கமுடியவில்லையே!——இழுத்துச்செல்ல, கமலினீ! நீ யென்ன துயரமுற்றாய்? அதை யெண்ணியெண்ணி யென் மனமுருகுகின்றதே! தேனே! முழுமதிபோன்ற வுன்முகத்தைக் கண்டு ஆனந்தங்கொண்டிருந்தேனே! நீ யென்செய்கின்றாயோ! இருக்கின்றாயோ? அல்லது இறந்தாயோ? என் உயிர்போகவில்லையே யின்னும்?" என்றும் பலவாறாகவும் புலம்பிக் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தான். பின்னுஞ் சிந்தை நொந்து, "ஹே மித்ர! ராஜஹம்ஸ! உன்னிடமுங் கூடச் சொல்லிக்கொள்ளாமல் வந்தேனே நான்! நீ யென்ன நினைத்திருக்கின்றாயோ? 'இவன் விசுவாஸ பாதகன்' என்று நினையாதே. நான் என்ன செய்வேன்? அந்தப் பாவி ரத்னஸேனன் என்னைக் கடுஞ்சொற்களால் அவமானஞ் செய்தான்? மட்டில்லாமற் கொடுத்தாலுந் திட்டுக் கேட்பார்களா? உலகத்திற் சொல்லம்பு வில்லம்பு இரண்டுண்டு. வில்லம்பு பட்டாற் புண்ணை யாற்றலாம். என்மேற் சொல்லம்பு பட்டதே! அவ்வரசன் என்னைச் சொன்ன சொற்களால் என் மனம் பதறிப் பித்தனைப்போலானேன். உடனே யத்தீவைவிட்டுப் புறப்படவேண்டுமென்ற வோரெண்ணமொழிய மற்றொன்றும் என் மனத்தினிடந் தோன்றவில்லை. ஆதலினாலன்றோ உன்னிடமும் மொழியாதொழிந்தேன். ராஜம்! நம் தாயைவிட்டு நீயும் எங்கேனும் போவாயோ? நீயும் அவளைவிட்டுச் சென்றால் அவள் என்னடா செய்வாள்? பாவி, நானிச்செய்கை செய்து அரசனிடத்தினின்றும் அவமதி யடைந்தபின்னும் அரண்மனையிலெப்படியிருப்பாள் கனகம்? வெகு மானவதியாயிற்றே! நீயும் அவளை யனாதையாகவிட்டுச் செல்வாயோ! என் அன்னை இச்செய்தியை யறிந்து என்னை என்ன நினைத்தாளோ? நான் அவளுக்கு என்ன தைரியங்களெல்லாஞ் சொன்னேன் "நம் குழந்தையினி நம்மையாதரிப்பான்" என்று மனமகிழ்ந்திருந்தாளே! அம்மா! உன் வயிற்றில் இப்பாதகன், நானா வந்து பிறக்கவேண்டும்? எனததிர்ஷ்டந்தான் என்ன வதிர்ஷ்டம்? உலகத்தில் பாலையூட்டுவார்கள், பாக்கியத்தை யூட்டுவார்களா? ஈசா! இத்துன்பங்கள் என்னை யெப்பொழுது விட்டுநீங்கும்? கையிலிருந்த கடகத்தைக் கப்பலோட்டிக்குக்கொடுத்தேன். அவன் என்னை யிரவிலேயே ரத்னத்

வீபத்தினின்றும் மறுகரை சேர்த்தான். சேர்த்தவிடத்தில் ஊரையுங்காணோம். யாரையுங்காணோம். அவனிடங் கேட்க, அச்சண்டாளனும் இஃதின்னவிடமென்று சொல்லாமல் "இவ்வழியே போ" வென்று சொல்லிச்சென்றான். கொஞ்சதூரம் மணல்வெளியாகவிருந்தது. பின்பிக்காட்டிற் புகுந்தேன். கடுகி நடந்தேன். காணாது மறைத்ததே. என்செய்வேன்?" என்றும் இன்னும் பலவாறாகவும் பிரலாபித்துக்கொண்டிருந்தான். இதற்குள் நாழிகை பதினைந்தாயிற்று. பசியதிகமாயிற்று கலஹம்ஸனுக்கு. உடனே யெழுந்து, பக்கத்தில் எட்டிப்பறிக்கத்தக்கவுயரத்திற் கட்டி கட்டியான பழங்களிருக்கக்கண்டு அவைகளைப் பறித்தருந்தினான். பக்கத்திற் பிரவஹிக்கும் ஆற்று வெள்ளத்தை யள்ளிக்குடித்தான். பசியடங்கிற்று. படுத்துறங்கினான். சற்றுநேரஞ் சென்றெழுந்தான். ஆற்றில் நீர் பூரணமாகவே போகின்றது. அருகிலுற்றுநோக்கினான். ஓர் மரத்துண்டு கிடந்தது. கையிலோர் கழியை யேந்தி யம்மரத்துண்டைத் தண்ணீரில் தள்ளி யதில் ஏறி யுட்கார்ந்தான். கஷ்டப்படுங் காலமல்லவா? உயிரைத் திருணமாக நினைத்தான். கையிலிருந்த கழியின் உதவியால் நட்டாறுமட்டும் வந்தான். கைதவறிக் கழி யாற்றோடு போயிற்று. வெள்ளத்தின் இச்சைப்படியே மிதந்து கொண்டு சென்றான். கொஞ்சத்தூரஞ் சென்றவுடன், எதிர்க்கரையிலிருந்த வோர் மரம் ஆற்றின் மத்தியிற் கவிழ்ந்திருந்தது கண்டு, தெய்வச்செயலால் தான் ஏறியிருந்ததெப்பமும் அதனருகேசெல்ல, தன் வலக்கையாலம்மரத்தின் கிளைகளிலொன்றைப் பற்றிக்கொண்டான். பொழுது போவதற்கு இன்னுமிரண்டே நாழிகைகளுண்டு. தான் பிடித்த கிளையின் வழியாகவே யேறிப்போய்விடலாம் என்று உயரப் பார்த்தான். வரும்வினைகளொருமிக்க வரும். சற்றுநேரத்திற்குமுன் நீரில் மிதந்துவந்த வோர் கருநாகம் இவன் பிடித்த கிளையிற் சுற்றிக்கொண்டிருந்தது. இதைக் கண்டு கலஹம்ஸன் நடுங்கினான். மேலேறிச் செல்லவு மியலுலாகவில்லை. கீழே குதித்தாலும் ஆற்றுவெள்ளம். மரமேறிக் கைவிட்டவனும் மங்கையர் சொற்கேட்டவனும் கெடுவதில் என்ன ஸந்தேகம்? ஆகையால் வெகு தைரியத்துடன் கலஹம்ஸன் அக்கிளையைப்பிடித்துக்கொண்டிருந்தான். சிறிதுநேரம் பார்த்தான். அரவும் போகவில்லை. இரவும் வந்தது. மிகவும் வருத்தமடைந்தான். அன்றிரவு முழுது

மவ்வாறேயிருந்தான் கலஹம்ஸன். பொழுது புலர்ந்தது. இன்னும் அந்நாக மப்படியே யிருக்கின்றது. கானாற்று வெள்ளஞ்சற்று வற்றியிருந்தது. திடீரென்று ஆற்றிற் குதித்தான். பின்னும் அவ்வாற்றில் கொஞ்ச நீரிருந்ததனால் கலஹம்ஸனுடுத்தியிருந்த வாடை முற்றும் நனைந்தது. சிரமப்பட்டு மறுகரையேறினான். இதற்குள் "இன்னவன் சின்னவன், என்ன செய்கின்றானோ"வென்று பார்க்க வருபவன்போல் கீழ்த்திசையில் கதிரவன் உதித்தான். கலஹம்ஸன் கரையிற் சேர்ந்தவுடன் தன்னாடையை புலர்த்தி யுடுத்துக்கொண்டான். நேற்றிரவி லிவனுக்குப் பசிக்கன்னமில்லை. படுக்கவிடமுமில்லை. ஆதலின், பசியால் மிக்க வாடியிருந்தான். பக்குவமான பழங்களிற் சிலவற்றைப் பறித்தருந்தினான். அயர்ந்து நித்திரை செய்தான். ஐயோ! ராஜ்யத்திற்கு அரசனாகவேண்டிய பருவம். இவ்விதத் துயரங்களையெல்லாம் அனுபவிக்கிறான். வியாதிக்கு மருந்துண்டு, விதிக்கு மருந்துண்டா? அன்றேல், அன்றெழுதினவ னழித்தெழுதுவானோ? படுத்துறங்கியவன், வெயில் மேற்பட்டவுடன் எழுந்தான். முன்போலங்குமோர் ஒற்றைத்தடம் போகக் கண்டான். அவ்வழியே சென்றான். இவ்வாறு கலஹம்ஸன் சுற்றிச் சுற்றிப் பெருங்காட்டில் திரிந்துகொண்டிருக்கின்றானேயொழிய, நகரத்தை நாடும்வழி யொன்றையும் காணவில்லை. என்செய்வான்? மகாரண்யமிது. திரும்பத்திரும்பப் போனவழியே போவதும், கண்டவிடங்களையே காண்பதுவுமாகச் சுற்றிக்கொண்டிருக்கிறான். பிரதிதினமும் அவனதழகிய சரீரம் துயரத்தாலுருகி மிக்க மெலிவுற்று வந்தது. முன் கண்டவர்களிவனை யிப்போது கண்டால் கலஹம்ஸன்தானென்று ஐயங்கொள்வர். யோகிகளைப்போல் காலம் போக்குகின்றான். மகுடம் புனையவேண்டிய சிரசிற் சடைகள் தொங்குகின்றன. அவ்வனத்திலுள்ள பழங்கள்தான் அறுசுவையுடைய ஆஹாரம். தழைகளாலமைத்த தல்பமே ஹம்ஸதூலிகை கலஹம்ஸனுக்கு. இவ்வண்ணஞ் சஞ்சரிக்கின்றான். சில வேளைகளில் தன் உற்றோரை நினைந்துருகுவான். சிலவேளைகளில் எல்லாவற்றையும் மறந்து பைத்தியங்கொண்டவன்போற் பேசித்திரிவான். சில வேளைகளில் கீழே யுட்கார்ந்து "அடி கமலினீ! என்னை யென்னவிதமெல்லாஞ் சொல்லித் துன்பப்படுத்தி மணந்துகொண்டாய்? 'வேண்டாம் அரசனறிந்தால் அனர்த்தங்கள்

விளையும். உனக்குத் தகுந்த நாயகன் நானன்று. என்னைக் கஷ்டப் படுத்தாதே' யென்றேனே. நீ யொன்றையுங் கேளாமல்'உன்னையே மணம் புரிவேன். இல்லாவிட்டால் உயிரை விடுவேன்.' என்றாயே. என்ன துன்பங்கள் ஸம்பவித்தனவோ வுனக்கு? அக்கன்னிமாடத்தினின்றும் நான் அரசனை வணங்கி வெளியே வரும்பொழுது நீ யென்னைப் பார்த்த பார்வை யின்னும் என்னுள்ளத்தை யுருக்குகின்றதே! ஐயோ! நான் என்ன செய்வேன்? உன்னை யெப்பொழுது காண்பேன்? நானும் ஓர் ராஜகுமாரனல்லவா? அப்பாவி ரத்னஸேனன்மட்டு மிதையறிந்தால் என்னை யவமதித்துத் திரஸ்கரிப்பானோ? எவ்விதத்தில் நான் உனக்குத் தகுந்த புருஷனல்லேன்? அடி கமலாட்சி! கமலமுகி! கமலினீ! நீ யென்னை யென்ன நினைத்திருக்கின்றாயோ? அறியேனே; எனக்கு எப்பொழுதும் உன் நினைவைத் தவிர வேறு நினைவில்லையே! என் இன்னுயிர்த் தோழி! எவ்விதமாவது சந்திரபுரஞ் சென்று சண்டாளனான ஜயஸேனனை ஹதஞ்செய்து உன்னைத் திரும்பவும் காணலாமென்றாலோ, நடந்து நடந்து காலுக்குக் கடுப்பே தவிர கண்டபலனொன்றில்லையே! என் செய்வேன்! நடுவனத்தில் அகப்பட்டு நான் படும் கஷ்டங்களுக்கு முடிவுவரவில்லையே! காலைப்பிடித்த சனி காட்டிலன்றோ சுற்றியடிக்கின்றது? சீ! இனி யுன்னை நான் நினைப்பதில்லை. உன் வார்த்தையைக் கேட்டதனாலன்றோ இவ்வாறெல்லாம் துயரப்பட நேர்ந்ததெனக்கு? பெண்புத்தி கேட்கிறவன் பேய். பெண்டாட்டி கொண்டதும் போதும், திண்டாட்டம் பட்டதும் போதும். எனக்கினியொன்றும் வேண்டுவதில்லை. இப்படியே இவ்வனத்திலிருந்து துறவிபோல் காலந்தள்ளுகிறேன்" என்றும் இன்னுமநேகவிதமாகவும் புலம்பி யழுவான். என்னவிதமெல்லாந் தன்னைச்சமாதானப் படுத்திக்கொண்டாலும், கமலினியை மறக்கக் கலஹம்ஸனால்முடியவேயில்லை. நிமிஷத்திற்கோர்முறை, மின்னற்கொடிபோன்ற கமலினியின் சரீரலாவண்யத்தையும், சந்திரபிம்பம்போன்ற முகத்தின் அழகையும், கொவ்வைக்கனிபோன்ற செவ்வதரத்தின் ராமணீயகத்தையும், விற்கொடிகள் போன்ற புருவங்களின் ஸௌந்தர்யத்தையும் நினைத்து நினைத்து உள்ளமுருகினான் கலஹம்ஸன். அவளது அளவற்ற புத்திசாதுரியமும் அன்னாளில் அவள் மொழிந்த கன்னல் மொழிகளும் அநுக்ஷணமும் அவன் மனதிற்றோன்றி மயங்கினான். மாரனைப்போன்ற ராஜகுமாரன் இவ்வாறலைந்து திரிகை

யில், கொஞ்சமும் களங்கமின்றித் தூய்ய வெண்ணிலவு வீசுமோர் நாளிரவில் தன்னருமைக் காதலியை நினைத்து ஆறாத் துயரமுற்று "என் கட்டிக்கரும்பே! கட்டாணிமுத்தே! காதற்கிளியே! கோதையர் திலகமே! கமலினீ! ஹா! கமலினீ! உன்னைக் காணாமல் எவ்வாறடீ நான் உயிர்தரித்திருப்பேன்? என்னன்னமே! இன்னுமிவ்வுயிர் போகவில்லையே! கல்லினுங் கடினமாவென்னெஞ்சம்? இரண்டாக வெடிக்கவில்லையே? ஐயோ! ஓர்நாளிரவில் நானுன்னிடம் விளையாட்டாகக் "கமலினீ! நான் உன்னை யிங்குவிட்டு எனது தேசஞ்சென்று வருகிறேன்" என்றவுடன், உன் கன்னங்கள் வெளுத்தன. கங்கணங்களுடைந்தன. கண்ணீர் வெந்நீராய்ச் சிந்தியது. இன்னும் அச்சமயத்தில் நீ யடைந்த துன்பத்தை யென்னால் சொல்லமுடியவில்லையே யிப்பொழுது? உன்னை ஸமாதானஞ் செய்ய என்ன பிரயாஸப்பட்டேன் நான்? என் கற்பகக்கொடியே! இப்பொழுதெவ்வாறு நீ யென் பிரிவை ஸஹித்திருக்கின்றாய்? ஹா! எனக்கொன்றும் தோன்றவில்லையே! அம்மம்ம! என்னுடலெரிகின்றது! இதோ என்னுவி போகின்றது! பாவி யொழிந்தேன்! ஹா, கமலினீ! என்றலறிக்கொண்டு கீழே சாய்ந்தான். நம் கதாநாயகியான கமலினியின் நிலைமையைச் சற்று கவனிப்போம். கடுங்காவலிலகப்பட்டுக் கமலினி கஷ்டப்படுகின்றாள். நங்கமலினியின் கஷ்டத்தை யெடுத்துரைக்க மனந்தாளவில்லை. கலையைப்பிரிந்த மான் போலானுள். நறுமணமலர்சூடுங் கூந்தல் ஒரே சடையாயிருக்கின்றது. முகமெனும் முழுமதியைத் துன்பமெனும் கரும்பாம்பு கவர்ந்திருக்கின்றது. கண்களெனும் கெண்டைமீனிரண்டும் கண்ணீரில் நீந்துகின்றன. இதழ்போன்ற செவ்வதரம் பெருமூச்சாற் கறுத்தது. ஏங்கியேங்கி மலம் பதைக்கின்றது. இடக்கையில் முகத்தை வைத்திருக்கின்றனள். முதலில் துளித்துளியாகவிருந்து, பிறகு சிற்றாறுபோலாகி யதன்பின்னருவிபோற் பாய்ந்துவிழுகின்றது கமலினியின் கண்ணீர். உண்பதில்லை. உறங்குவதுமில்லை. கணவனை யெண்ணி மனமுருகுகின்றது மயில்போன்ற கமலினிக்கு. கீழே வீழ்கின்றாள். மறுபடி யெழுந்திருக்கின்றாள். பின்னும் வீழ்கின்றாள். இன்னும் எழுந்திருக்கின்றாள். அன்னமின்றி யங்கங்கள் மெலிந்தன. சிலவேளை மௌனமாயிருக்கின்றாள். பலவேளை "ஐயோ" வென்றலறுகின்றாள். மூர்ச்சித்துச் சாய்கின்றாள்.

(இன்னும் வரும்.)

துப்புசாமி ஐயர்.

# ஸர். எஸ். சுப்ரமணிய ஐயர்
## கெ. ஸி. ஐ. இ.

சென்னை ஹைற கோர்ட்டில் இதுகாறும் நீதியதிபராயிருந்து இப்பொழுது ரிடயராயிருக்கிற ஸர். ஸுப்ரமணிய அய்யர் அவர்களின் வைபவத்தைப்பற்றி நமது தென்னிந்தியாவில் கேட்காதவரில்லை. இம்மஹான் மதுரைமாநகரத்தில் அந்தணர்குலத்திற்றோன்றியபுண்ணிய மூர்த்தி. "விளையும் பயிர் முளையிலே" என்றவண்ணம் இவர் இளமைதொட்டே கல்வியில் ஊக்கமுடையவராய் அதிசீக்கிரத்தில் பேரும் பிரஸித்தியும் பெற்றார். இவரோடு நன்றாய்க்கலந்து பழகினவர்களெல்லோரும் இவரை மணி அய்யரென்று சொல்லுவதே வழக்கம். இவர் 1842-ல் பிறந்தார். அதிபால்யத்தில் இவரது தந்தை பரலோகஞ் சென்றதனால் இவர் தமயன்மார்களிருவரும் இவரைக் கண்ணை இமைகாப்பதுபோலப் போற்றி வந்து கல்வியில் வல்லவராக்கினார்கள். அவர்களில் ஒருவர் மதுரைஜில்லா

கலெக்டர் ஆபீசில் சிரஸ்ததாராகவும், இன்னொருவர் சிவகங்கை ஜமீனில் மானேஜராகவும் வேலைபார்த்துக்கொண்டிருந்தார்கள். ஐம்பது வருஷங்களுக்கு முன்னே கூட இந்துக் குடும்பங்களெல்லாம் ஒற்றுமையாகவே யிருந்தன. தந்தை, தாய், சிற்றப்பன், பெரியப்பன், அண்ணன் தம்பிமார்கள், இவர்களின் மனைவி யக்கள் ஆகிய எல்லோருமே நகமுஞ் சதையும்போல் எத்தனையோ ஒற்றுமையாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

எக்காலத்திலும் "உத்தியோகம் புருஷலக்ஷணம்" என்றபடி, திரைத்தனத்திலமர்ந்து வேலைபார்ப்பதென்றால் நம்மவர்களுக்கெல்லாம் அது ஓர் பெருமையென்று கொண்டாடப்பட்டு வருவது வழக்கம். அந்த வழக்கத்தையே அநுஸரித்து, இவர் கல்வியில் தேர்ச்சியடைந்தவுடன் ரிவினியூ இலாகாவிலமர்ந்து, அதிபாலியத்திலேயே தமது ஸாமர்த்தியத்தினால் தாசில்வேலையும் பெற்றார்.

ஆயினும், இவர் சிறந்த விவேகியாதலால், அந்த வேலையிலிருந்தபடியே வாய்க்கும்போதெல்லாம் சட்டங்களைப் படித்து பி. எல். பரீக்ஷையிலுந் தேர்ந்தார். அதன் பின்பு தீர்க்காலோசனை செய்து இப்படியே இருந்துவிட்டால், பின்பு தமது புரோவிர்த்திக்கு வழியில்லையென்றுதுணிந்து அந்த வேலையை ராஜீநாமாக்கொடுத்துவிட்டுச் சிறிதுகாலம், வக்கீலண்டை உமேதுவார் செய்துவிட்டு 1869-ஸ்ரீ நவம்பர்ஸ்ரீ 15உ சென்னை ஹைகோர்ட் வைக்கீல்வேலையில் அமர்ந்துகொண்டார். ஆயினும், மதுரை ஜில்லா தமது ஜன்மபூமியாதலாலும், அதுபற்றி அங்கே தமக்கு நல்ல செல்வாக்காதலாலும் அங்கேயிருந்துகொண்டே வேலை பார்ப்பது தமக்கழகாகுமென்று நிச்சயித்து மதுரைக்கே சென்றுவிட்டார். அங்கே தமது தூங்காமுயற்சியாலும், அஞ்சாத ஆண்மையினாலும், ஸாமர்த்தியத்தினால் அதிசீக்

கிரத்தில் மற்றெல்லோரிலும் மேன்பாடுடையவராய் அந்த ஜில்லா கோர்ட் வைக்கீல்களுக்கெல்லாந் தலைவராய்த் தமது குடும்பத்தார் மனங்களிக்கப் பெருமை பெற்றார். அது முதல் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் வரும் பெரிதான வியாஜ்யங்களிலெல்லாம் வாதி தரப்பிலோ அல்லது பிரதிவாதி தரப்பிலோ இவர் ஸம்பந்தப்படாதிருப்பதில்லை.

இவரது அதிர்ஷ்டத்துக்கேற்றபடியே அக்காலத்தில் திருவனந்தபுர ஸமஸ்தானத்தில், கஜானாவின் தலைவராயிருந்தவர் ஸர்க்கார் பொக்கிஷத்திலிருந்து பெருந்தொகையை யபகரித்துக்கொண்டுவிட்டாரென்று பெரிதான புகாருண்டானதினால், அந்த ராஜவம்சத்தார் அந்த விசாரணைக்கென்று தனியே ஒருகோர்ட்டை ஸ்தாபித்து, அதில் தங்களுக்காக வாதிக்கும்படி இவரையே நியமித்ததனால், பெருங்குன்றத்தின்மேலேற்றிய தீபத்தைப்போல இவர் கீர்த்தி தென்னிந்தியா முழுவதிலுமே பரவிவிட்டது.

இவ்வாறு இவர் பதினைந்து வருஷமளவும் தக்ஷிணத்திலுள்ள ஜில்லாக்களில் நல்ல பெயர் வாங்கி வேண்டியபடியெல்லாம் எத்தனையோ கௌரவமாய்ச் சம்பாதித்தார். இவர் மதுரையில் இருந்தகாலத்தில் அந்நகரத்தின் முனிஸிபல் சேர்மானாக விருந்ததுமுண்டு. இவ்வாறிருக்கையில் மதுரை ஜில்லாவில் (Mr. Philip Hutchins) மிஸ்டர். பிலிப் ஹட்சின்ஸ் என்னும்நிபுணர் ஜட்ஜியாகவரஅவர், இவரிடத்திலுள்ள பெருந்தன்மை, நீதிதவறாமை, ஆர்ஜவம், உறுதி முதலிய உத்தம குணங்களைக் கண்டு புகழ்ந்து இவரைச் சட்ட நிர்ணய ஸபையில் ஒருவராக நியமிப்பது தகுமென்று கெவர்ன்மெண்டுக்குச் சிபார்சு செய்ததில், அந்தப்படி அந்த வேலை கொடுக்கப்பட, இவர் இதுதான் ஏற்ற ஸமயமென்றெண்ணி அதுமுதல் சென்னைக்கே சென்று அங்கேயே வேலைபார்க்கத் தலைப்பட்டார்.

அதுமுதற்கொண்டு இவரது பேராற்றல் முன்னிலும் அதிகமாக எங்குமே பரவியது.

இவருக்கு முதன்முதலில் அங்கே கெவர்ன்மெண்டு பிளீடர்வேலை கொடுத்துப் பார்த்ததில், இவர் அந்த வேலையைப்பார்த்துவந்த ஸாமர்த்தியத்தைக்கண்டு இவரே அந்த வேலைக்கு ஏற்றவரென்று கெவர்ன்மெண்டார்புத்தியில் நன்ருய்ப்பதிந்தது. அதுமுதல் அந்த வேலை எப்பொழுது காலியானலும் அதை இவரைக்கொண்டே பன்முறை பார்க்கும்படிச்செய்தார்கள். தஞ்சாவூர்ஜில்லாக் கோர்ட்டில் சிலநாளைக்குமுன்னே நடந்த தப்பு தஸ்தாவேஜ் கேஸில் இவர் விசாரணை செய்த அழகும் திறமையும் நாடெங்குமே நன்ருயறிந்த விஷயமாம்.

இப்படியே இவரது பிரஸித்தி இத்தென்னிந்தியாமுழுவதுமே வியாபித்து, சட்டங்களின் உள்ளுரையான பொருளை யறிந்து நிர்ணயிப்பதில் நமது தேசத்தில் ஒப்புயர்வில்லாத மஹாபுருஷனென்று எல்லோராலுமே என்றுங் கொண்டாடப்பட்டுவருகின்ற உத்தமனை ஸர். வி. பாஷ்யமய்யங்காரைப்போலவே இவருமானர். நம்துராஜதானியில் எந்தப் பெரிய வியாஜ்யங்களிலும் இவ்விரண்டு ஸிம்மங்களும் ஒரேகக்ஷியில்சேர்ந்தாயினும், அல்லது எதிர்க்கக்ஷியிலாயினும் வகாலத்துப்பெற்று வாதியாதிருப்பது அரிது.

சென்னையில், இந்து ஜட்ஜிகளில் அதிநிபுணரென்று நெடுங்காலமாகப் பேர்பெற்றிருந்த ஸர். டி. முத்துஸாமி அய்யர் 1891ஞு ரஜாவாங்கிக்கொண்டகாலத்தில், முதல் முதல் இவரே அந்த வேலையில் அமர்த்தப்பெற்ருர். இவர் தமக்கு எப்பொழுதுமேயுள்ள வழக்கப்படி அந்த வேலையையும் நன்ருய்ப் பார்த்துவந்தாராதலால், எந்தச் சமயத்திலும் அந்தவேலைக்கு இவரே தகுதியானவரென்று யாருமே உறுதியா யெண்ணும்படியாயிற்று. இவ்வாறிருக்கையில்,

1895ம் ஹு த்தில் ஸர். டி. முத்துஸாமி அய்யர் தேகவியோ கமானபோது, எல்லோர் மனமுங் குளிரும்படி இவரையே அந்த வேலையில் கெவர்ன்மெண்டார் காயமாக நியமித்தார்கள். இந்த நிர்வாகமானவேலையை இவர் ஸர்வஜாக்கிருதையாய்ப் பன்னிரண்டு வருஷ காலமளவும் கண்டோர் கேட்டோரெல்லோருமே நன்று நன்றென்று கொண்டாடும்படி தராசு முனைபோலிருந்து தீர்மானங்கள் செய்துவந்தார். இவரைப்போல வஞ்சனையில்லாமல் அல்லும்பகலுமுழைத்து, நடுவு நிலைமை கோடாது வியாஜ்யங்களை நன்றாய்ப் பரியாலோசனை செய்து, இருவரும்பொருந்த வழக்குத்தீர்த்து வந்த கண்டிப்பானநியாயாதிபதிகள் மிகவுஞ்சிலரேயாவார். இவரும், ஸர். பாஷ்யமய்யங்காரும் ஏககாலத்தில் ஹைகோர்ட்டில் நியாயாதிபதிகளாயிருந்து இந்நாட்டாரின்வழக்குகளை யுனுஸரித்து நன்றாய்த் தீர்மானங்கள் செய்துவந்ததானது நமது நாட்டிற்கே நலமாயிருந்ததென்று நாம் துணிந்துரைக்கலாம். அஸலிலோ, அப்பீலிலோ எந்த விசாரணையிலும் இவர் வெகு திறமையாய் விசாரித்துத் தீர்மானிப்பார்.

மனோதைரியத்தில் இவர் அஞ்சாத தீரன். இவருக்கு காங்கிரஸ் தோன்றியதுமுதற்கொண்டே அதனிடத்துப் பற்று அதிகம். இவர் 1891-ஹு அதன் தலைமையை வகிப்பதாகவும் ஒப்புக்கொண்டார். ஆனால்,இவருக்கு ஹைகோர்ட்டில் நியாயாதிபதி வேலையானது முதற்கொண்டு தான் ராஜதந்திரக்ஷயநுஸரித்து அதில் பட்டதும்படாததுமாயிருக்கவேண்டியதாயிற்று. இவர் அஜாத சத்துருவாதலால், இயல்பாகவே யாரைக்கண்டாலும் நகைமுகங் கொண்டுகுளிர்ந்து வார்த்தைசொல்லுபவர். அதனால், நியாயஸபையிலாகட்டும், அல்லது இன்னும் வேறு எங்குத்தானாகட்டும் எல்லோர்க்கும் இனியவரென்ற நல்லபேர் வாங்

கிவிட்டார். தாமே நெடுங்காலம் வைக்கீலாயிருந்தவராதலால், எவ்வகையான சிக்கலான வியாஜ்யங்களாகவிருந்தாலும் அவற்றை வாதிக்கின்ற வைக்கீல்கள் கண்டு ஆச்சரியப்படும்படி, குறிகாரன் குறிசொல்லுவதைப்போல அவற்றின் ஸாராம்சத்தை ஒருநொடிப்பொழுதிற்குள்ளே யறிந்துகொண்டு நியாயத்தினின்றும் அவஸரப்பட்டு எள்ளத்தனையும் பிறழார். வழக்குகளைத்தீர்மானிப்பதில் ஸ்வதேசிகளென்றும் அயலாரென்றும் வேற்றுமை பாராட்டாமல் கறந்தபால் கறந்தவண்ணம் உள்ள நியாயத்தின்படி தீர்ப்பளிப்பது இவரது நீங்கலிலாக் கொள்கையாம். ஆதலினால், இவரிடத்தில் மற்ற நியாயாதிபதிகளுக்கும், வைக்கீல்களுக்கும், கக்ஷிக்காரர்க்கும், இன்னும் மற்றியாவர்க்குமே சொல்லுவதற்கரிய அவ்வளவு அதிகமான கௌரவமுண்டு. சட்டங்கள் நாளுக்குநாள் புதிது புதிதாக வேற்படுத்தப்பட்டுப் பழயசட்டங்களெல்லாம் மாறிக்கொண்டேவருகிறபடியால் இவர் அதிக ஜாக்கிருதையாயிருந்து அவற்றையெல்லாம் நன்றாய் ஆராய்ந்துகொண்டே வருவதால் இவருக்கு வழக்கமாதல்பற்றி அதுவிஷயத்தில் இவர் ஒருமுந்திரியளவுகூடத் தப்பிப்போனது கிடையாதெனலாம். இவர் எழுதின தீர்ப்புகளெல்லாம் அதிக ஸாரமுடையனவாயிருத்தலால், எந்த நாட்டாரும் இவற்றை யெடுத்து மேற்கோளாக வழங்குவதுமுண்டு. இளமைமுதற்கொண்டே இவரிடத்தில் தேசாபிமானங்குடிகொண்டிருந்ததென்பதற்கு, இவர் தஞ்சாவூர்ஜில்லாவில் நீடாமங்கலத்தண்டையில் தமது கிராமத்தில் வெகுகாலத்துக்குமுன்பே நெல்லுக்குத்துவதற்கென்று ஓர் யந்திரசாலையை ஸ்தாபித்திருக்கிறாரென்பதொன்று மட்டுமே போதுமான நிதர்சனமாகும்.

இவர் ஆழ்ந்த வேதாந்தி; எந்தப் புத்தில் எந்தப் பாம்பிருக்குமோவென்று பயந்து, எந்த மதத்தையும்வெறுக்கா

மல் ஸாரமாயிருப்பனவற்றைமட்டுமே கைக்கொள்ளுகின்ற ஸ்வபாவமுள்ளவர். இத்தனைநாளாய் ஆரஅமர நன்றாய் வேலைபார்த்துவந்த இவ்வுள்ளால் இன்னும் ஏழுமாதகாலம் அந்தவேலையிலிருந்திருப்பாரேயாயின் இவருக்கு வருஷமொன்றிற்கு ரூ. 18,000 பென்ஷன் கிடைத்திருக்கவேண்டும். ஆனால், தேகஸௌக்கியங் குன்றியிருந்ததைக்கண்டு பணத்தைப் பாராமல் குறைந்த சம்பளமானாலும் கிடைத்தமட்டிலும் போதுமென்று திருப்தியடைந்து தாமே வேலையை விட்டுவிட்டார்.. இவருக்கு ஸிவில் கிரிமினல் ஆகிய இவ்விரண்டிலும் சிறந்த பாண்டித்தியமுண்டு. ஹைகோர்ட்டில் தலைமை நியாயாதிபதி வேலை காலியானபோதெல்லாம் அந்த ஸ்தானத்தில் கெவர்ன்மெண்டார் இவரையே இரண்டு மூன்றுமுறை உயர்த்தி உலகம் புகழும்படி கௌரவப்படுத்தியுமிருக்கிறார்கள்.

சென்னை ஸர்வகலாசாலையில் உன்னதபதவியை வகித்து, வித்தியா விஷயமாக நமது நாட்டாருக்கு இவர் பண்ணியிருக்கின்ற உபகாரம் எத்தனையோவுண்டு. நமது தேசத்தாரின் ஆகம சாஸ்திரங்களில் இவருக்குப் பூர்ணமான பற்றுண்டாதலால், மற்றவர்களைப்போலல்லாமல், ஆசாரச்சீர்திருத்தங்களை எத்தனையோ ஜாக்கிரதையாயுட்புகுந்து சீர்திருத்திக்கொண்டே வருகின்றார். தான தருமங்களைச் செய்வதில் இவருக்கு எந்நாளுமே அதிக ஊற்றமுண்டு. இத்தனை பெருந்தன்மையுள்ள இந்தப் புண்ணிய புருஷன் இன்னுஞ் சிறிதுகாலமளவும் வேலையை விட்டுவிடாதிருக்கும்படியிருந்தால் நமதுதேசத்தாருக்கு இன்னும் எத்தனையோ நல்லநல்ல நீதியான தீர்மானங்களெல்லாம் கிடைப்பதாயிருக்கும்.

ஆதலால், நாமெல்லோரும் இந்த மஹாபுருஷனுக்கு நல்லதேகபலமுண்டாகி, அரோகத்ருடகாத்திரராகவிருந்து

இன்னும் நெடுங்காலமளவும் ஸுகமாக வாழ்ந்திருக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பது நமது கடமையாகும். இவ்வாறான தேசாபிமானிகள் எத்தனைக்கெத்தனை யதிகமிருப்பார்களோ அத்தனைக்கத்தனை நமது தேசத்திற்கு சாச்வதமான நன்மை விளையுமென்பது திண்ணமேயாம்.

அன்பில் ஸ்ரீ. வேங்கடாசாரியர்.





# அத்தையம்மாள். அன்னபூரணி.

வேகவதியாற்றின் வடகரையிலுள்ளது வாதராஜமங்கலம் என்றவோர் சிற்றூர். அவ்வூரில் ஒரு சிறிய திண்ணைப்பள்ளிக்கூடமொன்று வைத்துக் காலக்ஷேபம் செய்து வந்தார், நாராயணம்பிள்ளை யென்றவோர் ஏழை வேளாளர். அவர் அதிக குணவானென்றுபேர் பெற்றிருந்தபடியால், அடுத்த வூர்நாட்டாமைக்காரராகிய சுந்தரம்பிள்ளையென்னும்தனிகர் தம்மகள் ஆனந்தவல்லியை நாராயணம்பிள்ளைக்கு முறைப்படி விவாகஞ்செய்வித்தனர். ஆனந்தவல்லி வந்ததும், அதிருஷ்டவல்லியே வந்தது போலாயிற்று, நாராயணம்பிள்ளைக்கு. சீருடனும் செல்வத்துடனும் வாழ்ந்துவந்த தம்மகள் ஏழைவேளாளருக்கு வாழ்க்கைப்பட்டதினால் எங்கே ஒருவேளை கஷ்டப்படுவாளோ என்று பயந்து, சுந்தரம்பிள்ளை ஆனந்தவல்லிக்கு ஏராளமான பணங்கொடுத்தனர். சுமார் இரண்டு மூன்று லக்ஷம் இருக்கலாமென்று அவ்வூரார் சொல்லிக்கொண்டனர். நாராயணம் பிள்ளையும் செல்வம் வந்ததும் அறிவீனரைப்போல் தலைகவிழ்ந்து விடாமல், தம்முடைய பூர்வோத்தரமான வித்தியா தானத்தை முன்னிலும் பன்மடங்கு அதிகமாய்ச் செய்துவந்தனர். ஊனும் உடலும் போன்று ஒருமித்து வாழ்ந்துவந்த ஆனந்தவல்லிக்கும் நாராயணம்பிள்ளைக்கும் இருவர் புதல்வர் உதித்தனர். அதிக செல்வவான் வீட்டுப்பெண்ணாகையால், ஆனந்தவல்லி ஊராரை லக்ஷியம் பண்ணமாட்டாளென்று எல்லோரும் கொண்டிருந்தவெண்

ணம் தப்பாய்முடிந்துவிட்டது. ஏனெனில், அவளைப்போன்ற தயாளகுணமும், உதாரத்துவமுமுள்ள உத்தமஸ்திரீ வேறொருத்தியைக் காண்பதரிது. அவள் குழந்தைகளும் அவளைப்போலவே யிருந்தன. அடுத்தவீட்டுக் குழந்தைகளைக் காரணமின்றி அடிப்பதும் வைவதுமான துஷ்டத்தனங்கள் அவர்களிடத்து இல்லவே இல்லை. ஆனால் ஆனந்தவல்லியின் நற்குண நற்செய்கைகளால் வரதராஜமங்கலம் பயனடையத் தவஞ்செய்யவில்லை. ஏனெனில், இரண்டாவது மகன் பிறந்தது முதல் வியாதியினால் பீடிக்கப்பட்டு இரண்டு மூன்று வருஷங்களுக்குள் அவள் பரலோகம் சேர்ந்துவிட்டாள்.

அவளுடைய சீதனமாகிய நகை நட்டுக்களும் பணமும் சேர்ந்து சுமார் லக்ஷரூபாய்க்கு மேலாகவிருந்ததை, தன் இருபுதல்வர்க்கும் சமபாகமாய்ப் பிரித்துக்கொடுத்துவிடும்படி தன் கணவனை வேண்டிக் கொண்டு இறந்தாள். நாராயணம்பிள்ளையும், பிறர்பொருளைத் திரணமாய் நினைப்பவராதலால், அவ்வாறே செய்வாரென்று எல்லோரும் எண்ணியிருந்தனர். பணத்தை சென்னை "ஆர்பெத்நட்" கம்பெனியில் வட்டிக்கு விட்டிருந்ததில் வருஷம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்க்குமேல் வட்டி வந்துகொண்டிருந்ததென்று கேள்வி.

நாராயணம்பிள்ளைக்கு தங்கையொருத்தி யிருந்தாள். அவள் பெயர் அன்னபூரணியம்மாள் என்பது. அவள் வைதவியத்தை யடைந்து பதினொரு வருஷங்கள் ஆய்விட்டன. தன்னொரு மகளுடன் அவள் காஞ்சிபுரத்துக்கருகில் வாழ்ந்து வந்தாள். அவளும் ஏழை, அவள் புருஷனும் இறந்துபோகும்போது அதிகமான ஆஸ்தியொன்றும் வைக்காமற்போனபடியால், இருந்ததைக்கொண்டு வயிறு வளர்ப்பது பெரும்பாடாயிற்று, அவளுக்கு. இதனாலேயே அவள் அடிக்கடி வரதராஜமங்கலத்துக்கு வந்துபோவாளாயினள். தீபாவளி ஸங்கராந்தி, வருஷப்பிறப்பு முதலிய விசேஷங்களுக்கு இரண்டுமாத முன்பேயே வரதராஜமங்கலத்துக்கு வந்திருந்து, அவைகள் கழிந்து இரண்டொரு மாதங்களுக்குப் பிறகுதான் ஊருக்குப் புறப்படுவதைப் பற்றி யோசிக்கத்தொடங்குவாள். அவள் தன்னூரிலேயே விருந்த நாள்களைக் கணக்கிடுவதற்கு, ஒற்றைக்கைவிரல்களே போதுமானவையென்று கணிதசாஸ்திரத்தில் "ஸீனியர் ராங்ளர்" ஆகத்தேறிய நமது நண்பர் ஒருவர் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்.

பொறுமையே உருவெடுத்து வந்தாற்போன்றுள்ள ஆனந்தவல்லிக்கும் அன்னபூரணியின் குணங்கள் சரியானவையெனத் தோன்றவில்லை. அன்னபூரணிக்கும், வஞ்சனை, பொய், சூது, மாயம் இவைகளுக்கும் அத்தியந்த சிநேகம். ஆதலால் ஆனந்தவல்லியும் அவள் நாத்தியும் ஒரு மனப்பட்டு வாழவில்லை. பயந்த சுபாவமும் எளிதிலேயே பிறர் வசப்படும் குணமுடையவர்களுள் முதன்மை பெற்றவராகிய நாராயணம்பிள்ளையும், தன் தங்கை எப்போதும் குருட்டுயோசனை செய்பவள் தானென்றும், ஆனால் நல்லமனமுடையவளென்று தான் எண்ணியிருப்பதாயும் தம்மனைவியிடத்துச் சொல்லியிருக்கிறார்.

ஆனந்தவல்லி இவ்வுலக வாழ்க்கையை விட்டகன்றதும், அத்தையம்மாள் அன்னபூரணிக்குச் சர்வமானியம் விட்டதுபோலாயிற்று. தன் மகள் பாலாம்பாளோடு தான் நினைத்தபோது வரதராஜமங்கலத்துக்கு வருவதும், அநேகநாள் அங்கேயே வாழ்வதும் அவளுக்கு இயற்கையாய்விட்டன. சிறியவடிவம், பொறுமையைத் தோற்றுவிக்கும் முகம், சாதாரணமான ரூபலாவண்யம் இவைகளையுடைய அன்னபூரணியம்மாள் தான் பிடித்ததைச் சாதிக்கும் குணமுடையவளாகவிருந்தாள். அவள் இரைந்துபேசுவதே கிடையாது. மிகுந்த மரியாதையுடனும் உபசரிப்புடனும் யாரிடத்தும் பிரியமாய்ப்பேசுபவளாகையால், அவளைக்கண்டதும் எல்லாரும் பழகிவருவார்கள். சிறுவர்களைக்கண்டால், "அப்பா" என்றும் "துரையே" யென்றும், "கண்ணே" யென்றும், பெரியோர்களைக் கண்டால் "அய்யா" என்றும் "நீங்கள்" என்றும் வெகு வெளியன்புடனேயே பேசுவாள். நாராயணம்பிள்ளையின் புத்திரர்களான அனந்தராமனும், நடேசனும், அன்னபூரணியம்மாளை "அத்தை" யென்றே கூப்பிட்டுவந்தனர்.

இருவரும் பாலாம்பாளைக் கொண்டாடினர். பாலாம்பாளைப் பார்த்தபின் வேறு யாரைப்பார்த்தாலும் அவர்கள் எல்லோரும் அழகில் குறைந்தவர்கள் என்றே தோன்றும். அவள் அழகைப்பற்றி வர்ணிப்பது முடியாததாகும். முகத்தில் எப்போதும் ஒளி வீசும் கருணைக்குறியும் சற்று பயந்த சுபாவமும் உடையவளாயிருந்தாள். எப்போதும் படிப்பிலேயே கண்ணும் கருத்துமாயிருந்த அனந்தராமன் அவளுக்குப் படிப்புச்சொல்லிக் கொடுப்பான். அவளைக் காட்டிலும் இரண்டு மூன்று வருஷங்கள் மூத்தவனான நடேசன் அவளை வெளியில் அழைத்துக்கொண்டு போய், வயல் வெளிகளிலும், தோப்புகளிலுமுள்ள

காய், கிழங்கு பழங்களைப் பறித்துக்கொடுத்து; அங்குள்ள விநோதங்களையெல்லாம் காட்டியழைத்து வருவான். வீட்டுக்கு வரும்போது பாலாம்பாளின் சிற்றாடை பலவிடங்களில் முட்களாலும், கொம்புகளாலும் கிழிந்துபோயிருக்கும். அடிக்கடி கீழே சறுக்கியும் தடுக்கியும் விழுவதால் முழங்தாள்களிரண்டும் காயமாகவிருக்கும். "நல்ல பெண்கள் இவைகளையெல்லாம் பொறுத்துக் கொள்ளுவார்கள்" என்று அவன் அடிக்கடி சொல்லுவானதையால், தன் காயங்களைப் பொறுத்துக்கொண்டே பாலாம்பாள் அவனுடன் ஒடியாடி விளையாடுவாள். நடேசனுக்கோ, காயமும் புண்ணும் லக்ஷியமாகத் தோன்றவில்லை. பயமென்பது இன்னதென்று கூட அவனுக்குத் தெரியாது. அவனுடனிருக்கையில் தான் மாத்திரம் பயப்படுவது தனக்கு அவமானமென்று பாலாம்பாள் எண்ணியிருந்தாள். அவள் விருப்பமென்னவெனில், அனந்தராமன் படித்துக்கொண்டிருக்கையில் அவன் கூடவேயிருந்து கதைப்புத்தகங்களைப் படித்துப் பொழுதுபோக்குவது தான். நடேசனுக்கும் படிப்புக்கும் வெகுதூரம். புஸ்தகங்களையெல்லாம் அக்கினியில் போட்டு தகனம் பண்ணுவதற்கு அவன் பூரண சம்மதத்தோடிருப்பான். வேடிக்கைக் கதைகள்கூட அவனுக்குத் திருப்தியை யுண்டுபண்ணுவதில்லை.

அத்தையம்மாள் அன்னபூரணிக்கு அவளுடைய சொந்த யோசனைகளும் சூழ்ச்சிகளுமிருந்தன. பெரிய நினைவு ஒன்று நினைத்துக் கொண்டிருந்தாள். சொப்பனத்தில்கூட அதைப்பற்றியே ஏதாவது பிதற்றுவாள். அனந்தராமன் அவளுடைய மகளைக்கல்யாணஞ் செய்துகொண்டு அவன் தாய் ஆஸ்தி முழுவதையும் அடையவேண்டும் நடேசன் எக்கேடு கெட்டாவது போகட்டும். முக்கால் பங்குதன் எண்ணம் முற்றுப்பெற்றதென்றே எண்ணிவிட்டாள். அனந்தராமனும் பாலாம்பாளும் சேர்ந்து உட்கார்ந்து புஸ்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அன்னபூரணிக்கு உண்டாகும் சந்தோஷத்துக்கு அளவில்லை. தரித்திரனுக்குப் பணப்புதையலைக் கண்டால் உண்டாகும் பரம சந்தோஷமும் அவள் சந்தோஷத்துக்கு ஓர் ஈடாகாது என்றால் வேறு சொல்வானேன்!

எப்போதும் ஓடித்திரிகிற நடேசனைப் பற்றி அவள் அதிக கவலைப்படுவதில்லை. பெரிய மரங்களில் அவன் ஏறி விளையாடும்போது

கைதவறித்தலை கீழாக வீழ்ந்து மண்டையுடைந்து மாண்டுபோனாலு ம் சரி; அல்லது வேகவதியாற்றில் நீந்தும்போது கைசளைத்து ஆழ்ந் து இறந்துபோனாலும் சரி. அவளுக்குத்திருப்திதான். உண்மையி லேயே அவனுக்கு அவ்விதமான கொடுந்தீங்கு வரவேண்டுமென்பது அவள் கோரிக்கையல்ல? அவள் அவனைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அனந்தராமன் ஆஸ்தியையடையும்போது இவன் குறுக்காக வந்து நிற்பானே என்பதுதான் அவளுக்கிருந்த மனத்துன்பமெல்லாம்.

ஒரு தைமாத நாளில் நாராயணம்பிள்ளை ஏதோ படித்துக்கொ ண்டிருக்கையில், அன்னபூரணியம்மாள் அவ்விடத்துக்கு வந்ததினால் அவருக்குப்படிப்புத் தடைப்பட்டது. எப்போதும் பரபரவென்றிரு ப்பவளாகையால், எல்லாவற்றையும் எடுத்து அடுக்குவதிலும், ஒழுங்கு படுத்துவதிலுமே காரியமாகவிருப்பாள். ஒரு நொடியேனும் அவள் சும்மாவிருக்கமாட்டாள்.

"இந்த மூன்று எழுதுகோலும் இங்கே இருக்கவேண்டுமா, நா ணு? எதற்காக இங்கே வைத்திருக்கிறாய்? ஒன்றையெடுத்து மேலே வைத்துவிட்டுமா?" என்று கேட்டாள்.

சற்றுதலை நிமிர்ந்து பார்த்தார் நாராயணம்பிள்ளை. "அங்கேயிரு ந்தால் என்னமோசம் போய்விடுகிறது, அன்னபூரணம்? சிலவேளைக ளில் குழந்தைகள் இரண்டை உபயோகிக்கலாம். உனக்கு எப்படிச் செய்யவேண்டுமோ, அப்படியே செய்." என்று சொல்லிவிட்டுப் படிக்கத்தொடங்கினார்.

அன்னபூரணியம்மாள் ஒரு எழுதுகோலை யெடுத்து மேல் "அல மாரி"யில் வைத்துவிட்டு, இன்னும் ஏதாவது செய்யவேண்டியிருக்கி றதாவென்றறிய அவ்வறையைச் சுற்றிப்பார்த்தாள். ஒரு கடிதம் தென்பட்டது. "நாணு, மாம்பழநல்லூர் சபாபதிபிள்ளை எழுதியனுப் பின கடிதத்துக்கு நீ பதில் எழுதவில்லையே! அது இதோ "மேஜை" யின் பேரிலிருக்கிறதே" என்றாள்.

நாராயணம்பிள்ளை பெருமூச்சுவிட்டார். அடிக்கடி தொந்திர வு செய்வதாகவிருந்தால் யாருக்குத்தான் பொறுமையிருக்கும்?

"எல்லாம் யோசித்துத் தானே பதில் எழுதவேண்டும். விஷய ம் பெரியதாகவிருக்கிறது. அவசரப்பட்டுவிட்டால் காரியம் நன்றாய் முடிந்துவிடுமா?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் நாராயணம்பிள்

ளை படிக்கத்தொடங்கினர். அவ்வறைச் சாளரத்தின் வழியே பார்த்தால் தோட்டத்தின் மரங்களெல்லாம் நன்ருய்த் தெரியும். ஒரு மாமரத்தில் சார்ந்துகொண்டு அனந்தராமன் சும்மா உட்கார்ந்திருந்தான். அவனருகில் ஒரு நாற்காலியின்மீது பாலாம்பாள் உட்கார்ந்துகொண்டு ஒரு புஸ்தகத்தைப் பார்த்தவண்ணமாக விருந்தாள். அப்புத்தகத்துக்குமேலே போட்டிருந்த கித்தான் உறையினுல் அது "மதனகாமராஜன் கதை" யென்று அன்னபூரணியம்மாள் தெரிந்துகொண்டாள். அப்போது செடிமறைவினின்றும் நடேசன் கைநிரம்ப இலந்தைப்பழங்களுடன் புறப்பட்டு, பாலாம்பாளுக்கு அவைகளைக் கொடுக்கத் தன் கையை நீட்டினுன். உடனே "மதனகாமராஜன் கதை" கீழே வீழ்ந்து விட்டது.

"வெகு ருசியாயிருக்கிறதே, நடேசு," என்று பாலாம்பாள் வாங்கிச் சாப்பிட்ட பின்பு சொன்னது அன்னபூரணியம்மாள் காதுகளில் நன்ருய் விழுந்தது.

"நீயே பறித்துத் தின்ருயானல் இன்னும் நன்ருகவிருக்கும், நான் மரத்தின்மீதேறி உலுக்குகிறேன். நீ கீழேயிருந்து பொறுக்கலாம்; போகலாம், வா, பாலு" என்று நடேசன் ஆசை காட்டியதும், அவளும் படிப்பை மறந்து பழங்களின் மேல் ஞாபகமாய் நடேசன் பின்னுல் போகப் புறப்பட்டாள். இத்தருணத்தில் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டினுள் அத்தையம்மாள்.

"கண்ணுட்டி, பாலு, நீ போகாதே. உன்பட்டுச் சிற்ருடை அழுக்காய்ப்போய்விடும். முட்களால் கிழிந்தும் போய்விடும்" என்ருள் அன்னபூரணியம்மாள்.

"சிற்ருடை கிழிந்துபோகாமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் அத்தை" யென்று நடேசன் பதில் சொன்னுன்.

"அப்பா, துரையே, நடேசு, வேண்டாம்; பட்டுச்சிற்ருடை புதிது; கிழிந்துபோய் விடும்; வேண்டாம்; வேண்டாம்" என்று வற்புறுத்தியதும் பாலாம்பாள் "மதனகாமராஜன் கதை"யைப் படிக்கத்தொடங்கினுள். நடேசனும் மனம்போனபடி போகப்புறப்பட்டுவிட்டான்.

"நாணு, நடேசன் இப்படித் திரிகிருனே! அவனைப்பற்றி என்ன ஏற்பாடு செய்யப்போகிருய்?" என்று கேட்டுக்கொண்டே அன்னபூரணியம்மாள் ஜன்னல் கதவை மூடினுள்.

இனிமேல் படிக்கமுடியாதென்று எண்ணிப்புஸ்தகத்தை மூடித்

தூரவைத்துவிட்டு, அவளைப்பார்த்து "என்ன செய்கிறதா?" என்று நாராயணம்பிள்ளை கேட்டார்.

"இப்படிப்படிக்காமல் திரிந்து பொழுது போக்குகிறானே; பெரியவனானால் என்ன செய்வான் என்று தான் கேட்கிறேன்."

"அவனவன் பிழைக்கிறவழி அவனவனுக்குத் தெரியாதா? படிப்பது என்றால் அவனுக்குக் கசப்பாகவிருக்கிறது."

"போனால் போகட்டும் என்று விட்டுவிடுவது தான் நல்லது" என்று அத்தையம்மாள் திருவாய் மலர்ந்தருளினாள்.

"படிக்கமாட்டேன் என்கிறானேயொழிய வேறு யாருக்காவது கெடுதல் செய்கிறானா? நல்லகுணமுடையவன் தான் அவன்—என் ஜன்னல் கதவை மூடிவிட்டாய்? காற்றோட்டமேயில்லையே!"

ஏன் என்றதற்கு அத்தையம்மாள் பதில் சொல்லவில்லை. ஒருவேளை தாங்கள் பேசிக்கொள்வது வெளியில் ஒருவர் காதுகளிலும் படாமலிருக்கவேண்டுமென்பதற்காக விருக்கலாம். சரியான பதில் சொல்லக்கூடாத கேள்விகளைக் கேட்டுவிட்டால் அதற்கு அன்னபூரணியம்மாள் மௌனம் சாதித்துவிடுவாள். நாராயணம்பிள்ளையும் இரண்டாந்தரம் கேட்கும் பள்ளிக்கூடத்தில் படிக்கவேயில்லை.

"அது கிடக்கட்டும், நாணு; உன் ஆஸ்திமுழுவதும் அனந்தராமனுக்கே தானே கொடுக்கவேண்டும்?"

நாராயணம்பிள்ளை திடுக்கிட்டெழுந்தார். "ஏன், அன்னபூரணம் உனக்கு அப்படித் தோன்றுகின்றது? இரண்டுபேருக்கும் சமமாய்ப் பங்கிட்டுக் கொடுக்கும்படி அவர்கள் தாயார் சொன்னாளே: அதற்கு விரோதமாய் ஏன் செய்யவேண்டும்?"

"அதற்காகச் சொல்லவில்லை. திரிகிறானே, அதனால் பணத்தை வீண்செலவு செய்துவிட்டால் என்ன செய்கிறது என்றுதான் எனக்கு வருத்தம். அவனாகவே சம்பாதித்துச் செலவு செய்தால் பணத்தின் அருமை தோன்றும்."

"அப்படி யொன்றும் செய்யமாட்டான். மூத்தவனுக்கே ஆஸ்தியையெல்லாம் கொடுத்துவிட்டால், இளையவன் கதி யென்னவாகும்? அவர்கள் தாயார் இருந்தால் அவ்வாறுசெய்யச் சம்மதிப்பாளா?"

"வட்டிதான் ஐயாயிரம் ரூபாய்க்கு மேலேயே வருகிறதாமே? ஏதாவது மிச்சம் உண்டா?"

"வருகிற பணமே செலவுக்குப் போதவில்லையே. குழந்தைகளுக்கு வண்டி, குதிரை, இன்னும் என்னென்னவோ செலவு வாறிக்கொண்டு போய்விடுகிறதே! பையன்கள் பட்டணத்துக்குப் படிக்கப் போனால் அதிக பணம் வேண்டியிருக்குமே."

"நடேசனைப் படிக்கிறதற்குப் பட்டணத்துக்கு அனுப்புவது வீண்காரியந்தான். ஏதாவது ஒரு வேலை வெட்டியில் போட்டால் ஒருவேளை என்னவோ?"

ஒன்றுஞ் சொல்லத் தெரியாமல் நாராயணம்பிள்ளை விழித்துக்கொண்டிருக்கையில், ஜன்னல் கதவைத் திறந்துகொண்டு கைநிரம்ப இலந்தைப்பழங்களுடன் நடேசன் ஓடிவந்து, "அத்தை, உனக்காகத்தான் பறித்துக்கொண்டு வந்தேன்" என்று கூறி மிகுந்த குதூகலத்துடன் கையை நீட்டினன்.

அத்தையம்மாள் அவனது குணத்துக்குப் பலவாறு புகழ்ந்து நிற்கையில், "உன்னைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்" என்று கள்ளங்கபடமற்ற நாராயணம்பிள்ளை வெளிவிட்டுச் சொன்னர். "நீ ஏதாவது ஒரு வேலையில் அமர வேண்டுமாம்."

அத்தையம்மாள் இதைக்கேட்டதும் முகத்தைச் சுளித்துக்கொண்டாள்.

"இதற்குள்ளாகவா, அப்பா?" என்று நடேசன் ஒன்றுந் தோன்றுதவனுய்க் கேட்டான். "நான் ஏர் பிடித்து உழுதாலும் உழுவேனே யொழிய, புஸ்தகத்தை யெடுத்து வாசிக்கமாட்டேன்" என்றான்.

அவனுடைய எண்ணங்களை யறியாதவராதலால் நாராயணம்பிள்ளைக்குக் கோபமுண்டாயிற்று.

"சீ, சீ, அதற்கா போவது? உயர்ந்த வேலைக்கு நீ போகவேண்டும்; அனந்து பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக ஆவான். நீ வக்கீலாகப் போனல் என்ன?"

நடேசனுடைய குதூகலங்கள் எல்லாம் எங்கேயோ பறந்தோடிப் போய்விட்டன.

"வக்கீலாகவா? ஒன்றுந்தெரியாத நியாயாதிபதிகளின் முன்னல் நின்றுகொண்டு காட்டுக்கத்தலாய் கறுப்பை வெளுப்பென்றும் குதிரையைக் கழுதைதானென்றும், பஞ்சமகாபாதகங்களும் குடிகொண்டிருக்குமவனை, புண்ணியாத்துமாவென்றும், கூசாமல் சாதிப்பதற்

காகவா? போனற்போகட்டுமென்றால் அதற்குத்தான் லக்ஷம் புஸ்த கங்களைப் படிக்கவேண்டுமே; யார் படிக்கிறது? எனக்கு அந்தத் தொல்லை வேண்டாம்."

"இல்லாதபோனால், பட்டணத்தில் பெரிய 'கம்பெனி'கள் ஒன்றில் 'குமாஸ்தா' வேலை செய்துவைக்கச் சொல்லுகிறேன் போகிறாயா?"

"போ, அப்பா! பொழுது விடிந்ததுமுதல் அஸ்தமிக்கிறவரைக்கும் முதுகு வளைந்துபோகும்படி உட்கார்ந்துகொண்டு கையொடிய யார் எழுதுகிறது? எனக்கு அதுவும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டு நடேசன் போய்விட்டான்.

இரண்டு மூன்று வருஷங்கள் கடந்தன. நடேசனுக்கு வயது பதின்மூன்றாகிவிட்டது. அனந்தராமனுக்குப் பதினைந்தாவது பிராயம். அவன் பட்டணத்தில் 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தான். படிப்பில் கெட்டிக்காரனென்றும் பேர் வாங்கியிருந்தான். வருஷப்பிறப்புக்கு முன்னாடியே வரதராஜமங்கலத்துக்கு வருவதும், தீபாவலிக்குப் பின்பு அதைவிட்டு நீங்குவதும் அத்தையம்மாளின் இயற்கையாய்விட்டன. நாராயணம்பிள்ளை அதைப் பற்றியொன்றும் சொல்லுகிறதில்லை. அவள் கிராமமாகிய பல்லவராயன் பேட்டையில் உள்ள வீட்டை வாடகைக்கு விட்டிருந்தாள். காஞ்சீபுரத்தில் இருந்த பெரிய வக்கீல் ஒருவர் அவ்வீட்டை வழக்கமாய் வெயிற்காலத்தில் கிராமவாசஞ்செய்ய உபயோகித்துவந்தார்.

நடேசன் எதிர்கால நிலைமை என்னவாகுமென்பதை ஒருவரும் யோசிக்கவில்லை. தமிழ், இங்கிலீஷ், சரித்திரம், பூகோளம், கொஞ்சம் கொஞ்சம் படித்துவந்தான். ஆனால் ஓடியாடி விளையாடுவதிலும், ஊராருக்கு ஏற்ற சமயத்தில் தகுந்த சரீர உதவி செய்வதிலும், இவனைக்காட்டிலும் சிறந்தவர் வேறொருவருமில்லை. அவனைக்கண்டு நற்சொல் சொல்லாதார் எவருமிலர். அன்னபூரணியம்மாளோ தன் எண்ணத்தை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்வதிலேயே கருத்தூன்றியிருந்தாள். அனந்தராமன் ஆஸ்தியைப் பெறவேண்டும்; நடேசன் எங்கேயாவது போய்ப் பிழைக்கட்டும். இதை யடிக்கடி நாராயணம் பிள்ளையின் காதில் உபதேசம் பண்ணுவதினால், அவரும் அதற்குச் சம்மதிக்கத் தொடங்கிவிட்டார். நியாயத்தைப் பார்க்கிறதா, அல்லது தங்கை சொல்லைக் கேட்கிறதா என்பதுதான் அவருக்கிருந்த மனோ

விசாரம். என்னவானாலும், காரியத்தை ஒருவழியாக முடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, அத்தையம்மாள் இம்முறை வந்துவிட்டாள்.

வழக்கம்போலவே வருஷப்பிறப்புக்கு முன்னாடியே வந்துவிட்டாள். தொலைந்துபோகமாட்டேன் என்கிற நடேசன் வீட்டிலிருந்தான். அனந்தராமன் ஊரில் இல்லை. பாலாம்பாளும் நடேசனும் வேடிக்கையாய் விளையாடுவார்கள். அனந்தராமன் அப்போது வரக்கூடவில்லை. தன் சிநேகிதன் ஒருவனுடன் தங்கப்போவதாய்க் கடிதம் எழுதி யனுப்பிவிட்டான்.

நாராயணம்பிள்ளை இதைச்சாதாரணமாகவே எண்ணியிருந்தார். அன்னபூரணிக்கு இது சரியென்று தோன்றவில்லை. பலவித காரணங்களைச்சொல்லி, உடனே திரும்பிவந்துவிடும்படி அனந்தராமனுக்குக் கடிதம் எழுதும்படி நாராயணம் பிள்ளையைத் தூண்டினாள். ஆனால் அவன் தன்னுடைய எண்ணத்தை மாற்றமுடியாதென்றும், இப்போது வரமுடியாததைப்பற்றி வருத்தப்படுவதாயும் வெகு மரியாதையாய் ஒரு பதில் கடிதம் எழுதிவிட்டான். அவனுக்கும் பிடிவாதக் குணம் உண்டு.

"சிநேகிதன் வீட்டுக்குப் போவதில் என்ன குற்றம்? போனால் போகட்டும் என்று விட்டுவிடாமல், நான் திரும்பிவந்துவிடு என்று உன் பேச்சைக் கேட்டுக் கடிதம் எழுதினது மூடத்தனம்" என்று நாராயணம்பிள்ளை, பதில்கடிதத்தைப் பார்த்ததும் சொல்லிவிட்டார். ஆகவே அத்தையம்மாளுக்கு வேறு வாயை மெல்லவேண்டியதாயிற்று.

ஒருநாள் பிள்ளை எங்கேயோ வெளியில் போயிருந்தார். வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு அன்னபூரணியம்மாள் வருகையில், ஒரு மண்மேட்டிலேறிப் பார்க்க ஓர் ஆலமரத்தின்கீழ் நடேசனும் பாலாம்பாளும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததைக் கண்டாள். நடேசனுடைய கை பாலாம்பாள் இடுப்பைச்சுற்றியிருந்தது.

"நீ பெரியவளாகப்போனதும், என் பெண்டாட்டியாகவேண்டும் தெரியுமா?"

அதற்கு மறுமொழி யொன்றுமில்லை. ஆனால் அத்தையம்மாள்

மாத்திரம் ஒரு முத்தங்கொடுப்பதின் சப்தத்தைக் கேட்டதாக நினைத்துக்கொண்டாள். இன்னொருதரம் எட்டிப்பார்க்கையில், நடேசன் மறுபடியும் பாலாம்பாளை முத்தமிடுவதைக் கண்டுவிட்டாள்.

"பாலு நான் படிக்கப்போவதில்லை. பெரிய 'மிராசு' தாரனாக மாத்திரம் இருந்தால் போதாதா? நல்ல வண்டியும் மாடும் வாங்கி விடுகிறேன். நாமிருவரும் நினைத்தவிடங்களுக்கெல்லாம் போகலாம்"

"உனக்கு எப்படியிருக்கவேண்டுமோ, அப்படியே யிரு. அதற்கெல்லாம் என்னைக் கேட்காதே."

இந்தச் சம்பாஷணையைக் கேட்டதும், அடியோசைப்படாமல் அகன்றுவிட்டாள், அத்தையம்மாள். நடேசனை யொழித்துவிடுகிறதென்று தீர்மானித்துவிட்டாள். அற்பப்பையல் நடேசன் இவ்வாறு தன் மகளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் பேராசைப்படுவதா என்று அவளுக்குக் கோபமும் துக்கமும் தலைதெரியாமலிருந்தன.

அனந்தராமன் கோடை 'லீவு'க்கு ஊருக்கு வராமலே பட்டணத்துக்குப் போய்விட்டான். பாலாம்பாளும் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தாள். நாராயணம்பிள்ளை, அத்தையம்மாள், நடேசன் இம்மூவருமே வீட்டிலிருந்தனர். வெகு சாதுரியமாய்ப்பேசி, பொய்ப் பிரியவார்த்தைகளாலும் செய்கைகளாலும் அத்தையம்மாள் வீட்டுக்கு எஜமானியாய்விட்டாள். நாராயணம்பிள்ளை இதையெல்லாம் கவனிப்பதில்லை.

அத்தையம்மாளும் நாராயணம்பிள்ளையும் சேர்ந்து, கேவலம் மிராசுதாரனாகவிருப்பது பெருமையல்லவென்றும், எதாவது ஒரு வேலையில் அமருவதுதான் கண்ணியமென்றும் நடேசனுக்குப் பலவாறு போதிக்கத் தொடங்கினார்கள்.

"விவசாயந்தான் எனக்குச் சிறப்பென்று தோன்றுகின்றது. என்னைச் சைதாப்பேட்டை "விவசாயக்கலாசாலை"க்கு அனுப்புங்கள் பரீக்ஷையில் தேறிவந்து நிலங்களைச் சீர்ப்படுத்தி, காணிக்குக் குறுணி கூட விளையாத வயல்களையெல்லாம் பொன்னாகவே விளையும்படி செய்துவிடுகிறேன். எனக்கு இப்போதே நிலங்களின் குணகுணங்களைப்பற்றி யறியச் சக்தியிருக்கிறதே" என்று விடையளித்தான்.

"நடேசு, நீ கேவலம் குடியானவனாகவிருப்பது சரியன்று. பிடிவாதத்தை விட்டுவிடு" என்றார் பிள்ளை.

"அப்படியானால், நான் வியாபாரம் பண்ணுகிறேன், முதல் கொடுத்து எற்பாடு செய்யும்" என்று சாதாரணமாய்ப் பதிற்சொன்னான்.

வியாபாரத்தில் நஷ்டம்வந்துவிடுமென்று பயந்துவிட்டார் நாராயணம் பிள்ளை. "அதுவும் வேண்டாம். வேறு எதாவது சொல்லு" என்றார்.

"எனக்கு, என்னவோ, கிருஷியைக்காட்டிலும் வியாபாரமே சிறந்ததென்று தோன்றுகிறது. சீமையிலிருந்து சரக்குகள் வரவழைத்து கொஞ்சலாபம் வைத்து விற்றாலும், சீக்கிரத்தில் குபேரனாய்விடலாமே."

"சீ, சீ! அப்படியெல்லாம் பிதற்றாதே. உன் தாயார் இருந்தால் இதற்குச் சம்மதிப்பாளா? நீ வியாபாரத்துறையில் இறங்கக்கூடாது".

"எத்தனையோபேர் ஒடிப்போகவில்லையா?" என்று நடேசன் சிரித்துக்கொண்டே சொன்னதைக்கேட்டு நாராயணம்பிள்ளை பயந்துவிட்டார். ஒருவேளை நடேசன் பயமுறுத்தினானோவென்றுகூட நினைத்தார்.

"நடேசு, தாய்தகப்பன் வார்த்தையைக் கேளாமல்போனால் துன்பம் உண்டாகும். என்னைக்கேட்காமல் நீ ஒன்றும் செய்யக்கூடாது" என்று நாராயணம்பிள்ளை சற்று பயத்துடனும், சற்று நயத்துடனும் சொன்னார்.

"நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். நான் என்னசெய்வதாயிருந்தாலும் முதலில் உங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று நடேசன் விடையளித்துப் போனான்.

என்ன செய்வது என்று தோன்றாமல் மதிமயங்கியிருந்த நாராயணம்பிள்ளையைத் தேற்றி, சிறு பையன்களை வழிக்குக் கொண்டுவரும் மார்க்கம் தனக்கு நன்றாய்த்தெரியுமென்றும் தன்வழியே விட்டுவிட்டால், நடேசன் மனங்கோணாமல், அவனை நல்வழிக்குக்கொண்டுவருவதாயும் அன்னபூரணியம்மாள் தைரியம் சொல்லியருளினாள்.

ஆகையால் நாராயணம்பிள்ளை நடேசன் விஷயத்தில் அதிகமாகத் தலையிட்டுக்கொள்ளவில்லை. அவன்மாத்திரம் வியாபாரம் பண்ணுவதிலும், கப்பலேறிப் போவதிலுமே எண்ணம் வைத்தவனாயிருந்தான். அவனது மனவுறுதியைக் கலக்குமாறு நாராயணம்பிள்ளை "வியாபாரத் தொல்லை" என்றவோர் புத்தகத்தை வாங்கித் தந்தார்.

ஆனல் மறுநாள் காலையிலேயே புத்தகம் காணமற் போய்விட்டது. அவனதை 'மேஜை'யின்பேரில் வைத்துவிட்டுச் சாப்பிடப்போயிருந் தான், அப்போது எப்படியோ அப்புத்தகம் மாயமாய்ப் போய்விட் டது.

"எங்கேயாவது பூனை கொண்டுபோய்ப் போட்டுவிடும். பூனை தான் இல்லாத காரியங்களையெல்லாம் செய்கிறதே." என்று சொல் லிக்கொண்டு ஒன்றுமறியாதவள்போல அத்தையம்மாளும் தேடினள்.

"ஆமாம்; பூனையும் நாயும் புஸ்தகத்தைத்தான் கொண்டுபோகு மாக்கும்" என்று நாராயணம்பிள்ளை திரும்பச் சொன்னர். உண் மையிலேயே அவர் சந்தேகப்பட்டவராகவிருந்தால், புஸ்தகத்தைக் கொண்டோடிப்போனது தன் தங்கையாகிய இரண்டுகாற் பூனைதா னேவென்று கேட்டறிந்து திரும்பவும் பெற்றிருப்பார்.

பிறகு வியாபாரத் துறையில் உண்டாகும் நஷ்டத்தை நன்ருய்க் காட்டுவதற்குச் சிறந்தவிடம் பட்டணம்தானென்று பிள்ளைக்குச் சொல்லிவிட்டு அன்னபூரணியம்மாள் நடேசனை யழைத்துக்கொண் டு பட்டணம் வந்துவிட்டாள்.

வந்ததும், "இன்ஸால்வெண்டு"க்கு "மனு"க்கொடுக்கப் போ கும் கடைகளில் போகாமல், சீமைமுதலிய விடங்களில் கடைகள் வைத்து, பெருத்த லாபம் சம்பாதிக்கிற குசால் ஸேட் என்னும் வியாபாரியிடத்தில் நடேசனை முதல்முதலில் வேலைபார்க்கும்படிசிபா ர்சுசெய்தனுப்பினள்.

அவனும் மிகுந்த சுறுசுறுப்புடனும், சாமர்த்தியத்துடனும் வேலை பார்த்தான். நாலைந்து மாதமாயிற்று. சீமையில் குசால் ஸேட்டுக்கு இருந்த கடையின் 'ஏஜண்டு' இறந்துபோய்விட்டானெ ன்றும், உடனே ஒரு தகுந்த காரியக்காரனை யனுப்பவேண்டுமென் றும் 'தந்தி' வந்தது. குசால் ஸேட் நடேசனைப்பார்த்து, அவனுக் குச் சீமை போக விருப்பந்தானவென்று கேட்டு, அவ்வாறு விருப்ப மிருந்து போனல் மாதமொன்றுக்கு மூன்னூறு ரூபா சம்பளம் கொடுப்பதாயும், விசேஷ லாபம் வந்தால், லாபத்திலும் ஒரு பங்கு கொடுப்பதாயும் சொன்னர். இப்படி ஆசைகாட்டினல் யார்தான் மறுப்பார்கள்? நடேசன் முன்பின் யோசியாமல் ஒப்புக்கொண்டு விட்டான். வீட்டுக்குப்போய் அத்தையம்மாளிடம் இதைச்சந்தோ

ஷத்துடன் சொன்னான். ஆனால் அதற்கு அவர் அப்போது ஒன்றும் சொல்லவில்லை; செய்யவுமில்லை.

குசால் ஸேட்டினுடைய "சக்கரவர்த்தினி" என்னும் புகைக் கப்பல் சிங்கப்பூரிலிருந்து திரும்பி வந்ததும் சீமைக்குப் புறப்படுவ தற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நடேசனும் கூடப் போகவேண் டியவனாதலால் ஸேட் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்தார். கப்பல் புறப்படுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்பு, அத்தையம் மாள், நடேசனிடத்தில், அவன் சீமைக்குப் போவதாகவிருந்தால் அவன் தகப்பனாருடைய அனுமதி வேண்டுமென்றும், தனக்கு ஒன் றும் தெரியாதென்றும் சொல்லிவிட்டாள்.

நடேசன் இதற்குமுன்பு கடிதம் எழுதினவனே யன்று. இன் னதைத்தான் எழுதுவது என்று தோன்றாமல் விழித்துக்கொண்டி ருக்கையில், அத்தையம்மாள் சொல்ல, அவன் ஒரு பெரிய கடிதம் எழுதினான்.

கடிதத்தின் சுருக்கம் இதுதான். தன்னுடையகடையின் முத லாளியின் தயவால்தான் அவருடைய சீமைக்கடைக்கு நல்ல சம்ப ளத்தின்பேரில் ஏஜண்டாகப் போவதாயும், தனக்கு நல்ல லாபம் கிடைக்குமென்றும், தன் தகப்பனார், தான் அவ்வாறு சீமைக்குப் போக அனுமதி கொடுப்பாரென்று நம்புவதாயும் கொடுக்காமற் போனால் உடனே நின்றுவிடுவதாயும், எழுதினான்.

"அத்தை, கடிதத்தை உனக்கு ஒருதரம் படித்துக் காட்டட் டுமா?" என்றான்.

படிக்கக்கேட்டதும், "நடேசு, இன்னொரு வரி எழுது; உன் தகப்பனாருக்குக் கடிதம் எழுதுவதே பிடிக்காது. ஆதலால் நீ சீமை க்குப்போக அனுமதிகொடுப்பதானால் பதில் எழுதவேண்டாமென்று எழுது".

"இல்லை, அத்தை, போய்விட்டுவா என்று ஆசீர்வாதமாவது எழுதட்டுமே".

"ஆசீர்வாதத்துக்கென்ன, குறை! மனதில் ஆசீர்வதிப்பார். நான் சொன்னதையும் எழுதிவை, ஒரு பக்கத்தில்".

சொன்னபடியே எழுதிவிட்டான். தகப்பனைப் போலவே நடேசனும் பரமசாது. இரண்டு தினத்தில் பதில் வராமலிருந்தால்

தான் போவதற்கு அநுமதி கொடுத்ததாகுமென்று எண்ணிக்கொள்வதாய் எழுதினன்.

"நடேசு, நான் "பூக்கடை"க்குப் போகிறேன். கடிதத்தை உனக்காக அங்கே தபாலில் போட்டுவருகிறேன், தா" என்று அத்தையம்மாள் வலுவில் சொன்னாள்.

"நானே போடுகிறேன், அத்தை, நீ யேன் சிரமப்படவேண்டும்? பதில் வரும்வரையில் போது எப்படிப்போகும்?" என்று சொல்லிவிட்டுத் தபாலில் போடப்போய்விட்டான். அத்தையம்மாள் முகத்தைக் கோணலாய் வைத்துக்கொண்டு, உதட்டைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். கடிதம் போகக்கூடாது என்று அவள் விருப்பம்.

பதில் தபால் வரவேண்டிய தினத்தில் ஒன்று வந்தது நடேசன் வீட்டிலில்லை. அன்னபூரணியம்மாள், அவனைக் காலையிலேயே வெளியில் அனுப்பிவிட்டு, தபாற்காரனுக்காகக் காத்திருந்து, தானே கடிதத்தை வாங்கும்பொருட்டு வாசற்படிக்குச் சென்றாள். இரண்டு கடிதங்கள் வந்தன—ஒன்று நாராயணம்பிள்ளையிடமிருந்தும் மற்றொன்று மாம்பழப்பட்டுக்குப்போயிருந்த பாலாம்பாளிடமிருந்துமாக—முன்னதை அன்னபூரணியம்மாள் மறைத்துவிட்டு, பின்னதை மாத்திரம் மேஜையின்மேல் வைத்துவிட்டுப்போனாள்.

"அத்தை, தபால்காரன் கடிதங்கள் கொண்டுவந்தானாமே, முனிசாமி சொல்லுகிறானே" என்று நடேசன் கேட்டுக்கொண்டே, உள் நுழைந்தான்.

"ஆமாம், குழந்தை பாலு எழுதியிருக்கிறாள்போலிருக்கிறது."

"அப்பாவிடத்திலிருந்து வரவில்லையா?"

"இதற்குள்ளாக வந்துவிடுமா? யோஜித்துத்தானே பதில் எழுதுவார். பாலு என்ன எழுதியிருக்கிறாள், பார். குழந்தை யிங்கே எப்போது வருகிறாள்?"

"அவள் இப்போது வரப்போகிறாள்? இன்னும் பத்து நாள் செல்லுமாமே, அதற்குள் நான் புறப்பட்டுப் போய்விடுவேன். நான் அவளைப் பார்க்கமாட்டேன் போலவிருக்கிறது".

"திரும்பிவந்தால் பார்க்கிறதானே. எங்கே ஓடிப்போகிறாள்?"

இதற்குப்பிறகு, அத்தையம்மாளுக்கு நடேசனை வெளியிலனுப்பவேண்டிய காரியமேயில்லை. தபால்காரன் வரும்போதெல்லாம் நடேசன் வாசலிலேயே நிற்பான். அவன் கடிதமே கொண்டுவரவில்லை. எதிர்பார்த்த காலமும் கடந்துவிட்டது. கடிதம் வரவேயில்லை.

“அத்தை, ஆனல் நான் புறப்பட்டுப் போகலாம்போலிருக்கிறது. எப்படியானாலும் பதில் ஒருவரி எழுதச்சொல்லியிருந்தேனே!” என்று அரைச்சந்தோஷத்துடன் நடேசன் சொன்னான்.

“நீ தான் பதில் எழுதாமலிருந்தால் அனுமதி கொடுத்ததாக எண்ணிக்கொள்வேன் என்று எழுதியிருந்தாயே.”

“ஆமாம்; இருந்தாலும் ஒருவரி எழுதியிருந்தால் எனக்குத் திருப்தியாகவிருக்கும். நான் தான் ஒரு ஓட்டம் ஓடிப்போய்ப் பார்த்துவிட்டுவரட்டுமோ? சாயங்தரம்தானே ‘ரயில்’ புறப்படுகிறது.”

“அது நல்ல யோசனைதான். நீ திரும்பிவருவதற்குள்ளாக கப்பல் போய்விடுமே, அதற்காகத்தான் தயங்குகிறேன்—அது வேண்டாம்; உனக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளையெல்லாம் ஒரு கடிதத்தில் எழுது.”

“சக்கரவர்த்தினி” கப்பல் இங்கிலாந்திலுள்ள ‘மான்செஸ்டர்’ என்னும் பட்டணத்துக்குப் புறப்பட்டுவிட்டது. நடேசனும் கூடப் போய்விட்டான். புறப்படுவதற்கு முன்பு தன் தகப்பனுருக்கு, அனுமதி கொடுத்ததற்காக ஒரு மரியாதைக்கடிதம் எழுதிவிட்டுப் போனான். அக்கடிதம் எவ்வாருகவோ அத்தையம்மாள் கையில் அகப்பட்டுக்கொண்டது. உடனே அதையவள் அக்கினிதேவனுக்கு அர்ப்பணம்பண்ணிவிட்டாள். அது வரதராஜமங்கலம் போய்ச் சேரவேயில்லை.

கப்பல் புறப்பட்டுப்போனதும், அன்னபூரணியம்மாள் நாராயணம்பிள்ளை எழுதியனுப்பிய கடிதத்தை மறைத்து வைத்தவிடத்திலிருந்து எடுத்துப் பிரித்துப்பார்த்தாள். அவள் எதிர்பார்த்தபடியே, அதில் நடேசன் புறப்பட்டுப் போகக்கூடாதென்று கண்டிப்பாய் எழுதப்பட்டிருந்தது. அதையும் அவள் அக்கினிதேவனுக்குச் சமர்ப்பிவித்துவிட்டாள்.

நடேசன் புறப்பட்டுப்போன விஷயம் வரதராஜமங்கலத்தில் தெரிந்ததும், அங்கு ஓர் குழப்பம் உண்டாயிற்று. நாராயணம்பிள்

ளைக்கு இடிவிழுந்தாற்போன்றிருந்தது. தன் கடிதத்துக்கு விரோதமாகப் போய்விட்டானே என்கிற வருத்தமும் துக்கமும் அவர் மனத்திற் குடிகொண்டுவிட்டன.

தை மாதத்தில் அத்தையம்மாள் தன் மகளுடன் வரதராஜமங்கலத்திக்கு வந்தாள். நடேசனுக்கு எழுதிய கடிதம் வரவேயில்லையென்று அவள் ஒரே பிடியாய்ச் சாதித்தாள். என்ன சொன்னாலும் பிள்ளை கேட்கிறவராகத் தோன்றவில்லை. தான் எழுதிய கடிதம் கட்டாயமாய் நடேசன் கையில் சேர்ந்திருக்கவேண்டுமென்றே சொன்னார். பாலாம்பாள் மாத்திரம், நடேசன் குணவானென்றும், ஏதோ தடுமாற்றத்தால் கடிதம்போய்ச்சேராமலிருக்கவேண்டுமென்றும் சொன்னாள்.

அத்தையம்மாள் காரியம் இன்னும் முழுவதும் பூர்த்தியாகவில்லை. நாராயணம்பிள்ளையை நன்றாய் மயக்கிவிட்டாள். ஓடிப்போனவனுக்கு ஒன்றும் கொடுக்கக்கூடாதென்றும், ஆஸ்திமுழுவதையும் அனந்தராமனுக்கே கொடுத்துவிடவேண்டுமென்றும், நடேசனுக்கு ஏதாவது பணம் வைத்தால், அதையவன் சீக்கிரத்தில் வீணாக்கிவிடுவானென்றும், பலவிதமாய் நாராயணம்பிள்ளைக்குப் போதித்தாள்.

இராமுழுவதும் தூங்காமல், நடேசன் ஒரு சமயம் வேடிக்கையாகவே போயிருக்கலாமென்று ஒருவாறு துணிந்து, அவனைக் கோவணாண்டியாக்கிவிடுவது நியாயமில்லையென்றுணர்ந்து சுமார் பதினையாயிரம் ரூபா பெறுமான ஆஸ்தியை அவனுக்கும் மற்றைய ஆஸ்தியை அனந்தராமனுக்குமாகப் பாகஞ்செய்து ஒரு "உயில்" எழுதி ரிஜிஸ்தர் செய்துவைத்தார்.

சித்திரை மாதத்தில் லீவுக்கு அனந்தராமன் வரதராஜமங்கலத்துக்கு வந்தான். முன்போலவே அவனும் பாலாம்பாளும் ஒருமித்துப் படிக்கத்தொடங்கினர். அவ்வூர்ச் சண்முகம்பிள்ளையினுடைய தமையன் பெண் பூங்காவனமும் வந்திருந்தாள். அவள், பாலாம்பாளைக் காட்டிலும் அழகிற்சற்று குறைந்தவளே தவிர படிப்பு முதலியவற்றை நோக்கும்போது, அவளுக்குச் சமானமானவள் தாம். இருவரும் தோழிகளாயினர். வீட்டிலிருக்கும்போது பாலாம்பாள் அனந்தராமனை விட்டுப்பிரிவதேயில்லை. அன்னபூரணியம்மாளுக்குத் தன் எண்ணம் பலித்துவிட்டதென்று மனத்திற்குள் இருந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

தீபாவலி வரையில் அன்னபூரணியம்மாள் தன்னூருக்குப் போகவில்லை. அவள் போனதும் நாராயணம்பிள்ளைக்குப் பாரிச வாயுத்துன்பம் அதிகரித்தது. உடனே அவளை வரும்படி சொல்லி யனுப்பினார். வெறும் வாயை மெல்லுகிற அம்மையாருக்கு ஒரு வாய் அவல் கிடைத்தாற் போதாதா? உடனே புத்திரிசகிதம் புறப் பட்டு வந்துவிட்டாள்.

"சக்கரவர்த்தினி" புறப்பட்டுப்போய் இரண்டு வருஷங்களு க்கு மேலாய்விட்டது. நடேசனைப்பற்றியொன்றும் தெரியவில்லை. ஓர் நாள் பாலாம்பாள் பல்லவராயன் பேட்டையில் தன் வீட்டின் ஓர் அறையில் உட்கார்ந்து ஜன்னல் வழியாய்ப் பார்த்தபோது பெரிய வண்டியொன்று ஓடி வருவதையும், அதற்குள் நடேசன் இருப்பதையும் கண்டாள். உடனே அவள் எண்ணமெல்லாம் அவ னிடத்து ஓடிவிட்டன. உள்நுழைந்ததும், அவள் மாத்திரம் தனியே யிருந்தமையால், கட்டிக்கொண்டான்; திணறிப்போகும்படி அவ ளைப் பன்முறை முத்தமிட்டுக்கொண்டான். முன்னையைப்போ லல்லாமல், பாலாம்பாள் இப்போது மங்கைப்பருவமடைந்துவிட் டதால், அவ்வாறு முத்தமிடக்கூடாதென்று சொன்னாள். அத்தை யம்மாள் பக்கத்தில் இல்லை. இருந்தால் அவளே அவ்வாறு சொல்லி யிருப்பாள்.

தனக்கு வியாபாரத்துறையில் முன்னவ்வளவு விருப்பமில்லா மற்போனாலும், பிடித்ததை விடக்கூடாதாகையால், அதிலேயே தன் மனத்தைச் செலுத்தப்போவதாயும் பாலாம்பாளிடத்துத் தனி மையில் சொன்னான். என்னதான் அத்தையம்மாள் தடுத்தாலும், காதுகொடாமல் நடேசன் வரதராஜமங்கலத்துக்கு வந்தான். அவள் சொன்னபடியே அனந்தராமன் இல்லை. பிள்ளை வியாதி யாகவிருந்தார். நடேசனைக்கண்டு பிரியமாக மாத்திரம் இருந் தாரேயொழிய அவருக்கு நினைவு தடுமாறிவிட்டதால், அவனுடைய கீழ்ப்படியாக் குணத்தைப் பற்றியாகிலும், தவறிப்போன கடிதங்க ளைப்பற்றியாகிலும் அவர் ஒரு வார்த்தையும் பேசவேயில்லை.

அவன் வரதராஜமங்கலத்தினின்றும் திரும்பி வந்தபோது, அவன் புறப்பட்டுப்போன விபரங்களையெல்லாம் ஆதியோடந்தமா கச் சொல்லும்படி பாலாம்பாள் கேட்டாள். கடிதம் எழுதி முடி ந்தபிறகு, பின்னும் ஒரு வரி பதில் கடிதம் வராமல்போனால் புறப்

பட்டுப்போக அனுமதி கொடுத்ததாக ஆகுமென்று அத்தையம்மாள் எழுதச்சொன்னுளென்று சொன்னதும், பாலாம்பாள் திடுக்கிட்டு விட்டாள்; அவனை மோசம்பண்ணின சங்கதியை அறிந்துகொண்டாள்; தன் தாயாருக்காக, அதை மறைத்துக்கொண்டுவிட்டாள். இத்தனை காலமாகத் தன் தாயுடன் பழகிவந்த பாலாம்பாள், அவளுடைய வஞ்சனை மனத்தை அறிந்துகொள்ளாமல் இருக்கவில்லை.

ஆண்டுகள் சில அகன்றன. நடேசன் செம்மையாகவே வேலை பார்த்துவந்தான். மிகுந்த பொறுமையுடனும் சாமர்த்தியத்துடனும் மரியாதையுடனும் வேலைசெய்து வந்ததால் எல்லோரும் அவனை மெச்சுவாராயினர். குசால்ஸேட்டுக்கு இவனிடத்தில் தான் அதிகப்பிரீதி.

ஒருநாள் காலையில் வரதராஜமங்கலத்திலிருந்து அத்தையம்மாளுக்குச் சமாசாரம் எட்டியது. பிள்ளைக்கு இன்னொருமுறை பாரிசவாயு வந்து சாகக்கிடக்கிறுனென்று தெரிந்ததும், தன் மகளுடன் கூட உடனே வந்துவிட்டாள். அனந்தராமன் பீ.ஏ. பரீக்ஷையில் தேறிவிட்டான். அவனே பாலாம்பாளைக் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறுனென்னும் எண்ணத்தால் அவனுடைய சந்தோஷமெல்லாம் தன்னுடையதாகவே அத்தையம்மாள் பாவித்துவந்தாள்.

ஒரு நாள் அந்திப்போதில், அத்தையம்மாள் தன் மகளுடன் தனியாகவிருக்கையில், அவ்விடத்துக்கு அனந்தராமன் வர, அதுதான் சமயமென்றறிந்து, "அனந்து, உனக்குக்கல்யாணம் பண்ணிக் கொள்ளவேண்டிய வயது வந்துவிட்டதே. இன்னும் என் அதைப் பற்றி யோசிக்கவில்லை?" யென்று வெகு பிரியத்துடன் கேட்டாள். இதைக்கேட்டதும், அனந்தராமன் வெட்கிப்போய் ஆடு திருடின கள்ளனைப்போல் பாலாம்பாளை ஒரு தரம் பார்த்துவிட்டு, "நான் ஏதாவது ஒரு வேலையிலமர்ந்த பிறகுதான் அதைப்பற்றி யோசிக்கவேண்டும்" என்றுன்.

"யோசனை என்ன? நீ தான் சீக்கிரத்தில் வேலைக்குப் போய் விடுவாயே!"

பரிகாசமாய் இரண்டொரு வார்த்தை சொல்லிவிட்டு அந்தப் பேச்சை, அனந்தராமன் மறைத்துவிட்டான். அத்தையம்மாள் பூர்ண சந்தோஷமாய்விட்டாள். அவன்து வெட்கமும், அவன்

பாலாம்பாளை நோக்கினதும் அவளுக்குப் போதுமான அனுகுணங்களாயின. எல்லாம் இனி நாள் கணக்குத்தான் என்று எண்ணியிருந்தாள்.

சித்திரை மாதத்தில் நாராயணம்பிள்ளை இறந்துபோய்விட்டார். இறப்பதற்கு முன்பு, அவருக்கு ஒரே ஒரு தரம் தான் ஞாபகம் வந்தது. வந்தபோது நடேசனைப்பற்றித்தான் வருத்தப்பட்டார். கருமாந்தரங்கள் எல்லாம் கழிந்ததும், காலஞ்சென்ற பிள்ளையவர்கள் எழுதிவைத்த "உயிலை"த்திறந்துபார்த்தார்கள். நடேசனுக்குப் பதினையாயிர ரூபாய்க்கு ஆஸ்தியும், அனந்தராமனுக்கு இரண்டு லக்ஷத்துக்கும், அன்னபூரணியம்மாளுக்கும் அவள் மகளுக்குமாக ஐயாயிர ரூபாய்க்கும் ஏற்பட்டிருந்தது. அநியாயமாய் அனந்தராமன் ஆஸ்தியிலிருந்து பதினையாயிரம் ரூபாய் நடேசனுக்குக் கொடுக்கப்பட்டதென்று அன்னபூரணியம்மாள் வெகுவாய் விசாரப்பட்டாலும், மொத்தத்தில் அவள் திருப்தியடைந்துவிட்டாள்.

வெளிக்கு வேஷம்போடுபவளாகையால், உடனே பல்லவராயன்பேட்டைக்குப் புறப்பட்டுவிட்டாள். அனந்தராமன் தடுத்துச் சொல்லவில்லை. ஆனால் அவன் தன்னுடைய கல்யாண விஷயத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையென்று தான் அன்னபூரணியம்மாள் சற்று கோபத்துடனேயே ஊர்போய்ச் சேர்ந்தாள். சேர்ந்ததும், "சக்கரவர்த்தினி" கப்பலோடு நடேசம்பிள்ளை வந்திருப்பதாகச் சமாசாரம் தெரிந்தது. சீமைக்குப்போயிருந்த குசால்ஸேட்டு சொஸ்தமாகாத வியாதியால் அவஸ்தைப்பட்டதால், நடேசம்பிள்ளையே இம்முறை பட்டணத்துக்குச் சரக்குகள் கொண்டுவந்தானாம். இதைக்கேட்டதும் பாலாம்பாள் உள்ளுக்குள் சந்தோஷமடைந்தாள்.

"சீமையில் வியாபாரியாயிருந்த மகா-ா-ா-ஸ்ரீ நடேசம்பிள்ளை வந்துவிட்டார்" என்ற விளம்பரத்தைப் பத்திரிகையில் பார்த்ததும், பாலாம்பாள் அதைத் தன் தாயாருக்குக் காட்டினாள். அன்னபூரணியம்மாளுக்கு இதில் எள்ளளவேனும் சந்தோஷமில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குள் நடேசனே அவ்விடம் வந்தான். வரும்போது கடை ஏஜெண்டாக வரவில்லை. சீமையில் குசால்ஸேட் இறந்துபோய்விட்டதாயும், அவர் இறப்பதற்கு முன் சீமையிலுள்ள கடையையும் "சக்கரவர்த்தினி" கப்பலையும் நடேசனுக்கே கொடு

த்துவிட்டதாயும், அவ்வே இனி அவைகளுக்குச் சொந்தக்காரனாய் விட்டதாயும் தந்தி வந்திருந்தபடியால் நடேசன் ஒரு பெரிய முதலாளியாய்விட்டான்.

"அத்தை, நான் அதிருஷ்டசாலியல்லவா? இன்னும் இருபத்திரண்டு வயதுகூட நிரம்பவில்லை. அதற்குள்ளேயே லக்ஷம் லக்ஷமாய் லாபம் வரக்கூடிய கடைக்கு முதலாளியாய்விட்டேனே."

"நல்ல அதிருஷ்டந்தான்" என்று அத்தையம்மாள் முணு முணுத்தாள்.

"எனக்குப் பதினையாயிரம் தானா வைத்தார்; போகட்டும். அண்ணாவுக்குத்தான் அதிகமாக வேண்டியிருக்கும். எனக்குக்கிடைத்ததுபோதும்" என்றான்.

"உனக்கு இந்தப்பணந்தான் எதற்காக?" என்றாள் பேராசைப் பேய்பிடித்த அன்னபூரணியம்மாள்.

"எதற்காகவா? இருக்கட்டுமே. பிதுரார்ச்சித பூமியை வேண்டாமென்று சொல்லலாமா? கோடிகோடியாய்ச் சம்பாதித்தாலும், நிலம் கொஞ்சமாவது வேண்டுமல்லவா" என்று பதிலுரைத்துவிட்டுப்போனான்.

இதைக்காட்டிலும் இன்னும் அதிகமான மனோவிசாரம் அன்னபூரணியம்மாளுக்கு வந்தது. நடேசனும் பாலாம்பாளும் தங்களுக்குள்ளேயே பேசி முடித்துக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் இருவரும் கல்யாணம் செய்துகொள்ள இசைந்துவிட்டார்களென்ற சமாசாரம் அத்தையம்மாளுக்குத் தெரிந்தது.

பாலாம்பாளே இதை அவள் அன்னையிடம்சொன்னாள். முதன் முதலில் தன் மகள் வேடிக்கையாகப் பேசுகிறாளென்றே நினைத்தாள். உண்மை தெரிந்தபிறகு, பித்துக்கொண்டவள்போலப் பிதற்றினாள். கனவில்கூட இவ்வாறாகுமென்று அவள் நினைத்ததேயில்லை.

"அசடே! நன்றாகவிருக்குமா இது? பாபமில்லையா? உன் மைத்துனனையே கல்யாணம்பண்ணிக்கொள்ளலாமா? உனக்குப் புருஷன் அனந்தராமனல்லவா?" என்று கடுமையாய்ச்சொன்னாள்.

பாலாம்பாள் தலையை யசைத்துக்கொண்டு, "அனந்தராமன் என்னைக் கல்யாணம்பண்ணிக்கொள்ளப் போவதில்லை; நானும் அவன்மேல் ஆசைப்படவில்லை. அவன் பூங்காவனத்தைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போகிறானாம்" என்றாள்.

"யாரை?"

"பூங்காவனத்தை. நீண்டகாலமாய் அவர்கள் இருவரும் பிரியமாகவிருக்கிறார்கள். எனக்குத் தெரியும்".

"பூங்காவனமா?—அந்த அழுமூஞ்சி மூதேவியா? சிற்றப்பன் சண்முகம்பிள்ளை உதவிசெய்யாமற்போனால் நிற்க நிழற்கூட்டில்லாமல் தவித்துக்கொண்டிருக்குமே! அந்தப்பீடையா?" என்று தனது ஆத்திரமெல்லாம் வெளிப்படும்படி சொன்னார்.

"ஆமாம்; அவளைத்தான் அனந்தராமன் கல்யாணம்பண்ணிக் கொள்ளுவானாம், வேறு யாரையும் இல்லையாம்."

"அதெல்லாம் பாவி நடேசனாலேயே வந்தது; சாகப்படாதா, நடுச்சமுத்திரத்திலே விழுந்து?".

"அப்படிச்சொல்லாதே, அம்மா. நானும் அவரும் நெடுநாளாகவே பிரியமாகவிருந்து வருகிறோம். நான் அவரைத்தவிர வேறு யாரையும் கல்யாணம்பண்ணிக்கொள்ளமாட்டேன். அவரும் என்னைத்தவிர வேறு யாரையும் பார்ப்பதில்லையென்று வாக்களித்திருக்கிறார். அவருக்கு என்ன ஐவேஜுக்குக் குறைச்சலா? எனக்கு அவர் தான் வேண்டும், நீ குறுக்காக நிற்காதே."

இன்னதுதான் செய்வதென்று தோன்றாமல் மதிமயங்கினாள் அன்னபூரணியம்மாள். பிறரிடத்து அவளுக்கிருந்த அன்பெல்லாம் வெளிவேஷந்தான், தன் மகளிடத்து மாத்திரம் உண்மையான அன்புண்டு; மேலும் அவள் மேலான பதவிக்கு வரவேண்டுமென்பது அவளது பேராசை.

"கேவலம் ஒரு கண்டக்காரனையா, நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறது? கூடாது."

"அம்மா, நீ தானே அவரைக் கடைக்காரனாக ஆக்கினாய்" என்று தாழ்ந்தகுரலில் பாலாம்பாள் சொன்னாள். "மேலும் அவருக்கும் பாதி ஆஸ்தி வருமே, அதையும் நீ தானே கெடுத்துவிட்டாய். அவருக்கு விரோதமாய்ச் செய்ததெல்லாம் எனக்கும் விரோதமாகவே முடிந்துவிடுமென்பதை நீ இதுவரையில் யோசிக்கவேயில்லையே!"

உடனே அன்னபூரணிக்கு அவள் முன்செய்த காரியங்களின் நினைவு வந்துவிட்டது. வாடிவதங்கினாள். குற்றமுள்ள மனமல்லவா?

"நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவே கூடாது. அவன் அடிக்கடி கப்பலில் போவான். வழியில் அபாயம் நேரிட்டு உயிர்போய்விடும்."

"எனக்கு அதெல்லாம் நன்ருய்த்தெரியும்; எனக்சென்றே கப்பலில் ஒரு அறை செய்கிருர்கள். நானும் கூடவே போகிறேன்."

"நீயா கப்பலில் போகிறது? கூடாது, கூடாது."

"இல்லை, இல்லை.—கட்டாயம் நான் போவேன். புருஷனுடைய சுகதுக்கங்கள் மனைவியைச் சேர்ந்ததல்லவா? அம்மா, நீதானே இப்படியெல்லாம் கொண்டுவந்துவிட்டாய். எல்லாம் ஈசன் செயல் என்று விட்டிருந்தால் இவ்வளவு துன்பமேது?"

மிகுந்த வருத்தத்துடன் ஒன்றுஞ்சொல்லத் தெரியாதவளாய்த் தேங்கியிருந்து, "அது எழைப்பிழைப்பு, பாலு, உயிருக்குத் துணிவார்களா" என்ருள், அன்னபூரணியம்மாள்.

"அம்மா; அது எங்களுக்குப் போதுமானது, பதினையாயிர ரூபாய்க்கு ஆஸ்தியிருக்கிறது. மேலும் கடையில் மிகுந்த லாபம் வரும். எங்களைப்பற்றி நீ வருத்தப்படாதே. அவருக்கு வரவேண்டிய ஆஸ்திமுழுவதும் வரவில்லையே. அது ஒன்று தான் குறை. எல்லாம், மனிதர் கைவிட்டாலும் தெய்வம் கைவிட்டுவிடுமா?"

"பாலு, ஐயோ, உயிருக்குத் துணிந்து போகலாமா?"

"எங்கேயிருந்தாலும் ஒருநாளைக்குச் சாகத்தானே வேண்டும்; காப்பாற்றத் தெய்வம் இல்லையா?"

ஐயோ, பாவம்! அத்தையம்மாள் என்ன சொன்னலும் பாலாம்பாள் கேட்கவில்லை. யாரை நொந்துகொள்வது, அதற்கு? தான் செய்ததெல்லாம் தீமையாய் முடிந்ததென்று அவளுக்கு அப்போது தான் தெரிந்தது.

மறுநாள் காலையில், காஞ்சிபுரத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் மாதமொன்றுக்கு நூறுரூபா சம்பளத்தில் அனந்தராமனுக்கு வேலையாயிருக்கிறதெனக் கடிதம் வந்தது. நடந்த விஷயங்களைக் கண்டெழுதி, உடனே ஆஸ்தியில் பாதி நடேசனுக்குக் கட்டாயமாய்க் கொடுத்துவிடவேண்டுமென்று அனந்தராமனுக்கு ஒரு கடிதம் அனுப்பினள். அவன், தன் தகப்பனருடைய 'உயிலி'ன்படி நடப்பதாயும் தன் மனைவியாக வரப்போகிற ஜீங்காவனம் கஷ்டப்படா

மல் சௌக்கியமாய் வாழவேண்டுவதற்குப் பணம் அதிகம் வேண்டு மெனவும் பதில் எழுதியனுப்பிவிட்டான். "அனந்தன் ரொம்பப் பேராசைபிடித்தவன்" என்று அத்தையம்மாள் அடிக்கடி புலம்பி னாள். எந்தப்பக்கம் திரும்பினாலும் அவளுக்கு மனச்சந்தோஷமே இல்லாமற்போய்விட்டது.

"சக்கரவர்த்தினி" கப்பல் பாலாம்பாளுடனும் அதன் தலைவ னான நடேசனுடம் புறப்பட்டுப்போய்விட்டது. தன் விதியைத் தானே நொந்துகொண்டு அத்தையம்மாள் அன்னபூரணியம்மாள் விசாரத்துடன் பல்லவராயன்பேட்டையில் காலங்கழித்துவந்தாள். பிறருடைய காரியத்தில் வேண்டாதவளவு தலையிட்டுக்கொள்வது பாதகம் என்று அறிந்துகொண்டாள். பாலாம்பாள் சொன்னது போல், எல்லாம் ஈசன்செயல் என்று விட்டிருந்தால் மிகவும் நன் மையாகவே முடிந்திருக்கும்.

ஸ்ரீசைலர்.



# அழகு.

## அழகின்பயன்.

மாந்தர்களுக்கு இயற்கையரசி அளிக்கும் கொடைகளிரண்டிருக்கின்றன. அவையாவன: மேலான அறிவுடைமையும் அழகுடைமையுமாம். அறம்பொருளின்பம் ஆகிய மூன்றும் அறிவுடையார்க்கும் எழிலுடையார்க்கும் சித்திக்கின்றன. அறிவுடையார் இவைகளையடைதல் சாதாரணமே. ஆனல் எழிலுடையார் இவையிற்றினை எய்துதல் எவ்வாறெனின் பின்னர்ப்போதரும் விஷயங்களாலென்று தெளியலாகும்.

செல்வமுடைமையும், உயர்குடிப் பிறப்பினராதலும், அதிகாரமுடைமையும் அறிவிற்கும் எழிலிற்கும் நிகராகாது என்று மேலையோர் கூறுவார். மற்றையோர் தேக

சௌக்கிய முடையராயிருத்தலே மேற்சொன்ன எல்லாவற்றினும் மேன்மை என்பர். உண்மையான அழகுடையாரெவரும் தேகசௌக்கியமுடையராயிருத்தலே அதிக அவசியமென்பது தெரிந்த விஷயமே. தேகசௌக்கியமின்றி அழகுடையராத லியலாது. எனினும் அழகின்றித் தேக சௌக்கியமுடையராதல் மிகவும் சாதாரணமே.

உலகவின்பத்தைத் துறந்தவரும் அழகினைத்துறத்தல் முடியாது. நம்மைப்படைத்த கடவுளும் அழகுடையவரே. இதுவிஷயத்தை யவர் படைப்பினையுற்று நோக்கினால் தெரியவரும். பலவன்னச் சிறைகளையுடைய பறவைகளையும், பார்வைக்கின்பம் விளைக்கும் சிறகுகளையுடைய மயிலினையும், வன்னத்தினொற்றுமையினாலும் உருவத்தின் அழகினாலும் மேம்பாடுறும் மலர்களையும், எல்லாவற்றினும் மேலான மானுட சிருஷ்டியினையும் உற்றுநோக்கினால் இறைவனுடைய அழகுடைமை நன்குவிளங்கும்.

ஒரு மனிதனுடைய குணத்திற்குப் பிற்பட்டது அழகுடைய முகத்தினனாதல். அழகிய முகத்தினாலேயே நம் வாழ்நாளின் பயனை யடைகின்றோம். ஒருவனுடைய குணகுணத்தின் தன்மையைத் தெளிவதன் முன்னம் அவனுடைய முகத்தின் செவ்வியினைக்கண்டு நட்புப் பாராட்டுகின்றோம். இத்தகைய நட்பு அனேக சந்தர்ப்பங்களில் அன்பாய் முடிகின்றது. இதைத் தான் 'கண்டதுங் காதல்' என்று சாதாரணமாய்ச் சொல்கின்றோம்.

"என் முகமே என் செல்வம்" என்று ஒரு பெண் சொல்வதை எத்தனைமுறை கேட்டிருக்கின்றோம். அழகுடைய முகத்தினர் சீக்கிரம் மணக்கப்படுகிறார்கள் என்பது உண்மைபொதிந்த உரையேயாயினும் நம் வாழ்க்கைத் தொல்லைகளினின்றும் நீங்குதல் முகத்தினழகினாலேயே என்று தோன்றுகின்றது. அனேகவியாபாரிகள் தங்கள்

கடையைப் பார்த்துக்கொள்ள அழகுடைய முகத்தினரையே ஆற்றலுடைய அழகிலாரைப் பார்க்கினும் விரும்புகின்றனர். அழகுடைமையொருவகை முதன்மையைத் தருகின்றது என்று புருஷர்களும் ஸ்திரீகளும் தங்கள் தங்கள் வாழ்நாட்களில் உணர்ந்துகொள்வார். ஒருவனுக்கு நன்மையையும் தீமையையும் பயப்பதற்கு அழகு என்பது ஒருவகைச் செங்கோல் என்று சொல்லலாம். இச்செங்கோல் அனேகருடைய வியாதியினையும் வென்றிருக்கின்றது. அழகினாலேயே அனேக தேசங்கள் ஆளப்பட்டிருக்கின்றது, அழிந்துமிருக்கின்றது. இவைகளுக்கு உதாரணங்கள் நம் புராணங்களையும் தேச சரித்திரங்களையும் உற்று நோக்கின் நன்கு வெளிப்படும்.

## அழகின்தன்மை.

அழகு இயற்கைவகையானும் செயற்கைவகையானும் இருதிறத்தினவாகும். இயற்கை யழகுடையார்க்குச் செயற்கையழகு அவ்வளவாய் பயன்படுகிறதில்லை. இதனானன்றே கம்பநாட்டாழ்வாரும்

"கோனணி சங்கம் வந்து குடியிருந்தனைய கண்டத்
தீனமில் கலன் கடம்மினியை வனவணிதல் செய்தார்
மானணி நோக்கினார் தம்மங்கலக்க ழுத்துக்கெல்லாம்
தானணியானபோது தனக்கணியாது மாதோ."

என்று புகன்றனர். அழகிலார்க்குச் செயற்கை யழகு பயன்படுகிறதில்லை. அழகான் மேன்மை எய்திய பல்வேறு உறுப்புக்களின் ஒற்றுமையான் தனியழகு உண்டாகின்றது. இதனை ஒரே உருவத்தின்கண் காணலாகும். பல உருவங்களின் அழகுடைய பாகங்களையும் மனத்தினால் ஒன்று சேர்த்துப் பார்க்கும் அழகு கற்பனையழகு என்னலாம். யவனர்கள் (Greeks) தங்கள் கடவுளரை இத்தகைய பல புருஷர்களுடையவும் ஸ்திரீகளுடையவும் அழ

கிய வெவ்வேறான அவயவங்களை ஒன்றுசேர்த்து சித்தரித்தும் சிலையாகச்செய்தும் இருக்கிறார்கள். அவ்வுருவங்கள் சிற்ப சாஸ்திரத்தின் முடிவு என்று நாகரீகமுள்ள சாதியர்களால் புகழப்படுகின்றன.

சித்திரந்தீட்டுபவனுடைய எழுதுகோலினாலும் கற்றச்சனுடைய உளியினாலும் அழகு என்னும் பொருளை உலகினர்க்கு வெளியிடப்பட்டிருக்கின்றது. இவ்வகை யழகு இயற்கையரசி தன் மக்கட்குக் கொடுப்பதில்லை. மேலும் உருப்புக்களின் அளவை யொற்றுமையே அழகு என்று கணிதநூல் வல்லுநர் கூறுகின்றனர். உளநூற் புலவர்கள் நற்குணமுடைமையே அழகு என்கின்றனர். உடல்நூற் புலவர்களோ வென்றால் தசைகளின் வன்மையும் உருட்சியுமே அழகு என்கின்றனர். நல்லறிவுடைய நாவலர் மனத்தைக் கவரும் உருவமுடைமையே அழகு என்பது சிலர் கோட்பாடாகின்றது.

அழகு மூவகை வயதினரிடம் காண்கின்றது. முதலாவது பிறப்பு முதல் யுவதித் தன்மையை யடையும்வரையும் உள்ள அழகு. எப்படி ஒரு புஷ்பமானது முகையாயிருந்து முகிழுங்காலம் வரையிலும் அப்போதைக்கப்போது வேறு வேறு அழகுடன் கண்ணைக் கவருகின்றதோ அப்படியே மாந்தரின் அவயவங்கள் பருத்துச் சிறந்து தோன்றுகின்றது. இரண்டாவது யவ்வனமுதல் முப்பது வயதளவுமுள்ள அழகு. இக்காலத்திற்றான் குரலும் மாறுகின்றது. உண்மையான அழகு இந்தவயதிற்றான் விளங்குகின்றது. மூன்றாவது முப்பது வயதுமுதல் நாற்பது வயதளவும் ஸ்திரமாக அழகு ஸ்தம்பித்து நிற்கிறது. பிறகு அழகு என்பதே பறந்தொழிகின்றது.

சில ஸ்திரீகள் மற்றவர்களினும் அதிக காலம் அழகாகக் காணப்படுகின்றார்கள். ஐம்பது வயதளவும் ஸ்திரீகள்

அழகுடையராகக் காணப்படவேண்டும் என்று ஒரு சிறந்த வைத்தியர் கூறுகின்றனர்.

### அழகினையடையக்கூடிய வகை.

அழகினையடைதல் முடியாத காரியம் என்று பலர் கூறுவார். இவ்விஷயத்தை நன்றாய் ஆராய்ந்துணர்ந்தவர் அடையலாகுமென்று ஒப்புக்கொள்வார். ஆனால் மூக்கின் பெருமை, சிறுமை, வாயின் அகலம், அதரங்களின் பருமன், கண்களின் பெருமை வன்னம், காதுகளின் தோற்றம், முகவாயின் உருவம் ஆகிய இவைகளை நம்மால் எவ்விதத்தானும் மாற்றமுடியாது. இவைகள் இயற்கையினாலேயே உண்டாகின்றன. மனத்தின் மாறுபாட்டால் முகத்தை யழகாகத் தோற்றச் செய்யலாகும். சுகாதார விதிகளைக் கவனிப்பதாலும் தகுந்த உணவுகளை ஏற்றுக் கொள்வதனாலும் முகத்தை அழகாகச் செய்யலாகும்.

சாதாரணமாக ஒரு தாய் தன் மகனைப் பிரியுமமயத்தில் "உன் முகத்தை எனக்கு மாற்றாமல் திரும்பிக் கொணர்வாய்" என்று சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். ஒருவனுடைய நடவடிக்கையே அவன் முகத்தை ஒரு வகையாகச் செய்கின்றது. ஆகவே ஒருவனுடைய முகத்தை யுற்று நோக்கினால் அவன் வாழ்க்கையில் நடந்த முக்கியமான விஷயங்களை எடுத்துச் சொல்லலாகும். குறி சாஸ்திரம் நம்மவரிடம் இக்கொள்கையை மேற்கொண்டே ஏற்பட்டிருக்கிறது.

> "கைக்குறி பார்க்கிலிந்தக் கைபிடிப்பவர் தாமெட்டுத்
> திக்குமே யுடையரார்வர் சேகமகராசி நீயே"

என்று குறவஞ்சி கூறுதலும் ஒருவகை யுண்மையாமாறு தெளிக. இயற்கையாகவே நாம் ஒருவனுடைய முகத்தைப் பார்த்ததும் அவனை இன்னனென்று தெரிந்துகொ

ள்கிறோம். குழந்தைகளும் (எனவே பழக்கமின்றித் தானுகவே) உயர்ஜாதி மிருகங்களும் ஒருவனுடைய முகத்தைப் பார்த்ததும் உடனே நல்லவன் கெட்டவன் என்று தெரிந்துகொள்கின்றன.

"உன்முகத்தை யழகு குன்றுமல் திரும்பிக்கொணர்கி" என்று பிரியும் மகனைத் தந்தை சொல்வது மிகவும் சிரிதாகவிருக்கின்றது. ஒருவனுடைய வாழ்நாளில் அடையும் இன்பதுன்பங்களே அவன் முகத்தைச் சீர்ப்படுத்துகின்றது. உண்மையாகவே அவன் சரித்திரம் முகத்தில் எழுதப்பட்டிருக்கும். 'அகத்தினழகு முகத்திற் றெறியும்' என்பது எல்லோருமுணர்ந்த மூதுரையே. சிறுகுழந்தைகளும் மற்றும் சில மிருகங்களும் ஒருவனைக் கண்டதும் நல்லன் தீயன் என்பதைத் தெரிந்துகொள்கின்றன. அவனிடம் உடனே அன்பாவது பகைமையாவது பாராட்டுகின்றன. ஒவ்வொரு மனிதனும் சமயத்திற்குத் தக்கவாறு தன்முகத்தை வைத்துக்கொள்கின்றான். வெளித்தோற்றத்தால் அறியக்கூடாத மனிதனும் உளனே? ஒவ்வொருவனுடைய நடவடிக்கையும் தானே செய்துகொள்கிறுன் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வீர்களன்றே. அப்படி ஒப்புக்கொண்டால் அவனவன் முகத்தையும் அழகாகச் செய்யச் சக்தியுடையவனுகின்றான். முகத்தின் பாகங்கள் தனித்தனியே அழகாகவிருந்தாலும் அதன்கண் தோன்றும் குறிகளே வசீகரிக்குந் தன்மையையாவது வெறுக்குந் தன்மையையாவது அடைகின்றது.

நாம் சிறுவயதிலேயே நம்முகத்தை ஒருவிதமாகத் தோற்றச்செய்கிறோம். சுமார் முப்பது வயதானதும் முகக்குறிகள் ஸ்திரத்தையடைகின்றன. ஆனுல் இன்பத்தையளிக்கும் குறிகள் இளமையிற்றானடைகின்றோம். மனத்தில் தோன்றும் ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு

குறியை முகத்திற் செய்கிறது. அவ்வெண்ணங்களின் குறி உடனே தெரியாமற்போனாலும் பலவிசை அதே எண்ணங்கள் மனத்தைக் கவருமாயின் அக்குறி முகத்தில் தெற்றெனத் விளங்கும்.

அழகு மேல்தோன்றும் சருமத்தினளவினதன்று. அகத்தினெண்ணங்களாலேயே முகத்தின் தோற்றம் செய்யப்படுகின்றது. முகம் அகத்தினெண்ணங்களைக் காட்டும் கண்ணாடி என்பதற்குச் சந்தேகமில்லை. அது ஒருவனுடைய குணத்தின் சாயை.

அனேக காலமாய் ஒருவகையாகவே தோற்றும் முகத்தை வேறுவிதமாகவும் மாற்றுதல் கூடுமோ என்று சந்தேகிப்பார் பலர். ஆனால் அவ்விதம் மாற்றுதல் கூடுமென்று எமக்குத் தோற்றுகின்றது. ஒரு முகத்தைப் பார்த்தவுடனே துக்கங்களை அனுபவித்தவன் என்று உடனே தெரிந்துகொள்கிறோம். இவர்கள் வாழ்க்கைக்கு இன்பத்தையளிக்கும் சூரியனைக்கரிய போர்வையினால் மறைக்கிறார்கள். இத்தகைய வாடிக்கையான நடவடிக்கையை சிறிது சிறிதாக மாற்ற முயலவேண்டும். பிறகு மாற்றியதும் முகம் அழகான குறிகளை மேற்கொள்கின்றது. அனேகர் சிறுவயதிலேயே அடையமுடியாத மேன்மையை விரும்பி ஏமாந்து மனத்துயரடைகிறார்கள். அத்தகைய ஏமாந்த குறிகள் முகத்தின்கண் காணப்படுகின்றது. அவைகளையொழித்தல் கஷ்டமாயினும் அசாத்தியமன்று. முகத்தைச் சந்தோஷக்குறியுடன் வைத்துக்கொள்வதற்கு நேற்றைய விஷயங்களை இன்றைக்கு மறந்துவிட்டு நாளைக்கு அடையவேண்டியதையே எண்ணியிருத்தல்வேண்டும்.

சிலர் தாங்கள் அடைந்திருக்குமவைகளில் திருப்தியடையாமல் மேலும்மேலும் பேராசையுடன் விளங்குகிறார்

கள். உள்ளதைக்கொண்டு மனத்திருப்தி யடைவதே மேன்மை. மேலும்

"அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவா அது மேன்மேல் வரும்."

என்றதற்கேற்ப நம் ஆசை எவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவு அடையாமற்போனால் துன்பமெய்துகிறோம். கம்பன், புகழேந்தி திருவள்ளுவர் இவர்களுடைய படங்களையாம் கண்டிருக்கிறோமா? அவ்வாறிருக்க அவர்கள் மனத்தின் மேன்மையைக் கண்டயாம் முகம் அழகாகத் தானிருக்கும் என்று சுபாவமாகவே எண்ணுகிறோமல்லவா? அழகிய முகத்தையடையவேண்டியவர் துயரத்திற்குப் பதில் இன்பத்தையும், அசூயைக்குப்பதில் இனிமையையும், கோபத்திற்குப் பதில் சாத்வீகத்தையும், இரக்கமின்மைக்குப்பதில் தயாளத்தன்மையையும், பொறாமைக் குணத்திற்குப் பதில் மனத்திருப்தியையும் அடைய முயல வேண்டும்.

சருக்கை இராமஸ்வாமி ஐயங்கார், பி. ஏ.



# கிறிஸ்துபோன்ற ஒழுக்க முறை நூல்.

---

[அறிவிப்பு.—இந்நூல் லத்தீன் பாஷையில் உள்ளது. இத்தாலியா தேசத்தில் கெம்பிஸ் என்ற கிராமவாசியாகிய தோமஸ் என்ற ஞானியால் இயற்றியது. இற்றைக்கு 510 வருஷங்களுக்கு முன்னர் இவர் இருந்தார். இந்நூலின்கண் உள்ள உண்மைப் பொருள்கள் பெரும்பான்மையாய் ஒரு மதத்திற்கும் விரோதமல்ல. எல்லாச் சமயிகளும் கைக்கொண்டு அனுஷ்டிக்கத்தக்கன. மேல்நாட்டில் உள்ள எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் மாத்திரம் மூன்று நான்கு வித்வான்கள் மொழிபெயர்த்துள்ளார். இத்தேசத்தின் பாஷையில் இதுகாறும் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தோன்றவில்லை. இப்பெரிய அரிய நூலை நம் தேசத்தார் எச்சமயரேனும் படிப்பாராகில், மதத் துவேஷம் குன்றிச் சமாதானமும், ஒப்புநோக்கும் சுபாவமும் பெறுவர். இப்புத்தகத்தை உள்ளபடி கிறிஸ்துவர் உணர்வாராகில், பிறமதத்தினின்று சிறுவர்களையும் சிறுமிகளையும் பெயர்த்து, கிறிஸ்துமதத்தில் சேர்க்க நாடார்—

ஆனசமயம் அதுஇது நன்று எனும்
மாய மனிதர் மயக்கம் அது ஒழி.
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது ஆமே."

"முத்திக்கு வித்து முதல்வன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே

சித்திக்கு வித்துச் சிவ்பரந் தான் ஆதல்
சத்திக்கு வித்துத் தனதுபசாந்தமே."

என்ற திருமூலர் அருளிய திருமந்திரவாக்குக்களுக்கு அநுசரணையாக இந்நூல் முறை செல்லுகின்றது. இத்தமிழ் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தினின்று செய்துள்ளது. முதல் நூல் கிரந்தகர்த்தாவின் ஹிருதயத்தை கூடியவரை தெரிந்து எழுத முயன்றேன். ஞான நூலாகையால், பூர்ணமாக அறிந்தேன் என்று சொல்ல வல்லேன் அல்லேன்.

இதை வாசிக்கின்றவர், கிறிஸ்து, இயேசு என்ற மொழிகளுக்குப் பதிலாக, அவர் அவர் சமயத்தில், உயர்வு பெற்ற ஞானியின் பெயரை வைத்து, வாசிப்பரேயாகில், மதச்செருக்கும் பகைமையும் கொள்ளார்—]

## அத்தியாயம் 12.

## துன்பத்தைபொறுத்தல் ஞானத்திற்கு நூஜவழி.

"உன்னை வெறு; துன்பத்தைப் பொறு. கடவுளைப்போல் நட." என்ற உபதேசம் அனேகருக்குக் கஷ்டமாகவே தோன்றும். ஆனால் அதைவிட அதிக கஷ்டமானது இதுவாம்——"நான் நடைபெற்ற வழியில் ஒழுகாமல் அதினின்றும் நழுவுகின்ற பாவிகாள், நீங்கள் சாபத்திற்கு உள்ளாயினீர்கள். அழியாத அக்கினியில் மூழ்குவீர்கள்."

பிரியத்துடன் சிலுவை வழியின் உபதேசத்தைக் கேட்டு அதைப் பற்றி யொழுகுகின்றவர்களுக்குக் கொடிய நரககதியின் பயம் வேண்டாம். கடவுளின் தீர்ப்புநாளில் இந்த சிலுவை என்ற அறிகுறி மேலுலகில் இருப்பதாகும். அப்போது நியாயாதிபதியாகிய கிறிஸ்துவின் முன்பாக அவர் வழிபட்டு அவர்போன்று நடைபெற்றூர், அச்சமின்றி நம்பிக்கையுடன், அவரிடம் வருவார். ஆகையால் சிலுவையைப் பற்றிக்கொள்வதில் என்ன பயம்? அதன் வழியாய், மேலான உலகம் கிட்ட இடமுண்டு. சிலுவையினால் (அதை தர்மமாகக்கொண்டு ஒழுகுவதினால்) தஞ்சம் உண்டு: அதனால் பிழைப்புண்டு: அதனால் பகைவரிடமிருந்து ரக்ஷணை உண்டு, அதனால் விண்ணின்று இன்பப்பிரவாகம் வரும். அதனால் ஆத்ம சந்தோஷம் ஜனிக்கும். அதுபற்றி ஒழுகப்பெறின் அதன்கண் எல்லாத் தருமங்களும் அடங்கப்பெறும். அது பரிசுத்தத்திற்குள்ள அழகான இடமாகும். ஆத்

மாவிற்கு சிலுவை நெறியைவிட வேறு புகலிடமில்லை. அதனால் உனக்கு ஏற்பட்ட சிலுவையை (துக்கபாரத்தை) பொறுத்துக்கொள், ஏசுவின் வழியிற் செல்லுக. அது என்றும் அழியாப்பதவியைக்கொடுக்கும். அவர் உனக்குமுன்னர் பாரந்தாங்கி வழிகாட்டி நடந்தாராயினர். உனக்காக அவர் அந்தச் சிலுவையில் உயிர் நீத்தார். அதை அநுசரித்து நீயும் உனக்கு ஏற்படும் சிலுவையைத் தாங்கி உன்னைத் தியாகஞ் செய்ய வேண்டுமெனக் கருதியே அவர் அப்படிச் செய்து காட்டினார். அவர்போன்று நீயும், உயிர்விடுவாயாகில் அவரோடு நீடூழி வாழ்வாய். அவர் துன்பத்தில் பங்காளியாகில் அவர் மகிமையிலும் பங்காளியாவாய்.

சிலுவை முறையில் எல்லாம் அடங்கும். தன்னைத்தான் வெறுத்தலே சிலுவை மார்க்கம்; அதனுள் எல்லா நலமும் இருக்கிறது. உள்ளபடி உபசாந்தம் பெற இதைவிட வேறு நெறி கிடையாது; நம்முடைய பாபத்தைத் தினந்தோறும் தொலைத்து நம்முடைய வைராக்கியத்தினால் எல்லா நன்மையும் அடைவதாகும், எந்நெறியையும் பாரு; எம்முறையையும் தேடு; இவ்வுலகில், சிலுவையின் உயர்வான வழியைவிட வேறு இடையூறில்லாத மார்க்கம் இன்றாம்.

உன் மனம் போனவாறு நீ செய்தாலும், உனக்குப் பிரியமான வழியில் நடந்தாலும்—நீ சட்டாயமாய் துன்பம் அடைவாய். உன் சரீரத்திலாவது, உன் மனசிலாவது, துக்கத்துக்குக்காரணமான ஏதாம் ஒரு துயரம் சம்பவித்தே தீரும். ஒரு, ஒரு சமயத்தில் இறைவன் அருள் உன்னைவிட்டு விலகுவதாகும். ஒரு, ஒரு காலத்தில். உனக்கு உற்ற சிநேகிதர், உன்னைப் பகைப்பர். இன்னும் சொல்லுகிறேன் கேள்—

நீயே உனக்குச் சத்துருவாகத் தோன்றுவாய். உன் கஷ்டத்தினின்று விலக உனக்கு முடியாமலிருக்கும். இறைவன் எண்ணம் எதுவரை நீ கஷ்டம் அனுபவிக்கவேண்டுமென்றிருக்கிறதோ அதகாறும் எந்த உபாயத்தானும் அதைத் தணிக்கவும் ஒண்ணாது. ஆறுதலின்றி நீ கவலைக்குள்ளாகி மனம் நைந்து சோதனையான், இடுக்கண்களினால் வருந்துவாய். பின்பு பணிவும் தாழ்மையும்பெறுவாய். இவ்விதம் நிகழ்தல் ஈசுவர சம்மதமாம். கிறிஸ்துவின் துன்பத்தை அவர் போன்று நடைபெற்றவரே அறிவார். அன்னியர் அறிகிலார்.

சிலுவையே (அதாவது துக்கமே) உலகவாழ்க்கையில் எவ்விடம் திரும்பினாலும் உள்ளது. நீ எங்கே ஓடினாலும் உன்னைவிடாது அது. அதைத் தவிர்க்க முடியாது. எங்கே ஒதுங்கினாலும், எச்சமயத்திலும், அது முந்துறும். ஆகாசத்திற் பறந்தாலும், பாதாளத்தில் ஒளிந்தாலும், உள்ளே ஒடுங்கினாலும், வெளியே திரிந்தாலும் அதை விட்டு விலக உனக்குப் போக்கிடம் காணாய். உள்ளே மனச்சமாதானம் வேண்டில், பொறுமையாக இரு. அழியாத மகுடம் பெறுவாய்.

2

சிலுவையைப் பிரீதியாய்ப் பொறுத்துக்கொள். அது உன்னை நல்வழியில் நடத்தும். நெடுநாள் பிரார்த்தனை கிடைக்கும். அதாவது துன்பம் நசித்து இன்பம் பிராப்தியாகும். இம்மையில் துன்பத்திற்கு முடிவு இன்றாம். அப்பிரீதியுடன் சிலுவையைப் பொறுத்தால் உனக்குக் கஷ்டத்தைத்தான் உண்டுபண்ணிக்கொள்ளுவாய். உன் துன்பம் பெருகுவதாகும். அதனால் எப்பொழுதும் அதைப் பொறுத்து நட. அதை உதறி எறிந்துவிட்டால் வேறு ஒரு துயரம் வரும். அது முன்னதைவிட அதிக பாரமாக இருப்பதாகும்.

அதைவிட்டுத் தப்பலாம் என்று எண்ணாதே. எவன் அதைவிட்டு விலகி ஓடக்கூடும். சிலுவையும் துக்கமும் கவலையும் இன்றி உலகில் எந்த ஞானி நடைபெற்றிருக்கிறார். நம்முடைய ரக்ஷகராகிய இயேசு கிறிஸ்து நாதரும் ஒரு நிமிஷமாவது தம்முடைய சிலுவையாகிய துயரத்தினின்று விலகினாரில்லை—அவர் திருவாக்காவது—"கிறிஸ்து என்ற பெயர் உள்ளார், துன்பம் அனுபவித்தே தீரவேண்டும், மரண தர்மத்தினின்று விலகி மஹிமையை அடைவார்."

மோக்ஷத்திற்கு உள்ள மார்க்கம்—இந்த ராஜபாதையாகியசிலுவையைப் பற்றி ஒழுகுதலேயாம். வேறு நெறியில்லை. அவர் ஆயிசு காலமுழுமையும் துக்கமும் தியாகமுமே நேர்ந்தது. நீயோ சுகமும் சந்தோஷமும் வேண்டுகிறாய். இடுக்கண்ணும் துக்கமும் நீங்கலாக வேறு விரும்புவது வீணே குற்றமாம். குற்றமே! ஜன்மம் துக்கம். உலக வாழ்வு எப்போதும் துன்பமும் துக்கமும் நிறையப்பெற்றுள்ளது. துறவிமார்க்கத்தில் உயர உயர சோதனையாக துக்கமும் இடையூறும் பெருகிக்கொண்டே வரும். அன்பு மிகவும் உலக தண்டனை அதிகரிக்கும்—அதாவது உற்ற இடமில்லாது உலகத்தின்கண் ஆயுஸும் விருத்தியாவதாகும்.

3

பல துன்பங்களினால், மனிதன் சோதனைக்குட்பட்டாலும் தன்னை உயர்த்திக்கொள்ளலாமென்ற ஆறுதல் உண்டு. ஏனென்றால் அத்துன்பங்கள் சார்ந்த சிலுவை மார்க்கத்தை அனுசரிப்பதில் பெரிய நன்மை பயப்பதை உணருகிறான். பொறுமையுடன் கஷ்டங்களை அனுபவிக்க அவைகளே இறைவனிடமிருந்து கிடைத்த ஆறுதல்போன்று பரிணமிக்கின்றன. துன்பங்களினால், சாயம் கிலேசப்படக் கிலேசப்பட உள்ளே பொங்கும் அருளினால ஆன்ம உறுதிப்பாடடைகிறது. ஆகவே சில சில சமயங்களில் துன்பமே தனக்கு வரட்டுமெனப் பிரியமுடன் விரும்புகிறான். இயேசுநாதர் போலே தானும் வருத்த முறுதல் நலமெனக் கருதுகிறான். துக்கமும் கவலையும் தன்னை விட்டு நீங்காமலிருக்க வேண்டு மெனக் கோருகிறான். தன்னுடைய துயரமும் இடுக்கண்ணும் மிகப்பட மிகப்பட ஈசன் அன்பும் அருளும் தனக்குப் பெருகுமென நினைக்கிறான்.

இத்தன்மை யமனோ நிலையானது. மனிதனால் உண்டாக்கக் கூடியதன்று. கிறிஸ்துவின் அருளால் உண்டாகிறது. இயற்கையாக துன்பத்தை அகற்றி சுகத்தை நாடும் இந்த மானிட துர்பல சரீரம்; அதுவே இப்போது சுகத்தை வெறுத்துத் துன்பத்தை விரும்புகிறது. இது அந்த அருளின் அற்புத காரியமே. இடுக்கண்ணை சகித்தலும் துன்பத்தை விரும்புதலும், சரீரத்தைகிலேசப்படுத்துதலும், அதை அடிமைப் படுத்துதலும், புகழ் சம்மானங்களை விட்டு அகலுதலும், நிந்தனையைப்பொறுத்தலும், தன்னைத் தாழ்மைப்படுத்தலும், பிறர் தன்னைக் கீழானாக நினைக்க விரும்புதலும், கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அனுபவித்தலும், நல்லகாலம் வாவை வேண்டாமெனக் கோருதலும், இவையெல்லாம் மனிதனின் இயற்கைச்சுபாவம் அன்றாம். உன்னை நம்பி உன்னால் இவை சாதிக்கலாமென்ற எண்ணத்தை விடு. கடவுள்மேல் பாரம் வைத்து, அவரிடம் அன்பு பாராட்ட, உனக்குத் தைரியம் உண்டாகும். சரீரப் பற்றும், உலகப்பற்றும் உன்னை விட்டுக் கழலும். அவை உன் சுவாதீனமாகும். கிறிஸ்துவின் வழிபட்டு பூர்ணநம்பிக்கை கொள்ளுவாயாகில் மாயா உலக மயக்கம் என்ற பிசாசுக்கு நீ பயங்கொள்ள வேண்டாம்.

இனிமேல் கிறிஸ்துவின் நல்ல விசுவாசமுள்ள ஊழியனாக

இருக்கக்கடவாய். அவர் போன்று நீ ஒரு துன்பத்தை சகிக்கமுடியும். உன்னுடைய ஆன்ம க்ஷேமத்தின்பொருட்டு அவர் சிலுவையில் உயிர்விட்டார். உனக்கு வைரியாக இருக்கும் துன்பங்களைப் பொறுக்க ஆயத்தம் செய்துகொள்ளுக. அதனால் துன்பத்திற்கு இடமான உலகவாழ்க்கையில் அநேகத்தைத் தாளுகவே நீ வெறுப்பாய். நீ எங்கேயிருந்தாலும் நீ எங்கே ஒளிந்தாலும் உலகத்துயரம் உன்னுடனேயே யிருக்கும்: அகலாது, அவைகளை விலக்கமுடியாது. அவைகளை சகித்தலே உபாயம். கிறிஸ்துவின் சிநேகமும் அவர் அம்சமும் நீ பெறவேண்டுவோயாகில் அவர் பட்ட துன்பத்தைப் பிரியத்துடன் பற்றுக. ஆறுதலைக் கடவுளிடம் நீயாக வேண்டற்க. அது அவர் இஷ்டமென நினைக. கஷ்டங்களை யெல்லாம் சுகமெனக் கருதுக. இப்போது படும் துன்பம் இனி வரும் சுகத்திற்கும் மகிமைக்கும் ஈடு உண்டா? உலகத்தின் துக்கங்கள் எல்லாம் ஒருங்கே சேர்ந்து உன்னுடையதாக நேரினும் இனி உனக்கு உண்டாகும் ஆனந்த பதவிக்கு உவமிக்க நேர் இல்லை.

4

துக்கங்கள் சுகமாகவும் கவலைகள் இனிமையாகவும் கிறிஸ்துவை நோக்கி பொறுத்தலினால் ருசியாகவும் நீ எண்ணும்படி நேர்ந்தால் அப்போது நீ மெய்யுணர்வு பெற அருகனாயிருக்கிறாய் என நினை. உலகத்தில் சொர்க்கத்தைப், பெற்றிருக்கிறாய் என அறி. துன்பத்தைப் பொறுத்தல் கஷ்டமாகவும், அதினால் அதைத் தவிர்க்க முயலும் வரையிலும் மனம் கிலேசத்திற்கு உள்ளாகியேயிருக்கும். நீ போனவிடம் எல்லாம் துன்பம் துயருவதாகும். நீ செய்யவேண்டியதாகியது என்னவென்றால் துன்பத்தைப் பொறுத்துத் தன்னை வெறுத்தலே. அதனால் சீக்கிரம் நீ நன்மை பெறுவாய். சாந்த நிலை அடைவாய்.

பால் ஞானியாருடன் மோக்ஷத்தின் மூன்றும் நிலையில் நீ இருக்கப்பெறினும் துன்பம் இனி இல்லையென எண்ணற்க. இயேசு நாதர் சொல்லுகிறதாவது—: "எனக்காக இனி எவ்வளவு துன்பம் சகிக்கவேண்டும் என்பதைக் காட்டுவேன்." அதனால் என்ன தெரிய வருகிறதென்றால்—இயேசுவை நேசித்து அவருக்கு அடிமைப்படின் துன்பமும் தொடர்ந்தே நிற்பதாகும்.

ஏசுவுக்காக துன்பப்படுதல் என்ற மகிமையைப்பெற பாத்திர

வாஞக இருக்கக்கடவாய். அதனல் ஞானிகளுக்குள் உனக்கு உண்டாகும் கீர்த்தி எத்தன்மையது என்று சொல்லுவேன்! உலகத்தாருக்கு எவ்வளவு அறிவு பயக்கும் உயர்வான உதாரணமாக ஏற்படுவாய்!

எல்லாரும் துன்பத்தைப்பொறு என்பார்—அந்தோ!- அப்படி செய்வார், சிலரே. எல்லாரும் உலகத்திற்குப் பாடுபடுகின்றனர். நீயோ இயேசுவுக்காகச் கொஞ்சம் வருந்துகின்றாய். அது தான் அறநெறி.

5

உன்னை வெறுத்து வெறுத்து வாழ்நாள் நடத்தலே நலமாம். ஒருவன் தன்னைத்தான் எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கிறானே அவ்வளவுக்கவ்வளவு இறைவனுக்கு உற்றவனவான். கிறிஸ்துவுக்காகத் துன்பம் பொறுக்க முயலாதான் மோக்ஷ விஷயங்களை அறியமாட்டான்—பிரியத்துடன் ஏசுவுக்காக இவ்வுலகத் துன்பத்தைச் சகித்தால், அதுபோன்று கடவுளுக்குப் பிரீதியானது வேறு ஒன்று இன்றும். இரண்டில் ஒன்று தேடவேண்டில், உலக சுகத்தை விடுக. ஏசுவுக்காகத் துன்பத்தைப் பொறுத்தலேயே தேடுக. அதனல் அவரை யணுகுவாய். எல்லா ஞானிகள்போல் ஆவாய். நம்முடைய யோக்கியதையும் நம்முடைய உயர்வான மார்க்க கெதியும் உலக சுகத்திலும் சந்தோஷத்திலும் இல்லை. துன்பத்திலும் கவலையிலும் அழுந்தி வருந்துவதிற்றான் பிரகாசிக்கும்.

பொறுமையைத் தவிர சாவதானமான வேறு மார்க்கம் இருக்குமேயாகில் தம்முடைய வசனத்தாலும், ஒழுக்கத்தாலும் கிறிஸ்து வெளியிட்டிருப்பார். ஆனல் தம்முடைய வழிப்பட்டவர்களுக்கும் இனி வழிபடுகிறவர்களுக்கும் அவர் உபதேசமாவது—"என்னை அனுசரிக்கிறவர் தம்மை வெறுத்தல்வேண்டும். துன்பம் சதமெனஎண்ணி என் வழிப்படவேண்டும். என்னைப்போன்று ஒழுகவேண்டும்."

ஆகையால் இதுவரை ஏற்பட்ட சாஸ்திரங்களைப் பாருங்கள். ஆராயுங்கள். "பல துன்பமும் இடுக்கண்ணும் பட்டுத்தான் இறைவன் அடிசேரவேண்டும்."

ஆத்மநாதன்.

(இரண்டாம் புத்தகம் முற்றிற்று.)

# தென்னாட்டு மறவர்கள்.

இராமநாதபுரம் சிவகங்கை ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் அந்நாடுகளைச் சார்ந்த கடற்கரை நாடுகளிலும் ஏராளமாய்க் காணப்படுகின்றனர். பண்டைக் காலத்திய பாண்டியநாட்டில் இவர்கள் பெரிதும் விளங்கிய தாகத் தேச சரித்திரமுணர்ந்தோர் கூறுவார். இவர்கள் வீரத்தனத்தினாலும், கொடுமையினாலும், சச்சரவிடுந்தன்மையினாலும் அருகில் வசிக்கும் மற்றைய ஜாதியார்க்குப் பயத்தை யுண்டுபண்ணினர். கி. பி. பதினாரும் நூற்றாண்டில் இராமநாதபுர அரசர்கள் மறவர் ஜாதியார் என்று அத்தேச சரித்திரத்தி லீடுபட்டார் உரைப்பார். இவர்கள் தென்னாடு முழுவதிலும் ஆதிபத்யம் அடைந்தனர். மேலும் அக்காலத்தில் இரண்டு தினங்களுக்குள் நாற்பதினாயிரம் மறவர்களை ஒன்று கூட்டுஞ் சக்தியை அவ்வரசர்கள் அடைந்திருந்தனர். தற்காலத்தில் இச்சாதியார் சுமார் எண்பதினாயிரவரே மதுரைச் சில்லாவிலிருக்கின்றனராகத் தெரிகிறது. அடிக்கடி இச்சாதியார் பஞ்சத்தில் அடிபட்டு வருந்தியதாகவும், கி. பி. 1814-ம் வருஷத்தில் இலட்சத்தைம்பதினாயிரம் ஜனங்கள் இராமநாதபுரத்தினின்றும் சிவகங்கையினின்றும் வெளியேறினதாகவும் முகவைச் சரித்திரத்தால் அறியக் கிடக்கின்றது.

மறவர் என்ற் பெயர் தங்களுக்கு வந்ததைப்பற்றி ஒரு சரித்திரம் வழங்கிவருகிறது. ஸ்ரீராமபகவான் கொடிய அரக்கனை இராவணனுடன் போர்புரிகையில் இம் மறவர்களால் பெரிதும் உபகாரம் அடைந்ததனிமித்தம் பகவான் 'மறவேன்' என்றியம்பினராம். அதுமுதல் அப் பெயரால் அவர்கள் விளங்கினராம். ஒருகால் 'மறம்' என்னுஞ்சொல்லிற்கு 'மறத்திற்கொல்களிறு' என்ற புறநானூற்றிற்போல வீரம், கொலை, கோபம், வன்மம் எனப் பொருள்கள் இருத்தலி னிக்குணங்கள் பொருந்திய ஜாதியார்க்குப் பெயரானதென்று சொல்லுதல் நேரிதாகும். பெரும்பாணாற்றுப்படையில் 'மறவர் மறவ' என்றதற்குக் 'கொடியோர்க்குக் கொடிய' என்று நச்சினார்க்கினியர் கூறுவதனாலும் இச்சாதியார் தன்மை நன்கு விளங்குகின்றது.

மறவர்கள் சிவபக்தர்கள் என்கின்றனர். ஆனல் உண்மையாக கருப்பண்ணன், பத்திரகாளி, மதுரைவீரன் ஆகிய துர்த்தேவதைகளைத் தொழுது நரபலி கொடுத்தும் கள் முதலியவைகளைப் படைத்தும் வருகின்றனர். மறவர்கள் ஊண் புசிப்பதிலும் கள் குடிப்பதிலும் கைதேர்ந்தவராகையால் சிவபக்திக்கு விரோதமான செய்கைகளை யுடையவர் என்று தோன்றுகின்றது. இன்னும் இவர்கள் சாதாரண இந்துக்களின் நடவடிக்கைக்கு நேர் விரோதமான செய்கைகளைச் செய்கின்றனர். சகோதரர் மக்கள் ஒருவரையொருவர் மணத்தல் இச்சாதியாரிடம் மிகவும் சாதாரணமாக வழங்கிவருகிறது. கைம்பெண்கள் இரண்டாமுறை இச்சாதியாரில் மணத்தலினாற் பிழையில்லை. மேலும் ஒரு ஸ்திரீ தான் மணந்த நாயகனை விரும்பாளாயின் வேறு ஒரு புருஷனை மணஞ் செய்துகொள்ளலாம். இம்மறவர்களிடம் நடைபெறும் மணவினை மிகவும் விசித்திரமாகக்காண்கிறது. இரண்டு தரத்தினரும் மண விஷயத்தைப்பற்றி

யாலோசித்து ஒருவகை முடிவிற்குவந்ததும் மணமகனின் வீட்டுச் சில பந்துக்கள் மணமகளின் வீட்டை யடைந்து பெண்ணின் இஷ்டத்தைக் கவனியாமல் வெளியே சங்கத் தொனி செய்துகொண்டு அவள் கழுத்தில் 'தாலி'யைக் கட்டிவிடுவது வழக்கம். தாலியைக் கட்டினபிறகு அம் மணமகளைப் புருஷன் வீட்டிற்கு அழைத்துவந்து அவ ரவர் தன்மைக்குத் தக்கபடி விருந்து செய்து சில சடங்கு களைச் செய்கிறார்கள். இச்சமயத்திலும் மணமகள் வீட் டிலிருப்பது அவசியமில்லை. இருதிறத்தினரும் ஏழையா யிருந்தால் தாலியைக்கட்டியதும் ஸ்திரீபுமான்களாக வசிக் கின்றனர். பிறகு நற்காலம் பிறந்தவுடன் குறைவுகளை நிறைவு செய்து கொள்கின்றனர். சில சமயங்களில் அனே கம் பிள்ளைகளைப் பெற்ற ஸ்திரீ குறைவாய் நின்ற மணச் சடங்குகளைச் செய்துகொள்கிறாள். அப்படிக்குறைவான மணச்சடங்குகளைச் செய்து முடிப்பதன்முன் புருஷன் இறந்தனனாயின் அவன் சவத்தை ஓரேமனையில் உட்கார வைத்து மணவினைகளை முடித்துக்கொண்டு பிறகு தரித் துக்கொண்டிருந்த தாலியைக் கழற்றிவிட்டு வேறு இஷ்ட மானவனை மணத்தல் வழக்கமாய்க் காண்கிறது.

மறவர்கள் 'தேவன்' என்ற அடைமொழியைப்பட்டப் பெயராக வகித்துக்கொள்கின்றனர். இவர்களின் நடை உடைபாவனைகளும் விநோதமாகக் காணப்படுகின்றது. தம் தலைமயிரை மிகவும் நீளமாக வளர்த்திக்கொள்கின்றனர். அவர்களுள் தலைமகனைத் தவிர்த்து மற்றையோர் வீட்டுப் பெண்பிள்ளைகள் காதுகளை மிகவும்நீளமாகும்படி கனமான வைகளைத் தரித்துக்கொண்டு வளர்க்கின்றனர். 'கனங்கு ழை' என்றதும் இதுபற்றியே நம்தமிழில் வந்ததுபோலும். புருஷர்கள் தலைப்பாகை முதலியன தரிப்பதில்லை. ஒரு கைத்துண்டைத் தலையில் சுற்றிக்கொள்கின்றனர். சாதா

ரணமாக ஒவ்வொரு மறவனும் போர்வீரனாகவே இருத்தல்வேண்டும். முன்காலத்தில் சேதுபதி அவரவர்களுக்குத் தக்கபடி நிலங்களைப் பயிரிடும்படி விடுவது வழக்கமாம். காலாட்படை வீரனுக்கு ஐந்து கலம் அரிசி விளையும் பூமியையும், துப்பாக்கி சுடுபவனுக்கு ஏழு கலம் விளையும் நிலத்தையும் முறையே தன்மைக்கேற்றவாறு அளித்துவந்தனர். மேலும் அவர்கள் அடையும் ஒவ்வொரு கலத்திற்கும் ஐந்து பணம் தீர்வையாக அரசற்குக் கொடுபடல் வேண்டும்.

இம்மறவர்களைச் சேர்ந்த சாதியார் அகம்படையர்களென்றும் இவர்களைச் சேர்வைக்காரன் என்றும் சொல்லுவது வழக்கம். மறவர்கள் அகம்படைய ஸ்திரீகளை மணக்கிறார்கள். இம்மாதிரி மணத்தலினாற் பிறக்கும் புருஷப்பிரஜைகள் மறுபடியும் அகம்படையர் பெண்ணை மணந்து அவர் வகுப்பினராதல்வேண்டும்; ஸ்திரீ பிரஜைகள் மறவர்களை மணந்து புருஷர்களின் வகுப்பினை ஏற்றுக் கொள்ளல்வேண்டும்.

சீ. சீதாபதி ஐயர், பி. ஏ.




# சென்னைக்கல்விப்பொருட்காட்சி.

## பொதுவிஷயங்கள்.

இந்தியர்கள் இந்நாட்டுக் கைத்தொழிலும், தொழிற்படிப்பும் அபிவிருத்தியாவதைக் கருதி பல சமயங்களில் இத்தேசத்தின்கண் சிறந்து விளங்கும் கல்கத்தா, பம்பாய், சென்னை, ஆமதாபாத், ஸ்ரீகாசி முதலியவிடங்களில் சென்ற ஏழு வருஷகாலமாக பொருட்காட்சிகள் நடத்திவந்தார்கள். அக்காட்சிகளுக்கு கவர்ன்மெண்டாரும் பொருளுதவிசெய்து ஆதரித்து வந்தார்கள். அப்படி நடத்தப்பட்ட பொருட்காட்சிகள் சாமான்யமானவைகளல்ல. அவைகளைக் கூட்டுவதற்குச் செய்யவேண்டியதாயிருக்கிற முன்முயற்சிகளும், பலவிடங்களிலிருந்துவரும்காட்சிசாமான்கள் அவ்வளவையும் ஒழுங்காகவைக்கத்தகுந்த விசாலமான மண்டபமொன்று அமைப்பதும், அதனில் அக்காட்சிப்பொருள்களை வரிசைப்படுத்தி அலங்காரமாக அடுக்குவதும், அவைகளை இரவும்

பகலும் இடைவிடாது காப்பதும், காட்சி நடந்து முடிந்த பின்னர் அவைகளுள் விலையாகாமலிருப்பவற்றை, அப்பொருள்களின் சொந்தக்காரர்களுக்குப் போய்ச்சேரும்படியாய் கட்டி யனுப்புவதும், தகுந்த பொருள்களுக்கு எற்றவித மாய்ப் பரிசளித்து உற்சாகத்தை யுண்டாக்குவதும், ஒருவர் இருவர் சேர்ந்து நிர்வகிக்கக்கூடிய வேலையன்று. நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஏகோபித்துச் செய்யவேண்டிய வேலையாயிருக்கிறது. ஆகவே பொருட்காட்சி யொன்று ஒரு வாரம் நடக்குமானால், அதனைக் கூட்டவும் கலைக்கவும் ஒன்பது மாதங்கள் செல்லுமென்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரி காட்சிகளைக் கூட்டுவதில் ஏராளமான உழைப்பும் கஷ்டமுமிருப்பதைக் கருதி இனி அம்மாதிரிக் கூட்டங்கள் வருஷந்தோறும் நடத்துவதை யொழித்து, கைத்தொழில் முயற்சி நாட்டில் சற்று பலித்து எங்குபார்த்தாலும் வியவசாயப் பொருட்காட்சிகளும், கைத்தொழில் பொருட்காட்சிகளும் அவ்வவ்விடத்திற்குத் தகுந்தபடி நடத்தப்பட்டுவருவதால் இனி முன்மாதிரி பிரதானபட்டணங்களில் நடத்தப்பட்டவைகளைப்போன்ற பெரும் பொருட்காட்சிகள் அவ்வளவு அவசியமானதல்லவென்றும் கருதப்படுகிறது. இப்பால் கைத்தொழில்களின் அபிவிர்த்தியைக் கருதி கூட்டப்பட்ட பொருட்காட்சிகளன்றி வியவசாயத் தொழில்களின் அபிவிருத்தியைக் கருதி வியவசாயப் பொருட்காட்சிகளும், கால்நடைக் காட்சிகளும், சிற்பசாஸ்திர விருத்தியைக்கருதி சிற்பசாஸ்திரப் பொருட்காட்சிகளும் அங்கங்கே நடைபெற்று வருகின்றன. இப்பொழுது இந்நாட்டுச் சிறுவர்கள் வித்தியாபிவிர்த்தியில் அக்கரைபாராட்டுவோர் கல்விப் பொருள் சம்பந்தமான காட்சியொன்றை நடத்த முற்பட்டு விமரிசையாய் நடத்தி முடித்தார்களென்று கேள்விப்படுகிற ஒவ்வொரு பாடசாலை உபாத்தியாயரும் மாணுக்கரும் சந்தோஷப்படாமலிரார் என்று கூறுவது அதிகமாகமாட்டாது.

கல்விப்பொருள் சம்பந்தமான காட்சியொன்றைக் கூட்டுவது சாத்தியமாவென்று ஒரு உபாத்தியாயரைக் கேட்டால் அவர் அநேகமாய் அசாத்தியமென்றே கூறுவார். இப்பொழுது கல்வியானது வரவரச் செழித்து பிள்ளைகளுக்கு போதிக்கும் முறையும் விரிந்து வருகிறபடியால் கல்விப்பொருட்காட்சியொன்று நடத்துவது அசாத்தியமல்லவென்றே கூறலாம். படிப்புச் சம்பந்தமாய், அதிலும் பிரைமெரி அல்லது கீழ்தரப்படிப்புச் சம்பந்தமாய் பல காட்சிப்பொருள்களைச் சேகரித்து அவைகளின் உதவியைக்கொண்டு கீழ்தர வகுப்புகளில் வாசிக்கும் பிள்ளைகளின் அறிவை எவ்வளவோ விர்த்தி செய்யலாம். அறிவை யென்று நாம் பொதுப்படக் கூறியது, அச்சிறுவர்களது ஐம்புல அறிவை மட்டுமல்ல; மற்ற உயர்வகுப்புப் பிள்ளைகளின் அறிவையும் விர்த்தி செய்யலாம். கல்விப்பொருட்காட்சிகள் பிள்ளைகளது அறிவை விர்த்திசெய்வதோடு உபாத்தியாயர்களுடைய புத்தியையும் விசாலிக்கும்படி செய்யுமென்பதில் தடையில்லை. இம்மாதிரிக் காட்சியொன்றால் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளுக்கும், அவர்களுக்குப் படிப்பு கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்கும் உண்டாகும் அறிவுப் பெருக்கமும் விஷயப் பரிசிலனைத்திறமும் மிகுதிப்படுமென்றே கூறலாம்.

ஆனால் இவ்விதக் கல்விப் பொருட்காட்சிகள் இவ்விந்தியநாட்டில் இதுவரை நடந்ததில்லை. பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகள் புஸ்தகங்களில் கூறியிருப்பனவற்றை நெட்டுருவாக்குவதைத்தான் அறிவார்களேயொழிய, இதுவரையில் கல்விப் பொருட்காட்சிகளை யறியமாட்டார்கள். உபாத்தியாயர்களும் அநேகமாய் அப்படியே. அதுபற்றி 1907-வது ஆகஸ்டுமாதக் கடைசியில் சென்னையில்ஒரு கல்விப் பொருட்காட்சியை நடத்துவதற்கு மிஸ்டர். M. சுப்பிரமண்யமும், மிஸ்டர். மாணிக்கம் செட்டியாரும் கௌரவகாரி

யதரிசிகளாகவும், மிஸ்டர் ஆர்தர். மேயூ பிரசிடெண்டாகவும் ஏற்படுத்தப்பட்ட ஓர் கம்மிட்டியார் அக்காட்சி சம்பந்தமாய் விசேஷஊக்கமெடுத்து வேலை செய்துவர, வித்தியா இலாகா த்தலைவர் கனம் மிஸ்டர். T. T. லோகன் துரையவர்களும் ஆதரிக்கிறாரென்று தெரிந்து அந்த மாதம் 24௳ வரை காட்சிப் பொருள்கள் பலவிடங்களிலிருந்து வந்து குவிந்த வண்ணமாகவே யிருந்தன. ஆயிரக்கணக்கான உபாத்தியாயர்களும் உபாத்திச்சிமார்களும், பிரைமரி ஸ்கூல் சூபர்வைசர்களும், சப் அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களும், அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களும், இன்ஸ்பெக்டர்களும் இராஜதானியின் ஒவ்வொரு மூலை முடக்கிலிருந்தும் வந்துகுவிந்தார்கள்.

சென்னையில் மிகுந்த விஸ்தாரமான ஸெனெட் ஹவுஸ்ஸில் (Senate House), 24௳ காலை 8மணிக்கு (Honourable Mr. R. S. Benson) ஆனரெபிள் மிஸ்டர். ஆர். எஸ். பென்ஸன் அவர்களால் திறக்கப்பட்டு, தமிழில் இராயப்பேட்டை கர்னல் ஆல்காட் பஞ்சம பாடசாலையின் பாலர்களாலும், இங்கிலீஷில் இராயபுரம் யுனைடெட் ப்ரீ சர்ச் மிஷன் போர்டிங் ஐஸ்கூல் பெண்களாலும், தெலுங்கில் பிரஸிடென்ஸி பெண் வாத்திமார் டிரெயினிங் ஸ்கூல் சிறுமிகளாலும் பாடப்பட்ட பாடல்களோடும், வீணை, பிடில் முதலிய வாத்தியகோஷத்தோடும் யாவரும் மெத்தையின்பேரிலுள்ள விஸ்தாரமான அறையில் கூடினார்கள். (Honourable Mr. R. S. Benson) ஆனரெபிள் மிஸ்டர். ஆர். எஸ். பென்ஸன் அக்கிராசனம் வகிக்க, ஆனரெபிள். மிஸ்டர். சிவஸ்வாமி அய்யர் சிறந்ததோர் ஆரம்பப் பிரசங்கம் செய்தார். இஸ்கூல் இன்ஸ்பெக்டர்களும், உபாத்தியாயர்களும் உபாத்திச்சிமார்களுமாக சுமார் ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் கூடியிருந்தார்கள். இக்காட்சிக் கம்மிட்டியார் தங்களுடைய காட்சியைத் திறக்க ஆனரெபிள் ஜஸ்டிஸ் ஸர். ஆர். எஸ்.

பென்ஸன் அவர்களையும், ஆரம்பப் பிரசங்கத்தைச் செய்ய ஆனரெபிள் மிஸ்டர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யரையும் தெரிந்தெடுத்தது மிகவும் பொருந்தியிருந்தது. அவர்களிருவரும் இம்மாகாணத்து வித்தியாபிவிர்த்தி விஷயங்களில் விசேஷ அக்கரை யெடுத்துவருகிறவர்களென்றே கூற வேண்டும். ஸர். ஆர். எஸ். பென்ஸன் சர்வகலாசங்கத்து, Vice Chancellor) வைஸ் சான்ஸலராயிருந்துவருகிறார். ஆனரெபிள் சிவஸ்வாமி அய்யர் சென்னைச் சட்டசபையில் ஸர்வகலாசங்க ஸகா ஸ்தானத்தை வகிக்கிறார். இப்படியிருக்கும்பொழுது இவர்கள் இருவரையும் கல்விப் பொருட்காட்சிக் கம்மிட்டியார் தங்கள் பொருட்காட்சியைத் திறந்துவைத்துத் தங்களைப் பெருமைப்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளாமல் வேறு யாரைக் கேட்பார்கள்? அவர்களிருவரும் கல்விப் பொருட்காட்சியைத் திறக்க இசைந்ததற்கேற்க, இம்மாகாண வித்தை இலாகா இன்ஸ்பெக்டர்களும், சென்னை கனவான்களிற் பலரும் வெளியூர் கனவான்களில் அநேகரும் காட்சிசாலைக்குக் கூட்டங் கூட்டமாய் வந்திருந்து காட்சிக் கம்மிட்டியாரைப் பெருமைப்படுத்தினார்கள்.

தவிர அவர்கள் தங்களுடைய சிறுவர் சிறுமிகளின் படிப்பை, அவர்களின் மனதில் தக்கபடி பதியும்படி செய்யக்கூடிய பொருள்கள் எம்மாதிரியான பொருள்களாகுமென்பதை, நாம் அறிந்து வருவோமே யென்ற உண்மையான அக்கரை மேலிட்டே இக்காட்சியைப் பார்க்க வந்தார்களென்று நினைக்கும்படியாயிருந்தது. கல்விப் பொருள்காட்சிகள் இதுவரையில் இந்நாட்டில் கூட்டப்பட்டதே இல்லையாயினும், 24௳ திறக்கப்பட்டு ஒருவார காலம் நடந்த கல்விப்பொருள் காட்சியானது வெகு வருஷகாலமாய் நடைபெற்றுவரும் காட்சிபோல் காணப்பட்டதேயன்றி, புதிதாய் இம்மாதிரி காட்சியொன்றை நடத்

தப்பழகுவோரால் சேர்க்கப்பட்ட காட்சியைப்போல் தோற்றவில்லை. காட்சிப்பொருள்கள் ஒவ்வொன்றும் அவ்வளவு திறமையாய் வரிசைப்படுத்தப்பட்டு அதிக ஒழுங்காயும் ஜனங்கள் போய் பார்த்துவர வெகு அநுகூலமாயும் வைக்கப்பட்டிருந்ததுடன், அப்பொருள்களின் ஒவ்வொரு தொகுதிகளின் பக்கத்தில் ஒவ்வொரு உபாத்தியாயர் நின்றுக்கொண்டு, இவை இன்ன பொருளாகும், பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதில் இன்ன விதமாய் உபயோகப்படும், என்று எடுத்துச்சொல்ல சித்தமாகவுமிருந்தார்கள். இப்பொருள் காட்சியைப் பார்க்க விரும்பினவர்கள் யாதொரு கட்டணமுமின்றியே உட்சென்று பார்த்து வந்தார்கள். காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையில் புருஷர்களும் ஸ்திரீகளுமாக அநேகர் போய்ப் பார்த்துத் திரும்பிக்கொண்டேயிருந்தார்கள். இக்காட்சிக்கு வந்திருந்த பொருள்கள் அத்தனையும் அவைகளின் உதவியைக்கொண்டு உபாத்தியாயர்கள் தாங்கள் சொல்லிவைக்கும் படிப்பு பிள்ளைகள் மனதில் பதியும்படி செய்வதற்குற்ற பொருள்களாயிருந்தனவென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்வருஷம் நடைபெற்ற கல்விப்பொருள் காட்சிபோன்ற காட்சி இனிப்பிரதிவருஷமும் நடைபெறவேண்டுமென்பதே நம்முடைய விருப்பம். ஏனெனில் அம்மாதிரி காட்சியால் விளையும் பயனை நாம் ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக்கையிட்டுச் சொல்ல முடியாதாயினும், காலக்கிரமத்தில் அவைகளால் பெருத்த நன்மைகளுண்டாகுமென்றே கூறுவோம். காட்சிப்பொருள்களின் உதவியின்றி புஸ்தகத்தை வைத்துக்கொண்டு கிளிப்பிள்ளைகளை யொப்ப பாடம் படிக்கும் சிறுவர்களும் சரியே, பாடம் சொல்லிவைக்கும் உபாத்தியாயர்களும் சரியே, இச்சென்னைக் கல்விப் பொருட்காட்சிபோன்றதோர் காட்சியால் அடையக்கூடிய பிரயோஜனம் சொல்லத்திறமன்று.

இக்காட்சியை இவ்வளவு விமரிசையாய் நடத்தப் பாடுபட்டவர்களில் கல்விப் பொருட்காட்சிக் கம்மிட்டியாரால் கௌரவ காரியதரிசிகளாய் நியமிக்கப்பட்ட மிஸ்டர் M. சுப்பிரமணியமும் மாணிக்கம்செட்டியாரும் முக்கியமானவர்கள். இவர்களையன்றி மிஸ்டர் (J. H. Stone) ஸ்டோன், மிஸ்டர் (A. Mayhew) மேஹ்யூ, மிஸ்டர் (P. P. Braithwait) பிரெயித்வெயிட், மிஸ்டர் (J. A. Yates) எட்ஸ், மிஸ்டர் A. C. பிரணதார்த்திஹர அய்யர் முதலிய கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்களும் அதிக அக்கரையுள்ளவர்களாய் கல்விப் பொருட்காட்சிக் கம்மிட்டியாரை உற்சாகப்படுத்தினர்கள். மைசூர் திவான் மிஸ்டர் V. P. மாதவராவ் அவர்களே இப்பொருட்காட்சியைப் பார்ப்பதற்காக சென்னைக்கு வந்து மிஸ்டர் (A. Mayhew) மேஹ்யூவால் வரவேற்கப்பட்டு பொருட்காட்சி சாலையின் ஒவ்வொரு பாகத்திற்கும் அழைத்துக்கொண்டுபோய்க் காட்டப்பட்டதில், காட்சிப்பொருள்கள் வரிசைசெய்யப்பட்ட மாதிரியைப்புகழ்ந்து, காட்சிப்பொருள் கம்மிட்டியார் இவ்விஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு நன்றி பாராட்டி, கல்விப் பொருட்காட்சியின் அவசியத்தையும் உபயோகத்தையும் வியந்து ஆனந்தமடைந்தாரென்றால், காட்சிப்பொருள்களைப் பார்த்த மற்றவர்கள் சந்தோஷத்தையடையவும் பிரயோஜனத்தைப் பெறவும் கேட்பானேன்.

தவிர வெளியூர்களிலிருந்துசில இஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களும், நார்மல் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்களும், மற்றப் பாடசாலை உபாத்தியாயர்களும், போதனைமுறை பயிலும் மாணாக்கர்களில் பலரும் இக்காட்சியைப் பார்க்கவந்து சென்றுக்கொண்டேயிருந்ததன்றி, தினப்படி சென்னையிலுள்ள பலர் தங்கள் குழந்தைகளுடன் வந்து கல்விப்பொருள்களைப் பார்த்துச் சென்றார்கள். மாதர்களும் கூட்டங்கூட்டமாய் வந்துபார்

த்து திரும்பிக்கொண்டேயிருந்தார்கள். கோஷா ஸ்திரீகளு ம், மற்றும் புருஷர்களுக்கிடையில் பிரவேசித்துகல்விப்பொ ருட்களைப்பார்க்க இஷ்டப்படாத மாதர்களும் தாராளமாய் வந்து பார்த்துப் பயனடையும் பொருட்டு, 27உ செவ்வா ய்க்கிழமை ஸ்திரீகள்மட்டும் கல்விப்பொருட்சாலைக்குள் விடப்படுமென்பதாக திட்டம் செய்திருந்தபடியால், கோ ஷா ஸ்திரீகளும் மற்றவர்களும் தங்கள் சிறுமிகளுடன் வந்து பார்த்து குதூகலமடைந்தார்கள். 28, 29, 30ம் தேதிகளில் பாடசாலைப்பிள்ளைகள் தங்கள் உபாத்தியாயர் களுடன் காலை 11மணி முதல் 1 மணி வரையில் வந்து பார்த்துச் சொல்லலாமென்று திட்டம் செய்திருந்தபடி யால் ஆயிரக்கணக்கான பாடசாலைப் பிள்ளைகளும் பெண் களும் தங்கள் உபாத்தியாயர்களுடன் வந்து பார்த்துத் திரும்பினார்கள். ஆகவே தினத்திற்குப் பத்தாயிரக்கணக் கானவர்கள் இப்பொருட்காட்சியை வந்து பார்த்துச் சென்றதால் கல்விப்பொருட்காட்சி நடந்த ஏழுநாட்களு ள் சுமார் லக்ஷத்திற்குக் குறையாத ஜனங்கள் வந்து பார்த் துப் பிரயோஜனமடைந்தார்களென்று நம்பலாம்.

## பிரசங்கம்.

ஆகஸ்டுமீ 24உ சனிக்கிழமை, காலை 8 மணிக்கு (Hon. Sir Benson) ஆனரெபிள் ஸர். பென்ஸன் அக்கிரா சனம் வகிக்க, ஆனரெபிள் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரவ ர்கள் கல்விப்பொருட்காட்சியின் அவசியத்தைக்கூறி ஆரம் பப் பிரசங்கம் செய்தார். அதை ஸர் பென்ஸன் ஆதரித்து ப் பேசியபிறகு கல்விப்பொருட்காட்சிக் கம்மிட்டி பிரசி டெண்ட் மிஸ்டர் ஏ. மேஹ்யூ அவர்கள் பிரசிங்கியாருக்கும் அக்கிராசனாதிபருக்கும் உபசாரமொழிகள் கூறி காட்சிப் பொருட்களைப் பார்வையிடும்படி கேட்டுக்கொண்டார்.

26உ திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு குருடர்களுக்

குப்பாடம் சொல்லிவைப்பதை உபாத்தியாயர்களுக்குக் காட்டப்பட்டது. மாலை 5 மணிக்கு மிஸ்டர் (J. A. Yates M.A.) ஜே. ஏ. எட்ஸ் அக்கிராசனம் வகிக்க மிஸ்டர் (J. H. Stone) ஜே. எச். ஸ்டோன் (Drawing) டிராயிங், உருவம் வரைதலைப்பற்றி ஒரு அற்புதமான பிரசங்கம் செய்தார்.

27வ செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்கு குருடர்களுக்குப் பாடம் கற்பிப்பதை உபாத்திச்சிமார்களுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும் காட்டப்பட்டது.

மாலை 4 மணிக்கு சரிகைவேலை, சித்திரத்தையல்வேலை முதலியவைகள் செய்வதை ஸ்திரீகளுக்குக் காட்டப்பட்டது.

மாலை 5 மணிக்கு ஸ்ரீமதி எஸ் சத்தியநாதன் M. A., அக்கிராசனம் வகிக்க, மிஸ் ஏ. இ. ஹெண்டர்சன் மரவேலை. தையல்வேலை, இவைகளைப்பற்றி உபந்நியசித்தார்.

28வ புதன்கிழமை மாலை 5 மணிக்கு மிஸ்டர் (A. Mayhew) ஏ. மேஹ்யூ அக்கிராசனம் வகிக்க (Miss. A. Arnold) மிஸ் ஏ. ஆர்னல்ட் கையெழுத்தைப்பற்றி உபந்நியசித்தார்.

29வ வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு டாக்டர் (J. R. Henderson) ஜே. ஆர். ஏண்டர்சன் அக்கிராசனம் வகிக்க, மிஸ்டர் பி. டி. ஸ்ரீனிவாசய்யங்கார் எம். ஏ. எல். டி. பாடசாலைகளில் பல பொருட்காட்சி சாலைகளிருக்கவேண்டுமென்கிற விஷயத்தைப்பற்றி உபந்நியசித்தார்.

30வ வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு காப்டன் (S. A. Christophers M.D.) எஸ். ஏ. கிருஸ்டபர்ஸ் அக்கிராசனம் வகிக்க, மிஸ்டர் பி. எஸ். சந்திரசேகர் எம். டி. பாடசாலைகளின் ஆரோக்கிய நிலைமையைப்பற்றி உபந்நியசித்தார்.

31௳ சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு ரெவரெண்டு (J. H. Maclean M.A.) ஜே. எச். மெக்லீன் எம்.ஏ., அக்கிராசனம் வகிக்க, (E.D. Allan) இ.டி. ஆல்லன் எலிமெண்டெரி பாடசாலைகளில் இருக்கவேண்டிய கருவிகள் என்ற விஷயத்தைப்பற்றியும், மிஸ்டர் ஏ.மேஹ்யூ (A. Mayhew) எலிமெண்டெரி பாடசாலையின் ஒழுங்கு குறைகளைப்பற்றியும், உபந்நியசித்தார்கள்.

இதன்பிறகு பிரயாண உபசாரமான ஒரு உபந்நியாசமும் செய்யப்பட்டது. காட்சிப்பொருள்களை அனுப்பினவர்களில் பரிசுபெற்றவர்களுடைய பெயர்களும், அவர்கள் அனுப்பியிருந்த பொருள்களின் யோக்கியதையும் தெரிவிக்கப்பட்டன.

டி. சி. வேங்கட்ரமண ஐயர்.




## மானஸை யென்கிற நாகமாதா.

ஓர்காலத்தில் வங்காளநாட்டிலுள்ள சம்பகநகரத்தில் சந்திரசேகரனென்னும் வணிகர் தலைவனொருவனிருந்தான். நாகங்களுக்கெல்லாம் தலைவியான மானஸாதேவிக்கு அவ்வணிகர்பெருமான் வந்தனைவழிபாடுகள் செய்தாலன்றி, இம்மண்ணுலகத்திலுள்ளோர் யாருமே அவ்விண்ணவர் தலைவியை வணங்குவது கூடாதென்று மஹாதேவன் கட்டளையிட்டிருந்தார்.

ஆதலினால், அத்தேவியார் முதலில் ஸாமோபாயத்தினால் தன்னாலியன்றமட்டும் அவனைத் தன்னை வணங்கும்படி வருந்திக் கேட்டும் அவன் இணங்கவில்லை. அவனைக் கிட்டிச்சென்று கெஞ்சிக் கேட்டபோதெல்லாம் அவன் அவளைக் கோல்கொண்டு நொய்யப்புடைத்தான். சந்திரசேகரனோவெனின், பரமசிவனிடத்து மாறாத காதல் கொண்டு அவனை அடிபணிகின்ற சிவக்கொழுந்து. நாகங்களுக்கெல்லாம் தலைவியான ஓர் தேவதையை, தேவதேவனாகிய பரமசிவனைப்

பணிகின்ற பக்தனொருவன் மலர்கொண்டு பூஜித்து அவளது அடிபணியவேண்டுமென்றால் அது ஸாத்தியமாகுமோ? இயல்பாகவே சந்திரசேகரனுக்கு நாகமாதாவைக் காணும்போதெல்லாங் கடுங்கோபமுண்டாய்க் கண்கள் சிவந்து அங்கம் பதறும்; அவளைக் கண்டவளவில் அவன் அவள்மேற் சீறிச் சினந்து ஏகதேசமாக வசிப் பழிப்பான். இவ்வாறு அவளுக்கும் அவனிடத்தில் பலமான பகையுண்டாயிற்று. ஆதலினால் அவனை அவள் எந்தவகையினாலாவது கொன்றுவிடுவதே நலமெனக் கருதினாள்.

சந்திரசேகரன் பட்டணத்திற்கு வெளியே தனக்கென்று அழகிய உத்தியானமொன்றை இந்திரனது நந்தனவனத்தைப்போலச் செய்வித்தான். அது பூலோகத்தில் ஸ்வர்க்கம்போலிருந்தது. அவன் அதற்காக லக்ஷம் லக்ஷமாகப் பணத்தை செலவிட்டான். மானஸாதேவி தன் பரிவார நாகங்களைக்கொண்டு அதிலிருந்த செடிகொடிகளையெல்லாம் தங்கள் விஷப்பற்கள் பட்டுப் பட்டுப்போகும்படி கடிக்கச்செய்ததனால் அந்தக் காலகோடிவிஷத்தின் வேகம் தாங்கமாட்டாமல் அவையனைத்தும் காய்ந்து தீய்ந்துபோயின. உடனே அதிலிருந்த காவலாளர்கள் அது ஸங்கதியைத் தங்கள் தலைவனிடம் முறையிட்டார்கள். சந்திரசேகரன் ஒன்றுக்கும் அஞ்சாமல் அங்குச்சென்று புன்னகையோடு ஓர் மந்திரத்தை உச்சரித்தமாத்திரத்தில் அவ்வழகிய பூஞ்சோலை முன்னிருந்ததிலும் பன்மடங்கு அதிகமாய்ச் செழித்துக் கொழிக்கத் தலைப்பட்டது.

சந்திரசேகரன் பரமசிவனது பக்தனாதல்பற்றி அவரதுஇன்னருளால் அவனுக்கு மந்திரசாஸ்திரத்தில் அவ்வளவு திறமையுண்டாயிற்று. அவன் கைபட்டால் இறந்தவர்கள் தூங்கி யெழுந்திருப்பவர்களைப்போலப் பிழைத்துக்கொள்ளுவார்கள்; பட்ட மரங்கள் பால்விட்டொளிரும். ஆதலினால் மானஸாதேவியின் பெருமை அவனது பேராற்றலுக்கு இணையாகவில்லை. அவனிடத்திலுள்ள மந்திரப்பிரபாவம் அவனைவிட்டு நீங்கினாலன்றி அவனை வெற்றிகொள்ளுவது ஸாத்தியப்படமாட்டாதென்று அவள்நிச்சயித்து, அதிரூபலாவண்ணியமுள்ள ஸர்வாங்கஸுந்தரியாய் அவன் முன்னேபோய்நின்றாள். ஸர்வஸங்கபரித்தியாகஞ் செய்துவிட்டு பிர்ம்மத்தியானஞ் செய்கின்ற யோகிகளுக்கும் பெண்களைக் கண்டளவில் புத்தி பிரமிக்கின்றதாதலால் அம்மடநல்லாளைக் கண்டு அவளது மோகவலையி லகப்பட்டுக்கொள்ள

வே, அவள் அவனிடத்தினின்று அந்தமந்திரசக்தியைத் தான் வாங்கிக்கொண்டு, அவன் தலைக்குநேரே ஆகாயத்தில் தன் நிஜரூபத்தோடு நின்றுகொண்டு "நான்தான் மானஸாதேவி; உன்னை இப்படி ஏமாற்றிவிட்டேன" என்று சொல்லிப் பளிச்சென்று மறைந்துபோனுள். சந்திரசேகரனுக்கு மந்திரசக்தி போய்விட்டதென்றாலும், அவன் அதற்காகச் சிறிதெனினும் மனஞ்சோராமல் தனக்கு உயிர்த்துணைவனும், மந்திரசாஸ்திரத்தில் தன்னிலும் மிக்க ஸாமர்த்தியமுடையவனுமான சங்கரபட்டன் என்னும் மந்திரவாதியைவரவழைத்து அவனுடைய உதவியைக்கொண்டு தனது சிங்காரவனத்தை முன்போலவே செழித்தோங்கி வளரச்செய்தான். மானஸாதேவி பேராற்றலுடையளாதலின் அவள் இதற்கும் அஞ்சாமல் ஏதோ தந்திரஞ்செய்து அந்த மந்திரவாதியைக் கொன்றுவிட்டாள். அவள் இந்தமட்டோடு விட்டுவிடாமல் தன்னிடமிருந்த காலகோடிஸர்ப்பங்களைக்கொண்டு அந்தச் சிங்காரவனத்தை முன்போலவே படுவிஷத்தினுல் எரித்துவிட்டதுமன்றி, சந்திரசேகரனுடைய புத்திரர்கள் அறுவரையும் ஒவ்வொருவனுகக் கடித்துக் கொன்றுவிடும்படியுஞ் செய்வித்தாள்.

இவற்றையெல்லாம் நேரில் பார்த்துக்கொண்டிருந்த அவன் மனையாளாகிய ஸனகாதேவி தன் பர்த்தாவைப்பார்த்து, "ஸ்வாமீ! தேவதைகளோடு எதிர்த்து நிற்பது நமக்குத் தகுமோ? இன்றேடு நாம் அவள் காலில் விழுந்து அவளுக்கு வந்தனைவழிபாடுகளைச் செய்வதே நமக்கு உசிதமாகும்" என்று மொழிந்தாள். அவன் வீட்டில் மருமகள் ஆறுபேரும் அதிபாலியத்திலேயே தங்கள் கணவன்மார்களை யிழந்துவிட்டு, வெள்ளை யுடுத்து, தங்கள் கைகளிற் பெய்திருந்த வளையல்களையெல்லாம் உடைத்தெறிந்துவிட்டு, நெற்றியிலிட்டிருந்த குங்குமத்தையும் இழந்து, இரவும் பகலுமாய் வீட்டில் அழுதவண்ணமா யிருந்தார்கள். இத்தனைக்கும் சந்திரசேகரன் சிறிதெனினும் மனஞ்சோரவில்லை. இதனுல் அவனுக்கு தீங்கின் பின் தீங்காய் நாளுக்குநாள் வீட்டில் ஒன்றின் பின் ஒன்றாய்ச் சங்கடங்கள் விளைவதைக் கண்ட அவனது நற்றோழர்களும் சுற்றத்தாரும் வந்து, தேவதையோடுபகைப்பது கூடாதென்று பலவாறுகச் சொல்லிப்பார்த்தும் அவன் கேட்கவில்லை. ஆயினும், தன்வீட்டில் ஸந்தோஷமில்லாமல் எல்லாம் துக்கபரம்பரையா யிருந்ததினுல், தான் ஒருமுறை கப்பல்யாத்திரை செய்தால் ஒருவாறு தன் துக்கம் நீங்குமென்றெண்ணி, ஏழு கப்பல்கள்

நிறைய விலைபெற்ற பல பண்டங்களை யேற்றிக்கொண்டு ஸிம்மளத் தீவிற்குப் பிரயாணப்பட்டான். இவன் இப்படிச் செய்ததானது மானஸாதேவிக்குத் தன்மகிமையைக்காட்டுதற்கேற்ற ஸமயமாயிற்று. அவளது இச்சையினால் கடலில் கொந்தளிப்புண்டாய் அந்தக் கப்பல் களெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாய் முழுகிவிட்டன. இறுதியில் அவனிருந்த கப்பலும் ஓர் ஊழிக்காற்றினால் முழுகிப்போகும் நிலைமைக்கு வந்துவிட்டது. ஆயினும் மானஸாதேவியைச்சந்திரசேகரன் வணங்கினாலன்றி அவளை இவ்வுலகத்தில் யாருமே வணங்காராதலால், அவளுக்கு அதையும் முழுகும்படிச் செய்ய மனமில்லை. ஆதலினால் அவள் தான் உட்கார்ந்திருந்த தாமரைமலரை யெடுத்தெறிந்தாள். அந்தப் பூ அவன் கிட்டச் சென்று மிதந்தது; அவன் அதன்மேல் நின்று கடலில் முழுகிப்போவதினின்றுந் தப்பிப்பிழைக்கும்படி யோஜித்தான்; கமலமலர் அந்தத் தேவியின்பேர்களுள் ஒன்றாயிருப்பதனால் அப்படிச் செய்வது தன்பெருமைக் கழகன்றாதலால் தன்னுயிரை விடுவதே சிறப்புடைத்தென்றெண்ணி அதனைத் தொடவுந்துணியாமல் சீயென்று நீக்கிவிட்டான். அந்த வேளையில் மானஸாதேவி அவன்முன்னே நின்று, "சந்திரசேகரா! நீ என்னை இப்பொழுதாயினும் வழிபடுவாயாயின், நான் உனக்கு முன்போலவே எல்லாவற்றையுங் கொடுப்பதுமன்றி, இறந்துபோன உன் புத்திரர்களையும் பிழைக்கச்செய்வேன்". என்று சொன்னாள். முக்கண்ணனாகிய மஹாதேவனது பாதகமலங்களை அர்ச்சிக்கின்ற பெருமைபெற்ற கைகளால் ஒற்றைக்கண்ணுடைய நாகமாதாவை வணங்குவது தனக்கு இழுக்குடைத்தென்று கண்டு அவன் அதற்குச் சம்மதிக்கவுமில்லை.

அதன்பின் எப்படியோ தெய்வபலத்தால் அவன் மூன்றுநாள் மட்டும்கடலில் தட்டுக்கெட்டிருந்து கரைவந்து சேர்ந்தான். தான் அவ்வாறு வந்திறங்கின இடமானது தனது நற்றோழனாகிய சந்திரகேதுவின் அழகிய நகரமாயிருந்தது. அவனுக்குக் கட்டத்துணியுமில்லாதிருந்ததினால், அந்நகரத்தின் மயானத்திற் சென்று அங்கே கிடைத்த கந்தையை யெடுத்துக்கொண்டு, அங்கிருந்தபடியே நேரே அரசனது மாளிகை நோக்கிச்சென்றான். அவ்வரசன் அவனைக் கண்டமாத்திரத்தில் அவனுக்குவேண்டிய உபசாரங்களையெல்லாஞ் செய்து, அன்னபானங்களையளித்து, வெகு ஆதரவாயிருந்தான்.

ஆயினும் அவர்கள் உண்ணப்போகிறவேளையில், சந்திரகேது அவனை நோக்கி,“நீர் இப்படிதேவதைகளைப்பகைத்துக்கொண்டு வீணேபல துன்பங்களை அனுபவிப்பது உமது பெருமைக்கழகன்று” என்று சொல்லக் கேட்டதும், அவனுக்குச் சந்திரகேது மானஸாதேவியை வழிபடுகின்றவனென்பது நினைவிற்கு வந்து, அவனிட்ட அன்னத்தையும் உண்ணாமல், அவன் தனக்குக்கொடுத்த ஆடை ஆபரணங்களையெல்லாம் அவனிடத்தே கொடுத்துவிட்டுத் தான் அதற்கு முன்னே அணிந்திருந்த கந்தைத்துணியோடு பட்டினியோடே திரும்பி வந்துவிட்டான்; அவனும் இந்த முறட்டனோடு எதிர்வாதஞ் செய்து தானும் முறண்டி நிற்பதிற்பயனில்லையென்று கண்டு அவன்போக்கின்படியே விட்டுவிட்டான்.

பின்பு அவன் வீட்டுக்கு வீடு பிச்சையெடுத்து, தனக்குப்போதுமான பிச்சையகப்பட்டதும் நேரே ஆற்றங்கரைக்குச் சென்று அதை ஓர் பக்கத்தில் வைத்துவிட்டு நீராடச்சென்றான். அந்த வேளையில் மானஸாதேவி எலிகளை அங்கே அனுப்ப அவைகள் அரிசியையெல்லாந் தின்றுவிட்டன; அரிசியை எலி தின்றுவிட்டதினால் அவன் ஆற்றங்கரையில் கிடந்த ஓர் வாழைப்பழத்தைத் தின்று தண்ணீரைக்குடித்து ஒருவாறு தன் பசியையாற்றிக்கொண்டான். பின்புஅவன்ஓர்அந்தணனிடம்வேலையாளாக அமர்ந்துகொண்டான். அந்தப்பிராமணன் அவனைத்தன்களத்தில் வைத்து, நெல்லைக்குவிக்கும்படியேவினான். அங்கும் மானஸாதேவியின் கொடுமையால் அவன் புத்திகலங்கி, நெல்லுக்கும் பதருக்கும் பேதந்தெரியாமல் இரண்டையும் ஒன்றாகக் கலந்தானாகையால் அந்தப்பிராமணன் கோவித்து அவனை வேலை பார்க்கவேண்டாமென்று போகச்சொல்லிவிட்டான். அதன் பின்பு அவன் ஒரு விறகுகட்டுக்காரனோடு சேர்ந்துகொண்டு அருகேயிருந்த மலைக்குச்சென்று விறகு பொருக்கினான்; காட்டிற்குச்சென்ற சந்திரசேகரன் அங்குள்ள சந்தனக்கட்டைகளைத் தேர்ந்தெடுத்துப் பெருங்கட்டாய்க் கட்டிக்கொண்டு வந்தான். மானஸாதேவி பொறாமைகொண்டு, அநுமாரை ஏவிவிட அவர் அந்தக் கட்டின் கழிகளில் ஒன்றைத்தொட, அந்தக்கட்டு இடியாய்க் கனத்ததனால், அவன் அதை அங்கேதானே வைத்துவிட்டு வெறுங்கையோடு வந்துவிடவேண்டியதாயிற்று. இவ்வாறு தனக்கு ஒன்றின்மேலொன்றாகத் துன்பங்களுண்டாவதைக்கண்டு மானஸா

தேவியைத்திட்டினன். அந்த வேளையில், அங்கே வேடனால் வைக்கப்பட்டிருந்த ஓர்வலையினருகில் தானியத்தைக்கண்டுஆசைகொண்டு அந்த வலையில் சிக்கிக்கொள்ளும்படி வந்திருந்த பறவைகள் அவன் அடியோசையைக் கேட்டவுடனே பறந்துபோய் விட்டதனால், அந்தவேடன் ஓடிவந்து அவனைவாயில்வந்தபடி வைது நொய்யப் புடைத்தான். இத்தனை சங்கடங்களை யனுபவித்தும் இறுதியில் அவன்தன்மனையாளி ஸனகாதேவியின் மனங்குளிரச் சம்பக நகரம் போய்ச்சேர்ந்தான்.

அங்கே அவனுக்கு ஆண்டவனருளால் லக்ஷ்மிகுமாரனென்று ஓர் குழந்தையுண்டானன். அந்தக்குழந்தை பிறந்தவுடன் அவனது ஆயுர்பாவ முதலியவற்றை அறிந்துகொள்ளுதற்பொருட்டு ரகஸ்யத்தில் ஜோஸியர்களைக்கொண்டு ஜாதகங்கணித்துப் பார்த்ததில், அவனுக்குக்கல்யாணமான முதல்நாள்ராத்திரியிலேயே, ஸர்ப்பதஷ்டத்தால் அவன் மரணமடைவானென்று அவர்களெல்லோருமே ஏகோபித்துச்சொன்னார்கள். அவனுக்கு அன்றுமுதல் இப்பூலோக வாழ்க்கையில் பற்றற்றுப்போயிற்று; அதுமுதல் அவன் இரவும்பகலும் ஏகாக்கிரசித்தனாய் மஹாதேவனைத் தியானஞ்செய்துகொண்டிருந்தான். லக்ஷ்மிகுமாரன் மன்மதனைப்போல அதிஸௌந்தரமூர்த்தியாய் வளர்ந்து கல்யாணம் பண்ணத்தக்க பருவமடைய, அவன்வீட்டுப்புரோகிதரான ஜநார்த்தனன் என்பவர் அவனழகுக்கேற்றபெண்ணைக்காணும்படி எங்கெங்கும் போய்ப்பார்த்தும்அகப்படாமல், கடைசியாய் நிசுளாபுரி நகரத்திலுள்ள வணிகர் குலத்திலகனான ஸகதேவன் மகளாகிய வகுளையென்னுங் கட்டழகியைக்கண்டு, அவளே அவனுக்கேற்ற மனையாளாவாளென்று நிச்சயித்தான். ரதிதேவியென்றால் அவளுக்கேதகும்; குயில்போல இனிதாகப் பாடுவாள்; அவள் கூந்தலை அவிழ்த்தால் அது படிபடியாய் அவளது கணுக்காலில் வந்திடிக்கும்; மானேக்கினள்; பிடியிடையாள்; அவளது வாள்முகம் களங்கமற்ற சந்திரனையும்பழிக்கும்; ஸர்வாங்க ஸௌந்தரி; நிர்த்திய கீதவாத்தியங்களில் அந்தச்சம்பக நகரத்தில் அவளின் மிக்கார் ஒருவருமில்லை.

சந்திரசேகரனுக்குத்தன் மகனுக்குக்கல்யாணஞ்செய்த அன்றே அவன் மரித்துவிடுவானென்று தெரியுமென்றாலும், தன்மனைவியின்

வேண்டுகோளால் ஒருவாறு தானும் அதற்குச்சம்மதிக்கவேண்டியதாயிற்று. அவன் தன் அருமைமகன் பத்திரமாயிருக்கவேண்டுமென்றே அருகேயுள்ள ஸனாதனம் என்னும்மலைமேல், ஈ எறும்பு கூட நுழைந்து செல்லாதிருக்கும்படி காப்புள்ள அழியாத உருக்குக் கோட்டையொன்றைக் கட்டுவித்தான். அதனுள்ளே சிறு பாம்பும் புகுந்து செல்லாதிருக்கும்படி அங்கெங்கும் மயில்களையும், கீரிப்பிள்ளைகளையுந்திரியவிட்டிருந்தான். உருவின கத்தியும் கையுமாகப் பலவீரர்கள் அதைச்சுற்றிக்காத்திருந்தார்கள். அங்கங்கே விஷத்தைபோக்கத்தக்க மூலிகைகளெல்லாம் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்ததனால், விஷஜந்துக்கள் அந்தக்காற்றுப்பட்டவுடனே இறந்தே போகும்படியிருந்தது. அன்றியும், விஷவைத்தியர்களும், மந்திரவாதிகளும் எங்குமிருந்து அங்கு வந்து நிறைந்திருந்தார்கள்.

மானஸாதேவி அங்குச்சென்று, அதைக்கட்டின சிற்பியைக்கண்டு, அவனை அதில் ஒருமயிர் நுழையும்படியான ஓர்சிறுதுவாரத்தைமட்டும் விட்டுவைக்கும்படி அவனோடுசொல்ல, அவன் அவையெல்லாம் முன்பே முடிந்துபோயிற்றென்றும், அதற்காகத்தான் அவ்வணிகனிடமிருந்துவேண்டியமட்டுந்திரவியத்தை பெற்றிருப்பதாயும், அப்படிக்குத்தான்செய்தால் அதுயஜமானதுரோகமாகுமென்று சொல்லியும் அவ்ள் கேளாமல், அவனையும் அவன் வீட்டாரெல்லாரையும் தான் கொன்றுவிடுவதாக அச்சமுண்டாக்கியதனால், அவன் தீராப்பொறியேயென்று, அதைத்தான் இன்னொருமுறை நன்றாய்ச்சோதித்துப் பார்க்கவேண்டுமென்ற வியாஜத்தினால் அங்குச்சென்று, நுண்ணிய ஆயுதங்களைக்கொண்டு அவ்வாறே ஓர் மயிர்மாத்திரம் நுழையும்படியான சிறுதுளையைச்செய்து, அதன்வாயில் கரிப்பொடியை வைத்தடைத்து மூடிவிட்டுவந்தான்.

கல்யாணஞ் செய்யப்போகும்போதே, முதலில் அபசகுனம்போல மணமகள் தன் தலையிலணிந்திருந்த மணிமுடி தவறிக்கீழே விழுந்தது. பின்பு கல்யாணப்பந்தலில் எல்லாருமாக வீற்றிருக்கையில் கல்யாணப்பிள்ளையின் தலைக்கு நேரே விரித்து வைக்கப்பட்டிருந்த வெள்ளவட்டக்குடையின் வெள்ளிக்காம்பு இருந்தாற்போலிருந்து குருக்கே ஒடிந்துபோய்க் கீழேவீழ்ந்து இரண்டாமுறை அபசகுனமாயிற்று.

மணமகளான வகுளாதேவி மணக்கோலத்தோடு தன் கணவனிடஞ்செல்லுகையில், அவள், தன் நெற்றியிலணிந்திருந்த மாங்கல்ய

சூசகமான குங்குமப்பொட்டு இருந்தாற்போலிருந்து அவள்கைபட்டு அமங்களமாய் அழிந்துபோய் மூன்றுமுறையும் அபசகுனமாயிற்று. இவ்வாறு கல்யாணம் முற்றுப்பெற்றதும், சந்திரசேகரன் தன்மகனையும், மருமகளையும் பத்திரமாயழைத்துக்கொண்டு போய் அன்று ராத்திரி அவர்களை அந்த உருக்குமாளிகைக்குள்ளே விட்டுத்தான் வெளியே நின்று ஜாகரூகனுகப் பரிவாரத்தோடு காத்திருந்தான்.

அன்று ஒருநாள் ராத்திரிக்குமட்டும் அவனுக்கு ஆபத்தில்லாதிருக்கும்பக்ஷத்தில், அப்புறம் அவனுக்கு நூறுவயதளவும் பூர்ணயுசு என்றும், பின்பு அவன் தலையில் கல்லைத்தூக்கிப் போட்டாலுஞ்சாகானென்றும் தெய்வஞ்யர்கள் அவனோடு உறுதியாய்ச் சொல்லியிருந்தார்கள்.

அந்த மாளிகைக்குள்ளே அவ்விருவர்மட்டுமே யிருந்தார்கள். வகுளாதேவி தனது காதற்கணவனது வடிவழகைக் கண்டு அங்கம் பூரித்து அன்று ராத்திரி நெடுநேரமளவும் இமைக்கொட்டாதிருந்து அவனோடுரையாடிக்கொண்டிருந்தாள்; அவ்வாறே லக்ஷ்மிகுமாரனும் அவளோடு இனிது பாராட்டிப் பேரானந்தங்கொண்டான். அவன் அன்றுமுழுவதும் கலியாணத்திற்செய்யவேண்டிய விருதங்களையெல்லாஞ் செய்த இளைப்பினுல் சோர்ந்து துயின்றான். வகுளாதேவிக்கு தெய்வச்செயலாய் இவ்வாறான காதற்கொழுநன் வாய்த்ததனுல், அவள் அவனது அழகைப் பார்த்துக்கொண்டே விழித்திருந்தாள். அவன் சற்றுத் தூங்கி யெழுந்ததும் அவளை நோக்கி, "என் கண்மணியே! எனக்குப் பசியாயிருக்கின்றதனுல், ஏதேனுஞ் சிறிது உண்டி செய்துகொடு" என, அவள் அங்கெங்குந்தேடியும் ஒன்றையுங்காணுமல், நோன்புக்கென்றுகொண்டுவரப்பட்டிருந்த பண்டங்களில் மூன்றுதேங்காய்களையெடுத்து அடுப்பாகக்கூட்டி, சிறுமட்கலயமொன்றை அதின்மேல் வைத்து, ஒரு தேங்காயின் இனிய தண்ணீரை யெடுத்து அதை உலையமுதாக வார்த்து, அங்கேசிந்திக்கிடந்த அக்ஷதையை அதிவிட்டு அமுதாக்கப்புகுந்தாள், அங்கிருந்த பூம்பட்டாடையொன்றையெடுத்துக்கிழித்துக் குத்துவிள்க்கு நெய்யிற்றோய்த்து விளக்கிலேற்றி விறகாவெரித்து அவனுக்கு இனிய உணவை, பண்டொருகால் அன்னபூரணையென்னும் பதிவிருதாசிரோமணி தன் கணவனுருக்கு அன்னமாக்கியவாறே இவளும் இனிதாகச் சமைத்துக்கொண்டிருந்தாள்.

மானஸாதேவி அக்கணமே அங்கேபோய்த் தன்னிடமிருந்த ஸர்ப்பங்களையெல்லாமழைத்து அவனைக் கடித்துக் கொன்றுவிட்டு

வரும்படிச்சொல்ல, அது ஸாத்தியமன்றுதலால், எல்லாப் பாம்புகளும் மாட்டோமென்று சொல்லிவிட்டன. கடைசியாய்க் கார்க்கோடகன்மட்டும் அவள் சொன்னபடியே தான்செய்துவிட்டுவருவதாகத் துணிந்து ஒப்புக் கொண்டான். வகுளாதேவி விழித்துக்கொண்டிருக்கும் போதுதானே அந்தஉருக்குமதளில் பளிச்சென்று ஒரு சிறுதுவாரமுண்டாய், அதன் வழியாக ஒரு நாகம் உள்ளே நுழைவதைக் கண்டாள். அவ்வாறு அங்கு வந்த பாம்பைக்கண்டவளவில், ஓர் கிண்ணத்திற் பாலும் பழமும் பெய்துவைக்க, அதனை அப்பாம்பு குடிக்கும்போதே ஓர் தங்க இடுக்கியினால் அதைப்பிடித்து வைத்துவிட்டுச் சமயலாவதைப் பார்த்துக்கொண்டிருக்கையில், சற்று நேரத்திற்குள்ளெல்லாம் மற்றோர் கருநாகம் வந்தது; அவள் அதையும் அவ்வாறே பிடித்தாள்; பின்பு காலதந்தன் வந்தான்; அவனையும் அவள் அவ்வாறே பிடித்துவிட்டாள்: அதன்பின்பு ஒரு பாம்பும் அங்கு வரவில்லை. இதற்குள்ளே அன்னமும் பக்குவமானபடியால், அவள் தன் கணவனை உண்ணவெழுப்பினாள். அவன் அயர்ந்து தூங்கினதினால் எழுந்திருக்கவில்லை.

இவ்வாறு அன்று முழுவதும் தானுந்தன்கணவனோடிருந்துவிரதத்தை அநுஷ்டித்ததினாலும், ராத்திரிமுழுவதுமே விழித்திருந்தமையாலும் அவளுக்குந்தன்னையறியாமற்றூக்கம்வந்துவிடவே, அவள் அந்தச் சிறு துவாரத்தைப் பார்த்துக்கொண்டபடியே யிருந்தாள்; சட்டுண்டிருந்த அம்மூன்று ஸர்ப்பங்களும் அசைக்கவுமாட்டாமல் அங்குத்தானே விழுந்துகிடந்ததையுங் கண்டாள். அதிக சிரமத்தால் அவளுக்கும் தன்னையறியாமல் சற்றே தூக்கம் வந்துவிட்டது; அப்பொழுது நடுநிசி; பேயுஞ்சோர்ந்துறங்குங்காலமாயிற்று; அவள்தன் காதலனோடு தானுஞ்சற்றே படுத்துத் தூங்கினாள். உடனே கார்க்கோடகன் வந்தான்; அவன் இதற்கு முன்னே வணிகனது பூங்காவனத்தையும், மக்களையுங் கடித்தழித்துக் கைதேர்ந்தவன்; அவன் அங்குச்சென்ற மாத்திரத்தில், வணிகன் மகனின் காற் கட்டைவிரலிற் கடிக்க, அவன் பளிச்சென்றெழுந்து "ஸஹதேவன் மகளே! நீ தூங்கிவிட்டாயோ? என்னை ஸர்ப்பந்தீண்டியதனால் நான் செத்தேன்" என்று சொன்னான். உடனே வகுளாதேவி விழித்தெழுந்து பார்க்கையில், அந்தப்பாம்பு வந்தவழியே வெளியேநுழைந்து வேகமாய்ப்போகிறதைக்கண்டாள். பின்னர்மறுநாள் விடிந்தெழுந்திருக்

கையில், உள்ளே அழுகுரல் கேட்டதைக்கண்டு எல்லோருந் திகைத்து உள்ளே நுழைந்து பார்க்கையில், மணமகன் மரித்து, மணக்கோலம் பிணக்கோலமாய், வகுளாதேவி கண்ணுங்கண்ணீருமாய் வாய்விட்டலறுவதையுங் காணவே, எல்லோரும் துன்பக்கடலிலாழ்ந்தார்கள். பிள்ளைவீட்டாரெல்லோரும், "அடி பெரும்பாவி! உன்னைத்தொட்டுத்தாலிகட்டியதனாலன்றோ நாங்கள் எங்கள்புதல்வனை இப்படிக்கு இழந்துவிட்டோம்" என்று அவளைப்பலவாறாக இடித்தேசினார்கள்; அவளுக்கு அவர்கள் சொன்னதில் ஒன்றுமே காதிற்படவில்லை. அவன்மனோரதப்படி தான், லஜ்ஜைப்பட்டு அவனைக் கட்டியணைத்துக்கொள்ளாமலும், அவன் கேட்டபடி பசித்தெழுந்த வேளையில் உண்டியுதவாததமே அவளுக்கு பெருந்துக்கமாயிற்று.

விடிந்தபின்னர் லக்ஷ்மிகுமாரனுக்கு ஸம்ஸ்காரஞ் செய்தற்பொருட்டு அவனை இடுகாட்டிற்குக் கொண்டுபோய்விட்டார்கள். வகுளாதேவிக்குத்தன்கணவனுடைய தேசத்தைத் தகனஞ்செய்யச் சிறிதும் சம்மதமே கிடையாது. அன்றியும், பாம்புகடியினால் இறப்பவர்கள் விஷவேகந் தணிந்தபின்னர் ஒவ்வோர் ஸமயங்களில் மீண்டும் உயிர்பெறுவதுமுண்டாதல்பற்றி அந்நாட்டில் அவர்களை வாழைமரத்தால் தெப்பங்கட்டி அதில் வைத்து ஆற்றின் வெள்ளத்தில் விட்டுவிடுவதும் வழக்கமாதலால், அப்படியே லக்ஷ்மிகுமாரனையுங் கட்டிவிடவேண்டியதாயிற்று; அப்படிச் செய்ததில், எத்தனையோ பேர் விஷவைத்தியர்களாலும், மாந்திரீகர்களாலும் மீண்டும் உயிர்பெற்றதுமுண்டு. அவ்வாறு செய்ததில், வகுளாதேவி தானும் அவனோடு அந்தத் தெப்பத்தின்மீதேறிக்கொண்டாள்; அவன் பிழைக்குமளவும் தான் அவனை விடுவதில்லையென்பதை உறுதியாய்க் கொண்டாளாதலின், யார் என்ன சொல்லியுங்கேளாமலும், ஒருவர் பழிக்கும் பயப்படாமலுமிருந்தாள். அவள் மாமியாரே நேரிற்சென்று "அம்மா! இதென்ன பயித்தியமுனக்கு! வேண்டாமடி என்கண்ணே! நாம் போவோம் வா" என்று வருந்தியழைத்ததையும் அவள் கேளாமலே "அத்தே! தாங்கள் இப்படி அழவேண்டாம்; ஸனாதன மலைமேலுள்ள உருக்குமாளிகையில் அன்னம் பக்குவமாயிருக்கிறது; அதனருகே விளக்கெரிகின்றது; தாங்கள் இக்கணமே அங்குச் சென்று அதன் கதவைச் சார்த்தவேண்டும்; அவ்வன்னம் எவ்வளவு காலமளவும் கெட்டுவிடாமலும், அந்தத்தீபம் அணைந்துபோகாமலுமி

மிருக்குமோ அந்தமட்டும் நான் என் கணவனுரை உயிர்ப்பிட்டுவிப்பே னென்றுதுணியலாம்" என்ருள். இன்னும் அங்கு வந்தவர்களில்யார் என்ன சொல்லியும் அவள் அவற்றைச் செவிக்கொள்ளவுமில்லை.

இது செய்தி யெங்கும்பரவவே அவளோடுகூடப்பிறந்த ஸகோ தரர்கள் ஆறுபேரும் ஆற்றில் அவளைக்குருக்கிட்டு, "எங்கள் செல்வ மே! எங்கள் அறுவரோடு பிறந்தவள் நீ ஒருத்தியேயன்ருே? உன்னை விட்டு நாங்கள் பிரிந்திருக்க வல்லோமோ? இறந்தவன் பிழைப்பது முண்டோ? நமது அன்னையும் பிதாவும் அபரவயதில் உன்னையிழந் துழல்வது உனக்கழகோ? வேண்டாம், வேண்டாம்" என்று மறுத் தும் அவள் கேளாமையால், அவர்களும் துக்காக்கிராந்தர்களாய் அவளை விட்டுப்போனுர்கள். அவளது வடிவழகைக்கண்ட பல துஷ்டர்கள் அவளை பலாத்காரமாய்க் கொண்டுபோகும்படி பார்த் தார்களென்ருலும், எவ்வுயிரையுங்காக்கின்ற ஈசனருளால் அவள் ஒருவர் கையிலுமகப்படவில்லை. பின்பு நாளாக நாளாக அந்தத் தேகம் அழுகி நாற்றமெடுக்கத் தலைப்பட்டது. ஆயினும் அவள் பஞ்சபூதங்களின் விகாரத்தை நன்கறிந்த விதுஷியாதலின், எல் லாம் இறைவன் செயலென்றுகருதி ஒன்றுக்குமே அஞ்சாத நெஞ்சி னையுடையவளானுள். அவள் கங்காநதியில் செல்லும்போது அங்கி ருந்தவர்களெல்லோரும் என்ன தான் சொன்னதும், இரவில் கடுங் காற்றடித்ததும், முதலைகள் அவளைப் பிடித்துத்தின்னப்பார்த்ததும், நாய்நரிகள் கரையோரத்திலிருந்து கடித்து விழுங்கப்பார்த்ததும் அவளுக்கு லக்ஷியமாயில்லை. சிற்சிலவேளைகளில் ஆகாயத்தில் துர்த் தேவதைகள் வந்து பயமுறுத்தினதுண்டு; சில தேவதைகள் வேறு ஸுகங்களைக்காட்டித் தன் கணவனை விட்டுவிடும்படித் தூண்டியது முண்டு. அவ்வுத்தமி இளைத்து ஈர்க்காயிருந்தும், தன் பதியைப் பிழைப்பிப்பதிலேயே நாட்டமுடையவளானுள். மானஸாதேவியின் அருளைப்பெற்ருலன்றித் தன்னுடைய நாதனைப் பிழைப்பிப்பது அஸாத்தியமென்று அவள் நிச்சயித்து அஹோராத்திரமாய் அவளை தியானித்து வந்தாள். இவ்வாறு ஆறுமாதகாலமாயிற்று.

அவள் ஒருநாட்காலையில் கங்கைக்கரையோரமாகச் செல்லு கையில், அங்கே இந்திரலோகத்து வண்ணுத்தியான நீளை என்பவள், தேவதைகளின் ஆடைகளை வெளுத்துக்கொண்டிருந்தாள். அவளைக்காணும்போதே அவள் தெய்வப்பெண்ணென்றறிந்தாள். அவள்

தோய்த்துக்கொண்டிருக்கும்போதே அவளது பெண்குழந்தை அவளைத் தோய்க்கவொட்டாதபடி வருத்தியதனால் அவள் அந்தக் குழந்தையை ஓங்கி அறைந்து கொன்று தன்னருகே வைத்திருந்தாள். அதைக்கண்ணுற்ற வகுளை அதைப்பற்றி அவளோடு ஒன்றுஞ்சொல்லாமலே அந்திப்பொழுதளவும் அங்கே தானே காத்திருந்தாள். சூரியன் அஸ்தமித்தவுடனே அவள் தன் குழந்தைமேற் கங்காஜலத்தை யெடுத்துத் தெளித்தவுடனே அதுபிழைத்துக்கொள்ள, அதையும் தன் மூட்டையையுமெடுத்துக்கொண்டு அவள் போவதைக் கண்டு அவள் காலில்வீழ்ந்து "தாயே! நீயே எனக்குச்சரணமென்று கதறியழுதாள். அவள் அவளுக்கு அபயமளித்து அவளை தேவஸபைக்கு அழைத்துக்கொண்டுபோனாள்.

வகுளாதேவி தேவஸபைக்குச் சென்று அவர்களுடைய ஏவலால் நாட்டியமாடுவதைக் காணவே, தேவதைகளெல்லோருமே ஒன்றுகூடி மானஸாதேவியை வேண்ட, அவள் வகுளையை நோக்கி, "நீ உன் மாமனாரோடு என்னை வழிபடும்படி சொல்வது கூடுமோ" என, அவளும் "நல்லது அப்படியேசெய்கிறேன்" என்றாள். உடனே மானஸாதேவி லக்ஷ்மிகுமாரனைப் பிழைப்பித்ததுமன்றி, அவளை நோக்கி, "தாயே! நீ உனக்கு இன்னும் வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்ளலாமென, அவள், "அம்மணி! தாங்கள் என்னுடைய நாத்திமார்கள் அறுவருக்கும் மாங்கல்யபிக்ஷை தரவேண்டும்" என்றாள். அதற்கும் அவள் "அப்படியேதந்தேன்" என்று சொன்னதோடமட்டுமிராமல், கடலில் ஆழ்ந்துபோன அந்த எழு கப்பல்களையும், அந்தப்படியே நிதிக்குவையோடு வெளியே கொண்டுவந்து சேர்த்து, அந்தப்பூங்காவனத்தையும் பழயபடியே செழித்தோங்கி வளரும்படியுஞ் செய்துவிட்டாள். சங்கரபட்டனும் பிழைத்தெழுந்தான்.

பின்பு பரமானந்தையாய்த் தன் கணவனோடு அந்த எழு கப்பல்களுக்குந் தலைவியாய்த் தான் கோலாகலமாய்த் திரும்பிவரும் வழியில், நடந்த விர்த்தாந்தங்களையெல்லாம் அவள் அவனோடு சொல்லவே அவனுக்கு அவளைக்கண்டு ஒருடம்பு ஈருடம்பாய்ப் பூரித்து அவளைக்கட்டியணைத்து ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தான்.

வரும் வழியில் வகுளைக்குத் தன் தாய் தந்தையர்களையும், ஸகோதரர்களையும் பார்த்துவிட்டுப்போகவேண்டுமென்ற ஆசையினால் தன் கணவனின் நியமனங்கேட்க, அவனும் அவளும் யோகியையும், யோகினியையும் போல வேஷந்தரித்து அங்கே சென்றார்கள்.

இவ்வாறு இருவரும் துறவிகள்போல மாறுருவங்கொண்டு ஸஹதேவன் வீட்டிற்குச் சென்றார்கள். லக்ஷ்மிகுமாரன் கையும் கமண்டலுவுமாய்க் உடம்பு முழுமையும் விபூதியைத் தரித்துக் கழுத்தில் ருத்திராக்ஷமாலைகளையணிந்துகொண்டும், வகுளாதேவி காவிவஸ்திரந்தரித்து, காதிற்குண்டலமணிந்து காஷாய உடையும் சடைமுடியுமாயும் நிசுளாபுரிக்குச் சென்றார்கள். அவர்கள் நேரே தலைவாயிலின் வழியே அவ்வீட்டிற்குள்ளே புகாமல், கொல்லை வாசலின் வழியாகச் சென்றார்கள். அப்பொழுது தான் ஹரிதாஸன் மனைவியான அமலை சமைத்துவிட்டுப் பாகசாலையினின்றும், தனது கணவனுக்கும் மக்களுக்கும் அன்னம் பரிமாறுதற்கென்று பொற்றட்டில் அன்னத்தை யெடுத்துக்கொண்டு வந்தாள். அவள் அந்தத் தவப்பெண்ணைக்கண்டளவில், "அம்மா! நீ என் மகளைப்போலவேயிருக்கின்றாயே" என்று ஆவலோடு ஓட்டமாக ஓடிவந்து அவளைத்தன் மார்போடணைத்து இருகக்கட்டி முத்தமிட்டாள். அவளுக்குத் தன் நினைவு வந்தவுடன், வகுளை தன் தாயை நோக்கி, "அன்னாய்! நான் தான் உமது புதல்வி; என்னோடு இங்கே நிற்கின்றவர் உமது மருமகனார். தெய்வாதீனமாய் இவர் உயிர்த்தெழுந்தார்" என்று மாஞ்சோலையில் தீங்குயில் கூவுவதுபோல மொழிந்தாள்.

இந்த அற்புதத்தைக் கேட்கவே ஊரெல்லாம் வந்து ஒன்றாய்க்கூடி ஆச்சரியப்பட்டது. அங்கே அவர்கள் எவ்வளவு தான்வருந்தியும் அன்றைக்குங்கூட அங்கேதங்கியிருக்கப்பொறாமல் விடைபெற்றுக்கொண்டு கப்பலேறிச் சம்பக நகரத்துக்குச் சென்றார்கள். அவள் அங்கும், வாசல்பெருக்குகின்றவளைப்போல் மாறுவேடம் பூண்டு சென்றாள். அவள் இந்திரலோகத்தினின்று வரும்போதே, தன் மாமனார், மாமியார், மைத்துனர், நாத்திமார் ஆகிய எல்லோர் உருவங்களையும் தேவதைகளைக்கொண்டு நவரத்தினங்களால் அவரவர்களுக்குரிய நிறத்தோடு வெகு விசித்திரமாய் ஒரு விசிறியிலே அமைப்பித்து அதைத் தன் கையில் பிடித்துக்கொண்டு, கையும் விசிறியுமாய்க்கரையிறங்கினாள். அந்த வேளையில் விதவைகளாயிருந்த அவளுடைய நாத்திமார்கள் அறுவரும் தண்ணீர் மொண்டுகொண்டுபோதற்பொருட்டு அங்கேவர, அவர்கள் இலக்குமிதேவியாரைப் போன்றிருக்கின்ற அந்த வாசற்பெருக்கியையும், அவள் கையில் வைத்திருந்த ரத்னகசிதமான விசிறியில் தங்கள் குடும்பத்தார் எல்லோருமே

ஒன்றுகூடியிருப்பதுபோல அதிரமணீயமாய் அமைக்கப்பட்டிருப்பதையுங்கண்டு ஆச்சரியப்பட்டு, "அம்மா! நீ யார்? இந்த விசிரியை வைத்திருப்பதேன்" என்று வினவ, அவள், "அம்மைமீர்! என் பேர் வகுளை; இவர்தான் என்கணவனார் லக்ஷ்மிகுமாரன்; இவரது தந்தை சந்திரசேகரர்; என் தந்தை ஸஹதேவன்; இந்தவிசிரியை நான்விற்கக்கொண்டுவீற்றிருக்கிறேன்; வேண்டுமானால் இதன் விலை லக்ஷம் ரூபாய்" என்றாள். இந்த ஆச்சரியத்தைக் கண்டதும் அவர்களெல்லோரும் வீட்டிற்குச்சென்று, தங்கள்மாமியாரான ஸனகாதேவியாரோடு சொல்லவே, அவளும் அக்கணமே அந்த உருக்கு மாளிகைக்குச்சென்றுபார்க்கையில், அங்கு வகுளாதேவி தன்கணவன் உண்ணுதற்கென்று சமைத்துவைத்திருந்த அன்னமானது அப்பொழுதுதான்சமைத்து வைக்கப்பட்டதுபோலச் சிறிதும்கெட்டுப்போகாமலிருப்பதையும், அந்தத்தூண்டாவிளக்குச் சுடரொளி விட்டெரிவதையுங் கண்டு களித்து அங்கிருந்தபடியே அதிவேகமாய் ஆற்றங்கரைக்கோடிவந்தாள். அவ்விடம் அங்குவந்திறங்கியிருந்த அப்பெண்ணணங்கின் வடிவழகைக்கண்டு போனந்தங்கொண்டு ஓவென்றலற, அருகே நின்ற வகுளாதேவி, "தாயே! தாங்கள் இதுபொழுது அழுவதுநன்றன்று; தங்களுடைய மக்களெல்லோரையும் இங்கே பாருங்கள்; இத்தனைபாக்கியமும் நமக்கு மானஸாதேவியாரின் இன்னருளால் கிடைத்தது; எனது மாமனார் அந்தத் தேவியாரை அடிபணிந்து உபசரித்தாலன்றி நாம் சம்பக நகருக்குள்ளேசெல்வது நியாயமன்று; ஆனதினாலேதான் நான் உங்களெல்லோரையும் இந்த விடத்திற்கே வந்துசேரும்படித் தந்திரமாய் வரவழைத்தேன்" என்றாள்.

அவளது மைந்தர் எழுபேர்களும் அவள் மனங்குளிர எதிரே நின்றார்கள். இத்தனையும் வகுளாதேவியின் தவத்தின் பெருமையாலாயிற்று; சந்திரசேகரனும் தன் மருமகள் புரிந்த தவப்பயனால் இவ்வாறு தன் குடும்பமுழுவதுமே க்ஷேமமடைந்ததைக்கண்டுகளித்து, அவளதுமனங்கோணாதிருத்தற்பொருட்டுத்தானுமே அவளிஷ்டத்திற்கு இணங்கி மானஸா தேவியை பூஜை செய்ய சம்மதித்தான். அந்தத்தேவியும் அவன் செய்த பூசனையையெல்லாமேற்றுக்கொண்டதுமன்றி, அவனுக்கு அளவின் மிக்க ஸம்பத்தையுமளித்துக் காப்பாற்றினாள்.

அன்பில் ஸ்ரீவேங்கடாசாரியார்.